ஏப்ரல் 29, 2001 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI சுடர் ஒளி (in Sinhala script) வார மலர்



இந்திய ரொக்கெட் சாதனை
உலகுக்கு பெரும் வேதனை!

## நோர்வேக்கு 'நோ'
## பேச்சு 'நோ கோ'
## அடுத்த 'சீன்' இதுதான்!

## வெள்ளி விழாவோடு வழி மாறுமா?



தமிழ்ப் பத்திரிகைத் துறையின்
அண்டப் பிரமாண்டம்
(Colossus)
சுடர் ஒளி ஏன் மௌனம்?

## புத்தாண்டில் இலங்கைக்கு தங்கக் கிண்ணப் பரிசு



# கடற்படைக்கு கடற்புலிகளின் தொடர்த் தாக்குதல் சவால்!

கடந்த 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை முல்லை ஆழ்கடலில் மீண்டும் கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் யுத்தம் மூண்டது. இது கடந்த நான்கு வாரங்களில் இடம்பெற்ற மூன்றாவது தாக்குதலும் கடந்த வாரத்தில் இடம்பெற்ற இரண்டாவது தாக்குதலும் ஆகும்.

கடற்புலிகளுடன் கடற்படையினரின் முதலாவது பாரிய சமர் மார்ச் 21இலும், இரண்டாவது சமர் ஏப்ரல் 16இலும் இடம்பெற்றன.

முதல் இரு மோதல்களிலும் புலிகளின் கைகள் மேலோங்கியிருந்த காரணத்தினால் கடற்படையினர் இம்முறை தம்மைச் சற்றுத் தயார் நிலையிலே வைத்துக் கொண்டனர்.

இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய அம்சம் என்னவென்றால், மூன்று தாக்குதல்களும் முல்லைத் தீவிற்கும் அலம்பிலிற்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் இடம்பெற்றிருக்கின்றன. அத்துடன் மூன்று கடற் சமர்களும் அதிகாலைப் பொழுதிலேயே ஆரம்பிக்கப்பட்டு விடிந்த பின்பும் தொடர்ந்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை சுமார் 3.50 மணியளவில் அலம்பில் கடற்பிரதேசத்திற்கும் அப்பால் வழமையான காவல் ரோந்துக் கடமையில் பி—451 மற்றும் பி—461 இலக்கங்களையுடைய இஸ்ரேலியத் தயாரிப்பு டோராக்களைப் போன்று உள்ளூரில் தயாரிக்கப்பட்ட டோரா அதிவேக தாக்குதல் படகுகள் ஈடுபட்டிருந்தன. அவை முல்லைத்தீவிற்கு வட—கிழக்குத் திசையில் சுமார் 32 கடல்மைல்கள் தொலைவில் கண்ணாடி இழைப்படகுகளின் தொகுதியொன்றை அவதானித்தன. அந்தப்படகுகள் விடுதலைப் புலிகளின் சரக்குகளை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. கடற்படையினர் தொலைவில் இருந்து கொண்டே இதனை உறுதி செய்து கொண்டனர்.

பி—461 இலக்கத்தையுடைய டோரா கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கடற்சமரின்போது மயிரிழையில் தப்பியது. இதனால் கிடைக்கப்பெற்ற அனுபவத்தாலோ என்னவோ இம்முறை உடனடியாகவே மோதலை ஆரம்பிக்காது முதலில் மேலதிக டோராக்களின் உதவிக்காக அழைப்புக்கள் ரேடியோச் செய்தி மூலம் பறந்தன. சுமார் 15 நிமிடங்களுக்குள் முல்லைக் கடலுக்கு பல மைல்கள் தொலைவில் நாகர் கோவில் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பி—450, பி—465, பி—442 இலக்கங்களையுடைய டோராக்கள் களத்திற்கு விரைந்தன.

இதே வேளை திருமலைத் துறைமுகத்தில் இருந்தும் பி—492 மற்றும் பி—497 இலக்கங்களையுடைய டோரா விசைப்படகுகள் அந்த இடத்துக்கு விரைந்து வந்தன. கடற்படையினரின் பலம் அதிகரிக்கவே பாரிய கடற் சமர் ஆழ்கடலில் வெடித்தது.

பத்திற்கும் மேற்பட்ட கடற்புலிப் படகுகள் சண்டையில் ஈடுபட்டதாகக் கடற்படையினர் கூறுகின்றனர்.

சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக நீடித்த இந்தப் பாரிய மோதலில் கடற்புலிகளின் நான்கு படகுகள் மூழ்கடிக்கப்பட்டன என்று கடற்படை அதிகாரி ஒருவர் கூறினார்.

இதற்கிடையில் உதவிக்காக அழைக்கப்பட்டிருந்த விமானப்படைக்குச் சொந்தமான இஸ்ரேலியத் தயாரிப்பு விமானம் கிபிர் மற்றும் ரஷ்யத் தயாரிப்பான மிக்—27ரக ஜெட் விமானங்கள் சூரியன் உதயமாகிய பின்னரும்




கடற்சமரில் ஈடுபட்டன.

அதுவரை எதிர்த்தாக்குதல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் படகுகள் ஜெட் தாக்குதல் விமானங்களின் வருகையைக் கண்டதும் எதிர்த்தாக்குதலை நிறுத்தி விட்டு சாலை மற்றும் புதுமாத்தயான் பகுதி நோக்கி பின்வாங்கத் தலைப்பட்டன.

விமானப்படை அதிகாரிகளின் கூற்றுப்படி கிபிர் விமானத்தின் குண்டடிப்பட்டு புலிகளின் படகொன்று தீப்பிடித்துக் கடலில் சங்கமமாகியது. மற்றைய படகுகளைக் கரையோரத்தில் அவதானித்த விமானிகள் அங்கு சிவிலியன்களின் நடமாட்டம் அதிகம் காணப்பட்டமையினால் அந்தப் படகுகளைத் தாக்கவில்லை என்று கூறுகின்றனர்.

விடுதலைப்புலிகள் சர்வதேச கடற்பரப்பில் நங்கூரம் இட்டு நிற்கும் ஆயுதக் கப்பல் ஒன்றிலிருந்தே ஆயுதங்கள், வெடிபொருட்கள், இரசாயனப் பதார்த்தங்கள், எரிபொருள்கள் என்பவற்றைத் தமது சிறிய படகுகளின் மூலம் பொதுமக்களின் உதவியுடன் இறக்கிக் கொண்டிருந்தனர். அப்போதே இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகப் படையினர் திடமாக நம்புகின்றனர்.

அத்துடன் இம்முறை கடற்புலிகள் ஒன்பது பேரைக் கடற்படையினர் நடுக்கடலில் இருந்து உயிருடன் சிறைப்பிடித்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு முறையும் கடற்புலிகளுடன் மோதலில் ஈடுபடும் கடற்படையினர் புலிகளின் ஆயுதக் கப்பலின் வருகை பற்றிப் பேசிக்கொள்கிறார்கள்.

அப்படியாயின் கடந்த நான்கு வாரங்களில் மூன்றுக்கு மேற்பட்ட தடவைகள் ஆயுதக் கப்பல் இங்கு வந்ததா? இது சாத்தியமான விடயமா? அல்லது மருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதைப் போலக் கடற்படையினர் பிதற்றுகின்றனரா?

கடந்த வாரம் இரண்டு சமர்களும் இடம்பெற்ற வேளையில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி நாட்டில் இருக்கவில்லை. கடந்த 15ஆம் திகதி ஐந்து நாட்கள் நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு இவர் பங்களாதேஷ் கடற்படைத் தளபதியின் அழைப்பின் பேரில் அங்கு சென்றிருந்தார்.

பங்களாதேஷ் பிரதம மந்திரி திருமதி சேக் ஹசீனா பேகம் உட்படப் பல அரச பிரதிநிதிகளையும் இவர் அங்கு சந்தித்துப் பேசியுள்ளார். அத்துடன் பங்களாதேஷ் கடற்படையின் சிட்டாகொங் கடற்படைத் தளத்துக்கும் இவர் சென்று வந்திருக்கின்றார்.

இதேவேளை, அண்மையில் இடம்பெற்ற தொடர் கடற் சண்டைகள் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் மத்தியிலும் அரசியல்வாதிகள் மத்தியிலும் சந்தேகங்கள் பலவற்றை உருவாக்கியுள்ளன.

அதாவது கடற்புலிகளின் பலத்தைக் கடற்படையினர் குறைவாக மதிப்பிட்டுள்ளனரா? அல்லது உண்மையிலேயே கடற்புலிகளின் தாக்குதல்களுக்கு அவர்களால் சரியாக முகங்கொடுக்க முடியாதுள்ளதா?

கடற்படையினர் பயன்படுத்தும் தந்திரோபாயங்கள், யுத்த நுணுக்கங்கள் சரியானவைதானா?

அண்மையில் பல பில்லியன்கள் அமெரிக்க டொலர்களைக் கொட்டிச் செலவு செய்து நவீன போர்க்கப்பல்களை இலங்கைக் கடற்படை கொள்வனவு செய்துள்ளது. இவற்றின் பயன்பாடுகள் எவை?

எவ்வளவு தூரம் அவை புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் பயன்படுகின்றன? இவை போன்ற பல கேள்விகள் இப்போது பலமாக எழுந்துள்ளன.

# ரணில் தலைமைக்கு மீண்டும் ஒரு சோதனை! கட்சிக்குள் போர்க்கொடி

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கட்சிக்குள் உருவாகியுள்ள ''பதவி கவிழ்ப்பு'' முயற்சி தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்கவின் நோர்வே பயணத்துடன் சுறுசுறுப்படைந்த இம்முயற்சி ரணில் நோர்வேயில் இருந்து அவசரமாகத் திரும்பி வந்த பின்னரும் தணியவில்லை.


கட்சித் தலைவர் பதவியில் இருந்து ரணிலை அகற்றும் நடவடிக்கையில் கட்சியின் முக்கிய குழு ஒன்றே ஈடுபட்டுள்ளது. சிரேஷ்ட தலைவர்கள் சிலரும் அதில் அடங்குவர். ரணிலின் பலவீனமான தலைமைத்துவத்தையும் அவர் அரசாங்கத்தை எதிர்ப்பதில் பின்நிற்பதையுமே காரணம் கூறி இக்குழுவினர் தமது முயற்சியில் இறங்கியுள்ளனர்.

அரசாங்கத்தின் புதிய வரவு—செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் தோற்கடிப்பதன் மூலம் அரசை வீழ்த்த இக்குழுவினர் ஆரம்பத்தில் திட்டம் தீட்டியிருந்தனர். அதற்கென அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த நான்கு அல்லது ஐந்து எம்.பி களின் உதவியையும் அவர்கள் நாடியிருந்தனர். பெரும் பணமுதலைகள் சிலரின் ஒத்துழைப்பையும் அவர்கள் கோரியிருந்தனர்.

திட்டம் நிறைவேறியிருந்தால்.... ஆனால் ரணில் விக்கிரமசிங்க இத்திட்டத்தை ஆதரிக்கவில்லை. நாடு நெருக்கடியில் இருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் இதைச் செய்யக் கூடாதென அவர் மறுப்புத் தெரிவித்தார். அரசும் இத்திட்டத்தை அறிந்து உஷாரடைந்து விட்டது. இதனால் அரசை வரவு—செலவுத் திட்டத்தின் போது கவிழ்க்கும் முயற்சி இறுதியில் பிசுபிசுத்துப் போனது.

இதையடுத்து ரணிலை கட்சித் தலைவர் பதவியில் இருந்தும் எதிர்க்கட்சித்தலைவர் பதவியில் இருந்தும் தூக்கியெறியும் முயற்சியில் அக்குழுவினரின் கவனம் திரும்பியது. நோர்வே அரசின் அழைப்பை ஏற்று ரணில் அங்கு சென்றிருந்த காலத்தைப் பயன்படுத்தி அவரைக் கவிழ்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ரணிலை கவிழ்க்கும் திட்டம் பற்றி ஆராய களனியில் இரகசிய கூட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. கம்பஹா மாவட்ட முன்னாள் எம்.பி. ஒருவர் இதற்கென இரவு விருந்துபசாரம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். அம் மாவட்ட ஐ.தே.க எம்.பி.கள் பலரும் இதில் கலந்து கொண்டனர். கட்சியின் இரு சிரேஷ்ட தலைவர்களும் விருந்துபசாரத்தில் பங்கு பற்றினர்.


ரணில்

ரணில் கட்சியின் தலைவராகத் தொடர்ந்து இருக்கும் வரை அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாதென பலரும் அங்கு கருத்து தெரிவித்தனர். ஜூலை மாதத்துக்கு முன்னர் அரசு கவிழ்க்கப்படுமென ஐ.தே.க தலைவர் ஒருவர் அக்கூட்டத்தில் கூறியதாகக் கூறப்படுகிறது.

ரணில் ஆதரவு எம்.பி.கள் கட்சிக்குள் நடப்பவற்றை எல்லாம் அவதானித்து வந்துள்ளனர். ரணிலை எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து அகற்றும் முயற்சி அவரது பள்ளிப்பருவ நண்பனான ஐ.தே.கட்சி எம்.பி ஒருவருக்குத் தெரிய வரவே அவர் உஷாரடைந்தார்.

உடனடியாக நோர்வேக்குத் தகவல் பறந்தது. அவசரமாக நாடு திரும்புமாறு ரணில் கோரப்பட்டார். கடந்த 11ஆம் திகதி நோர்வே பயணமான அவர் 26ஆம் திகதியே நாடு திரும்ப திட்டமிடப் பட்டிருந்தது. ஆனால் முன்கூட்டியே 21ஆம் திகதி நாடு திரும்பினார்.

கட்சிக்குள் உருவாகியுள்ள எதிர்ப்பை ரணில் வெற்றி கொள்வாரா? முன்னரும் அவர் இவ்வாறான ஒரு சோதனைக்கு உள்ளானார். ஜனாதிபதி பிரேமதாசாவின் அகால மரணத்தை அடுத்து கட்சித் தலைவர் பதவி ரணில் விக்கிரமசிங்கவைத் தேடி வந்தது. பிரதமர் பதவி வகித்த டி.பி. விஜேதுங்கவுக்கு ஜனாதிபதி பதவி கிடைத்தது.

ஆனால் கட்சித்தலைவர் பதவி ரணிலிடம் நீண்ட காலம் நிலைக்கவில்லை. அவருக்குப் போட்டியாக காமினி திஸாநாயகா வந்தார். கட்சியின் செயற் குழுக் கூட்டத்தில் ரணிலை எதிர்த்துப் போட்டியிட்டு காமினி வெற்றி பெற்றார். தலைவர் பதவியில் அமர்ந்த அவர் அடுத்து வந்த 1994ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிட்டார். ஜனாதிபதி வேட்பாளரான காமினி இறுதியில் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார்.

கட்சித் தலைவர் பதவி மீண்டும் ரணிலைத்தேடி வந்தது. தலைவர் பதவியில் அவர் ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் என பல தேர்தல்களைச் சந்தித்துள்ளார். இத் தேர்தல்கள் எல்லாவற்றிலுமே கட்சி தோல்விகளையே சந்தித்தது. கட்சிக்குள் அவருக்கு இன்று எழும்பியுள்ள எதிர்ப்புக்கு இத் தேர்தல் தோல்விகளும் ஒரு காரணமாகும்.

ரணில் விக்கிரமசிங்கவை எதிர்க் கட்சித் தலைவர் பதவியில் இருந்து அகற்றக் கோரி சபாநாயகர் அநுரா பண்டாரநாயகாவிடம் ஐ.தே.கட்சி எம்.பிகள் ஒரு கடிதத்தை கையளிக்க திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. 40க்கு மேற்பட்ட எம்.பிகள் அதில் கையெழுத்திட விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நாடு திரும்பிய ரணில் விக்கிரமசிங்க தொண்டை வருத்தத்தினால் பாதிக்கப் பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. அவர் இரண்டு நாட்கள் ஓய்வெடுப்பார் என அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் கூறின. இருந்தாலும் அவருக்கு நெருங்கிய சிலர் அவரை அவரது இல்லத்தில் சந்தித்துள்ளனர். கட்சிக்குள் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து அவர்கள் ஆராய்ந்துள்ளனர்.

ஐ.தே.க. தலைவர் ரணிலை அப்பதவியில் இருந்து அகற்றும் முயற்சி குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய கூறியுள்ளார். ''பத்திரிகைகளில் பல விடயங்கள் வெளியாகியுள்ளன. அவை குறித்து எனக்கு எதுவும் தெரியாது'' என்று உதவித் தலைவர் காமினி அத்துகோறளை தெரிவித்துள்ளார்.

அடுத்து வரும் சில நாட்களில் இவ் விவகாரம் பற்றிய உண்மை நிலை தெரியவரலாம். ஐ.தே.க கட்சிக்குள் எழுந்துள்ள எதிர்ப்பை சமாளிப்பதில் ரணில் ஒருவேளை வெற்றி பெற்றாலும் தலைமைப்பதவி ஆபத்து நீங்கி விடப் போவதில்லை.

— அவதானி

யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம்

# போட்டியிடாவிட்டாலும் அம்மா ஆட்சிதான் நடக்கும்

## அ.தி.மு.க. உறுப்பினர்கள் முழு நம்பிக்கை

தமிழக சட்டசபைக்கு ஜெயலலிதா செல்ல முடியாது. அவருடைய நான்கு வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டன. இருப்பினும் ஆட்சியைக் கைப்பற்றுவதில் அ.தி.மு.க தலைவர்கள் உறுதியாக இருக்கிறார்கள்.

அம்மா போட்டியிட முடியாமல் போனாலும் அவர்ஆட்சிதான் நடக்கும் என்று அ.தி.மு.க. உறுப்பினர்கள் முழு நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

ஜெயலலிதாவின் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் தமிழகத்தில் பெரும் மோதல் சம்பவங்கள் ஏற்படும் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து பலத்த காவல் நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர்.

ஜெயலலிதா வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்த நான்கு தொகுதிகளிலும் இருக்கும் தெரிவத்தாட்சி அதிகாரிகள் காரியாலயங்களில் ஒரே கூட்டம் நிறைந்திருந்தது. வெவ்வேறு கட்சி ஆதரவாளர்கள் மோதலில் ஈடுபடாதவாறு பொலிஸ் காவல் போடப்பட்டிருந்தது.

ஜெயலலிதா பற்றி செய்தி வெளிவரும் என்று காத்திருந்தவர்களுக்கு முதலில் சேடப்பட்டியின் செய்திதான் கிடைத்தது. ஜெயலலிதாவின் தொண்டனாக இருந்து அவர்காலில் வீழ்ந்து அரசியல் நடத்தியவர் சேடப்பட்டி முத்தையா. தமிழக சட்டசபை சபாநாயகராக இருந்து பின்னர் மத்திய அரசில் அமைச்சராக உயர்ந்தவர்.

ஜெயலலிதாவிடம் மோதல் காரணமாக பின்னர் அவருக்கு அ.தி.மு.க தேர்தல் டிக்கெட் கிடைக்கவில்லை. ஆண்டிப் பட்டியில் சுயேச்சை வேட்பாளராக வேட்புமனுத் தாக்கல் செய்தார். மோசடி வழக்கில் தண்டனை பெற்ற காரணத்தால் அவருடைய வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. குருவை மிஞ்சிய சீடராகி விட்டார்.

தமிழக சட்ட சபைத் தேர்தலில் ஜெயலலிதாவின் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுமா என்ற கேள்வி வியாபித்திருந்த வேளை அது. திடீரென்று ஜெயலலிதா ஒரு அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டார்.

ஏற்கனவே ஆண்டிப்பட்டி, கிருஷ்ணகிரி ஆகிய இரு தொகுதிகளில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார் ஜெயலலிதா. வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் இறுதி நாளான திங்கட்கிழமை 23ஆம் திகதி புதுக்கோட்டை, புவனகிரி ஆகிய மேலும் இரு தொகுதிகளிலும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தார்.

வேட்பு மனுக்களை ஏற்பதும், நிராகரிப்பதும் அந்தந்த மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளின் அதிகாரத்திற்குள் வரும் பணிகளாகும். வேட்பாளர்கள் தமது வாழ்வில் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படாதவர்கள் என்பதை உறுதிப்படுத்தி சத்தியக்கடதாசி சமர்ப்பிக்க வேண்டும். அதனடிப்படையில் அவர்களின் வேட்பு மனுக்கள் பரிசீலிக்கப்படும்.


ஜெயலலிதா

ஒரு தெரிவத்தாட்சி அதிகாரி ஒரு வேட்பு மனுவை ஏற்றுக்கொண்டால் அல்லது நிராகரித்தால் அது விடயத்தில் தேர்தல் ஆணையாளரே தலையிட முடியாது என்பது விதியாகும்.

எனவே தமக்குச் சாதகமானவர்கள் அல்லது முதலமைச்சராகத் தாம் இருந்த போது தமது கருணையைப் பெற்றவர்கள் எவராவது தெரிவத்தாட்சி அதிகாரிகளாக இருக்க மாட்டார்களா? அவர்களில் ஒருவர் தமக்கு நன்றிக்கடன் செலுத்தும் விதத்தில் தமது வேட்பு மனுவை அங்கீகரிக்க மாட்டாரா? — இந்த எண்ணங்கள் ஜெயலலிதாவுக்கு ஏற்பட்டிருக்கக் கூடும்.

ஜெயலலிதா நான்கு தொகுதிகளில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ததற்குக் காரணம் ஒரு தொகுதியிலாவது வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்படும் என்ற நப்பாசையினால் தான் என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் அவ்விதம் ஜெயலலிதா நான்கு தொகுதிகளில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ததே பெரும் குற்றம் என்று சட்ட வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். இந்திய தேர்தல் சட்டத்தின்படி ஒருவர் ஒரே தட வையில் இரு தொகுதிகளில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யலாம். தேர்தலில் போட்டியிடலாம். ஆனால் இரு வேட்புமனுக்களுக்கு மேல்தாக்கல் செய்யக் கூடாது.

ஜெயலலிதா நான்கு வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தார்.

இந்தக் குற்றத்தையே காரணமாகக் கொண்டு ஜெயலலிதாவின் வேட்புமனுக்களை நிராகரிக்கலாம் என்று சட்ட வல்லுநர்கள் தெரிவித்தனர்.

இருப்பினும் ஊழல் வழக்கில் சிறைத் தண்டனைப் பெற்ற காரணத்தைக் வைத்து ஜெயலலிதாவின் வேற்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

தமிழக சட்டசபைத் தேர்தலில் இருமுனைப் போட்டிகளை நடத்தி தீவிர பலப்பரீட்சையை ஏற்படுத்துவதற்கு அனைத்துக் கட்சிகளும் முயன்றன. அவ்விதமே சூழ்நிலையும் உருவாகியது. ஆனால் பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் டாக்டர் ராமதாஸ் கருணாநிதியை விட்டுப் பிரிந்து ஜெயலலிதா அணியில் சேர்ந்ததும் நிலைமை மாறியது.

ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் வெறுத்துப் போனதால் மூப்பனார் தலைமையில் ஒரு மூன்றாவது அணியை ஏற்படுத்த சிலர் முயன்றனர். ஆனால் அத்தகைய தலைமையை ஏற்றுக் கொள்ள இறுதிவரை முன்வரவில்லை மூப்பனார். ஜெயலலிதாவே கதி என இருந்தவர் இன்று மோசமான முறையில் ஏமாற்றப்பட்டு முடங்கிப் போய்விட்டார்.

இதேவேளையில் தமிழக சட்டசபைத் தேர்தலில் எவரும் எதிர்பாராத விதத்தில் ஒரு மூன்றாவது அணி உருவாகியது. மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவர் வை.கோபாலசாமி தமது கட்சிக்குத் தலைமை தாங்கி ஒரு மூன்றாவது அணியாகத் தனித்து நின்று போட்டியை ஏற்படுத்திவிட்டார்.

தி.மு.க. அணியின் தளபதி என்று கூறும் அளவுக்கு மிகவும் உத்வேகத்துடன் செயற்பட்டவர் வைகோ. பின்னர் கருணாநிதியுடன் கொண்ட கருத்து மோதல் காரணமாகப் பிரிந்து சென்றார் அல்லது தமது மகன் ஸ்டாலினை உச்சத்துக்குக் கொண்டுவருவதற்காக கருணாநிதியே வைகோவை வெளியேற்றினார்.

காரணம் எதுவாகினும் தமது அணிக்கு பலவீனத்தை ஏற்படுத்திவிட்டார் கருணாநிதி. மூன்றாவது அணிக்குத் தலைமை தாங்கியுள்ள வைகோ தி.மு.க வின் வெற்றிவாய்ப்பைக் குன்றச் செய்யலாம். ஆனால், அவர் தமக்கென மாபெரும் வெற்றியைத் தேடிக் கொள்ளப் போவதில்லை.

பாண்டிச்சேரியிலும் இருமுனைப் போட்டியே நடைபெறும் என்று ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பாட்டாளி மக்கள் கட்சியே பாண்டிச் சேரியில் ஆட்சி அமைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஜெயலலிதாவுடன் ஒப்பந்தம் செய்தார் ராமதாஸ்.

இதன் காரணமாக மூப்பனாரும் சோனியாவும் பாண்டிச்சேரியில் ஜெயலலிதா அணியில் சேராமல் தனித்துப் போட்டியிடுவோம் என்று அறிவித்தனர். இதன் மூலம் பாண்டிச் சேரியிலும் மும்முனைப் போட்டி உருவானது.

தமிழகத்தில் ஒரே அணியில் ஜெயலலிதா, மூப்பனார், சோனியா, ராமதாஸ் ஆகியோர் இருக்கின்றனர். ஆனால் பாண்டிச்சேரியில் ஜெயலலிதாவும் ராமதாஸும் ஓரணியில், மூப்பனாரும் சோனியாவும் ஓரணியில் பலப் பரீட்சை நடத்துகிறார்கள். மூன்றாவது அணி தி.மு.க அணி ஆகும்.

ராமதாஸுக்கு பாண்டிச்சேரியில் 10 தொகுதிகள் தந்து தமது அணி ஆட்சிக்கு வந்தால் முதல் 2 – 1/2 வருட காலம் பா.ம.க அரசு பதவியில் இருக்க இணங்கினார் ஜெயலலிதா. எஞ்சிய 2– 1/2 வருட கால ஆட்சி அ.தி.மு.கவுக்கு என்று ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்.

பாண்டிச்சேரி சட்டசபைக்கு மொத்தம் 30 தொகுதிகள் இருக்கின்றன. தமிழகத்தின் ஒரு லோக சபைத் தொகுதிக்குள் வரும் வேட்பாளர்களே முழுப் பாண்டிச்சேரி லோக சபைத்தொகுதிக்குள் அடங்கி விடுவர். அவ்வளவு சிறிய பகுதி பாண்டிச்சேரி.

பாண்டிச்சேரி சட்ட சபைக்குள் அடங்கும் 10 தொகுதிகளில் வன்னியர் இனத்தவர் அதிக எண்ணிக்கையில் வாழ்கிறார்கள். தேர்தலில் அந்த 10 தொகுதிகளும் தமக்கே வரும் என்று நம்பினார் ராமதாஸ்.

பாண்டிச்சேரியில் தற்போது காங்கிரஸ் ஆட்சியே நடைபெறுகிறது. எனவே அடுத்துவரும் ஆட்சியைப் பாட்டாளி மக்கள் கட்சிக்கு விட்டுக் கொடுக்க காங்கிரஸ் இணங்கவில்லை. மூப்பனார் கட்சியுடன் இணைந்து மீண்டும் ஆட்சியைப்பிடிக்க முயலுகிறார்கள் காங்கிரஸார்.

தேர்தலில் போட்டியிடுவதற்கு தம்மை தேர்தல் ஆணையாளர் அனுமதிக்காவிட்டால் அதனையே ஒரு பிரச்சினையாக எடுக்க ஜெயலலிதா துணிந்து விட்டார் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழக மக்கள் மத்தியில் ஒரு அனுதாப அலையை ஏற்படுத்தி அதன் மூலம் தமது கட்சிக்கு வெற்றியைத் தேடிக்கொள்ளும் எண்ணம் ஜெயலலிதாவிற்கு இருக்கிறது. தேர்தல் ஆணையாளரின் தீர்ப்பைவிட தமிழக மக்கள் அளிக்கும் தீர்ப்பே வலுவுள்ளதாக இருக்கப்போகிறது.

—கதாசி

## மன்னார் சம்பவம்: 5 பேர் அடையாளம்

மன்னாரில் இரு தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுற வுக்கு உட்படுத்தப் பட்ட சம்பவம் தொடர் பாக ஐந்து படையினர் அடையாளம் காணப்பட்டுள் ளனர். இதையடுத்து ஐவரும் மே 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

சந்தேக நபர்களை அடையாளம் காண்பதற்கான அணிவகுப்பு திங்களன்று மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் நடை பெற்றது. பாதிக்கப்பட்ட பெண்கள் இருவ ரும் இவர்களை அடையாளம் காட்டினர்.

கிளர்ச்சித் தடுப்புப் பிரிவுப் பொறுப் பதிகாரி என்.பி.என். சுரவீர, ராஜா என அழைக்கப்படும் ராஜேந்திரன், டி.விமல் மற்றும் கடற்படையைச் சேர்ந்த லெப்டினன்ட் குமார, டி.டி.ஐ. பிரியதர்ஷன ஆகியோரே அடையாள காணப்பட்டவர்களாவர்.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் கிளர்ச்சித் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த மேலும் 15 பேரை மே 10, 11 ஆம் திகதிகளில் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப் பிற்கு உட்படுத்து மாறும் பதில் நீதிவான் உத்தர விட்டுள்ளார்.

## செல்லச்சாமி மீண்டும் இ.தொ.கா.வில் இணைவார்?

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் பொதுச் செயலாளர் எம்.எஸ் செல்லச்சாமி எம்.பி மீண்டும் காங்கிரஸில் சேர வுள்ளார். தலைமைப் பொறுப்பையும் அவர் ஏற்க விருக்கின்றார். அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் முயற்சி வெற்றி அளித்திருக்கிறது என்று இ.தொ.கா வட்டாரங்கள் கூறுகின்றன.

இ.தொ.கா விற்குள் ஏற்பட்ட சில கருத்து முரண்பாடுகளினால் மறைந்த தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமானுக்கும் செல்லச்சாமிக்கும் இடையில் பிரிவினை ஏற்பட்டு அவர்கள் பிரிந்தனர்.

ஆனால் அட்டனில் அண்மையில் இடம் பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம் நிலைமையை மாற்றி விட்டது.

கீரியும் பாம்புமாக இருந்தவர்கள் அடிக்கடி சந்திக்கவும், மனம் திறந்து பேசவும், பிரச்சினைகளை ஆராயவும் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. சட்டத்தாலும் நீதிமன்றத்தாலும் தீர்வு காண முடியாத பிரச்சினைகளுக்கு மனம் விட்டுப் பேசுவதன் மூலம் தீர்வு காண முடியும் என்று கருதப்படுகிறது.

நாளை மறுதினம் அட்டனில் நடைபெறும். இ.தொ.கா மேதின விழாவில் இது பற்றி உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப் பட்டது.

திரு. செல்லச்சாமி ஐக்கிய தேசியக் கட்சியில் தேசியப்பட்டியல் எம்.பியாக தற்போது இருக்கிறார். ஆனால் இ.தொ.கா அரசாங்கத்தின் ஒரு அங்கமாகவும் ஆறுமுகம் தொண்டமான் அமைச்சராகவும் இருக்கின்றார். இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சிசெல்லச்சாமிக்கு வழங்கிய தேசிய பட்டியல் எம்.பி. பதவிக்கு ஆபத்து ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.


அவரது எம்.பி பதவிக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்கு மாற்று வழிகள் இ. தொ.கா விடம் இருப்பதாக இ.தொ.கா வட்டாரங்கள் தெரிவித்தன.


மலைநாட்டில்

Maths / Science & Technology
O/L 2001, O/L 2002, Grade 9

| Subject | O/L 2001 | O/L 2002 | Grade 9 |
|---|---|---|---|
| Maths | Sat 1.30-330 | Sun 10.30-12.30 | Mon / Tue 4.45-5.30 |
| Science | Sat 11.30-130 | Sun 8.30-10.30 | Mon / Tue 4.45-5.30 |

விரிவுரை W.L.Rajaratnam
EPI
87 / 1A, கட்டுகஸ்தோட்ட வீதி, கண்டி. தொலைபேசி:072-500475
(வித்தியார்த்த கல்லூரி முன்னால்)




தலைநகரில்

Maths / Science & Technology
O/L 2001, O/L 2002

| Subject | O/L 2001 | Grade 10 |
|---|---|---|
| Maths | Fri 5.00-7.00 | Fri 3.00-5.00 |
| Science | Thu 5.00-7.00 | Thu 3.00-5.00 |

விரிவுரை W.L.Rajaratnam
EPI
316, காலி வீதி, கொழும்பு - 04.
தொலைபேசி:075-516790
(St. Peters பஸ்தரிப்பு முன்னால்)

சுடர் ஒளி

29 ஏப்ரல், 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834
E-mail: sudar@uthayan.com

# பாலஸ்தீனர்களும் வடக்கு – கிழக்கு தமிழர்களும்

வடக்கு – கிழக்கு தமிழ் மக்களைப்போல் இன்று பெரும் துன்பங்களுக்கு இலக்காகி யுள்ளவர்கள் பாலஸ்தீன மக்கள்.

அவர்கள் படும் துயரம் சொல்லிமுடியாது. இஸ்ரேலின் வன்செயல்கள், ஈவிரக்கமற்ற மிலேச்சத்தனமான தாக்குதல்கள், மனித உரிமை மீறல் சம்பவங்கள் ஆகியவை பாலஸ்தீன மக்களைத் தினமும் வாட்டி வதைக்கின்றன.

இவற்றுக்கு எல்லாம் முடிவே இல்லையா என்று அவர்கள் ஏங்குகிறார்கள்.

இதைச் சர்வதேச சமூகம் சரியாகக் கண்டுகொள்வதாக இல்லை.

இஸ்ரேலின் கொடுமைகளுக்கும் அட்டூழியங்களுக்கும் எதிராக இலங்கையில் குரல் கொடுப்பவர்களில் ஐ.தே.க எம்.பிக்களான ஏ.எச்.எம். அஸ்வர், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் போன்றவர்கள் முன்னணியில் இருக்கிறார்கள்.

பல இஸ்லாமிய அமைப்புகளும் அவ்வப்போது எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

ஆனால் பெரும்பாலான முஸ்லிம் அரசியல்வாதிகள் பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்ற நிலையிலேயே இருந்து வருகின்றனர்.

இஸ்லாத்துக்கு என்ன நேர்ந்தாலும் பாலஸ்தீன மக்கள் எக்கேடு கெட்டாலும் அவர்களுக்குக் கவலை இல்லை. தங்களுடைய அரசியல் ஆதாயங்களையும் மற்றும் நலன்களையும் பாதுகாத்துக் கொண்டால் போதும் என்று இருக்கிறார்கள்.

இவர்களே இப்படி இருந்தால் இலங்கை அரசு எப்படி இருக்கும்?

இலங்கை அரசு இஸ்ரேலைக் கண்டிக்க வேண்டும். பாலஸ்தீன மக்களுக்கு விடிவு ஏற்படப் பாடுபடவேண்டும் என்று அஸ்வர் மற்றும் பாக்கீர் மாக்கார் முதலானோர் கோரிக்கை விடுத்து வருகிறார்கள்.

இலங்கையிலே தனது தூதரகம் ஒன்றைத் திறக்க இஸ்ரேல் அரசுக்கு இடமளிப்பது பற்றி இலங்கை அரசு ஆலோசித்து வருகிறது. அதற்கும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. ஆயினும் அரசு அதைக் கவனத்தில் எடுக்கும் என்று நம்புவதற்கு இல்லை.

இஸ்ரேலுக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டிய கடப்பாடு அரசுக்கு இருக்கிறது.

ஒரு வருடத்துக்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆனையிறவைக் கைப்பற்றிவிட்டு யாழ்ப்பாணம் நோக்கி முன்னேறி முற்றுகையிட்டிருந்தபோது அரசுக்கு வெளிநாடுகளின் உதவி அவசரமாகத் தேவைப்பட்டது.

அப்போது முதன்முதலாக நேசக்கரம் நீட்டிய நாடுகளில் ஒன்று இஸ்ரேல். இஸ்ரேல் இலங்கைக்குப் பலவழிகளில் உதவி செய்தது.

இப்படித்தான் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பதவிக்காலத்திலும் இஸ்ரேல் இலங்கைக்கு இராணுவ உதவி வழங்கியது. அப்போது இஸ்ரேலை இங்கே நலன்காப்புப் பிரிவு ஒன்றை வைத்திருப்பதற்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தன அனுமதி வழங்கினார். அந்தப் பிரிவு அமெரிக்கத்தூதரகத்தில் இருந்து இயங்கியது.

பின்னர் ஆர்.பிரேமதாச ஜனாதிபதியாகியதும் இஸ்ரேலின் நலன் காப்புப் பிரிவினை மூடிவிட்டார். இப்போது சரித்திரம் திரும்புகிறது. அவ்வளவுதான்.

தவிரவும், இலங்கைப் படைகள் வடக்கு – கிழக்கில் என்னவெல்லாம் செய்கின்றனவோ அவற்றைத்தானே இஸ்ரேலியப் படைகள் பாலஸ்தீனத்தில் செய்கின்றன?

குண்டுவீச்சு, ஷெல் அடி, பாலியல் வல்லுறவு, மனித உரிமை மீறல், கண்டபடி எவரும் கைது, தடுத்துவைப்பு, சித்திரவதை, காணாமல்போதல் இவையெல்லாம் இன்று வடக்கு – கிழக்கில் சர்வசாதாரண சம்பவங்கள்.

அப்படியிருக்க, இலங்கை அரசு இஸ்ரேலைக் கண்டிப்பது எப்படி? கேள்வி கேட்பதுதான் எப்படி?

வடக்கு – கிழக்கு தமிழர்களைப்போல பாலஸ்தீன மக்களும் பாவப்பட்ட ஜென்மங்கள் என்ற பட்டியலில் இடம்பெறுகிறார்கள். அவர்களுக்கு விமோசனம் எங்கே, எப்போது?

# கதிர்காமரின் காய் நகர்த்தல் நோர்வேயை வெட்டிவிடவா?

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஒருதலைப் பட்ச யுத்தநிறுத்தம் முடிந்துவிட்டது.

கடந்த 2000 டிசம்பர் 24இல் யுத்தநிறுத்தத்தை அறிவித்துவிட்டு மூன்று மாதங்களாக அதை நீடித்து வந்தார்கள் புலிகள். இம்முறை அவர்கள் நீடிக்கவில்லை.

அதனால் இரு தரப்பிலும் போர் தீவிரமடையப் போகிறது.

கடந்த வாரம்தான் எழுதியிருந்தோம். எப்படி?

''சமாதானமா, போரா? தயார் நிலையில் புலிகள்' என்ற தலைப்பில் இப்படி எழுதியிருந்தோம்:

''அரசாங்கம் செய்யவேண்டியதை எல்லாம் செய்து சமாதானப் பேச்சுக்கு வராவிட்டால் தாம் எந்த நேரத்திலும் சண்டைக்குத் தயார் என்று திட்டவட்டமாக அறிவித்த மாதிரி அல்லவா புலிகளின் அறிக்கை இருக்கிறது. இப்படி அரசு சிந்திக்கிறது.

ஆண்ட பரம்பரை இரண்டாந்தரப் பிரஜைகளாக மற்றவர்களுக்குச் சாமரை வீசிக்கொண்டு இருக்கமுடியாது.

'தருவதை ஏற்றுக்கொண்டு திருப்திப்படு, பணிந்து நட' என்றால் அது ஒருபோதும் முடியாத காரியம்.

பேசித் தீர்க்கலாம் என்றால் அதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்த அரசு ஒத்துழைப்பு வழங்குவதாக இல்லை. நான்கு மாதங்கள் பார்த்தாகி விட்டது.

குட்டக் குட்டக் குனிபவனும் மடயன், குனியக் குனியக் குட்டுபவனும் மடயன். பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. இனி இரண்டில் ஒன்று கண்டே ஆகவேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள் புலிகள்.''


அன்டன் பாலசிங்கம்

இப்படிக் கடந்த வாரம் எழுதியிருந்தோம்.

யுத்த நிறுத்தத்தை இம்முறை நீடிக்காமல் விட்டதன் மூலம் நாம் கூறியதை நிரூபித்துவிட்டார்கள் புலிகள்.

மற்றெல்லாப் பத்திரிகைகளும் யுத்தநிறுத்தம் இம்முறையும் நீடிக்கப்பட இருப்பதாகவே அடித்துக்கூறின. சுடர் ஒளி மட்டும்தான் யுத்த நிறுத்தம் நீடிக்கப்படும் என்று ஒரு வார்த்தை கூடக் குறிப்பிடவில்லை. அதன் தாற்பரியம் இப்போதுதான் பலருக்கும் புரிகிறது.

முக்கியமான அரசியல் இரகசியங்களை முன்கூட்டியே அச்சொட்டாக அறிய வேண்டுமானால் சுடர் ஒளியைப் படிப்பதைத் தவிர வேறு வழி இல்லை.

தமது ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை இம்முறை நீடிக்காததற்குப் புலிகள் பல காரணங்களைக் கூறியிருக்கிறார்கள்.

நோர்வேயின் சமாதானப் பணிகளுக்கு உதவுமுகமாகத் தாம் யுத்தநிறுத்தம் செய்ய, அரசாங்கமோ தான் அதைச் செய்வதற்கு விடாப்பிடியாக மறுத்துவிட்டது.

அது மட்டுமா, யுத்தநிறுத்தத்தை அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி கடல் தாக்குதல்கள், விமானக் குண்டுவீச்சுக்கள், ஷெல் அடி முதலானவற்றை அபரிமிதமாக நடத்தியிருக்கிறது.

இவற்றால் பொதுமக்களுக்கும் புலிகளுக்கும் உயிர் இழப்புக்களும் பெரும் அழிவுகளும் ஏற்பட்டுள்ளன. இப்படியெல்லாம் புலிகள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

புலிகள் யுத்தநிறுத்தத்தை நீடிக்காததால் சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகளுக்குப் பின்னடைவு ஏற்படப்போகிறதே என்று சில வட்டாரங்களில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

உண்மை என்னவென்றால் புலிகள் யுத்த நிறுத்தத்தை நீடித்தாலும் நீடிக்காவிட்டாலும் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளையும் பேச்சுவார்த்தை நடைபெறுவதையும் கூட முடக்குவதற்கு மிக நுட்பமாகச் சில காய்கள் நகர்த்தப்பட்டு வந்தன. இப்போதும் அது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பேச்சுவார்த்தை முயற்சியிலோ அல்லது பேச்சுவார்த்தையிலோ நேரடியாகக் கை வைக்காமல் அந்த இரண்டினதும் சூத்திரதாரியான நோர்வே அரசைத் தடம் புரளச் செய்து ''வேண்டாம் இந்தத் தேவையில்லாத வேலை'' என்று விட்டுவிட்டு ஓடச் செய்யும் காய்நகர்த்தலே நடைபெற்று வருகிறது.


எரிக் சொல்ஹெய்ம்

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் விரும்பிக் கேட்டுக்கொண்டதன் பேரிலேயே நோர்வே அரசு சமாதானப் பணியில் ஈடுபட முன்வந்தது.

இரு சாராரில் எவரேனும் தனது பணியை விரும்பவில்லை என்றாலோ அல்லது தேவை இல்லை என்று கருதினாலோ நோர்வே அரசு சமாதானப் பணியிலிருந்து விலகிக்கொள்ளும் என்று நோர்வே அரசின் விசேஷ தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் பல தடவைகள் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார்.

இந்தப் பின்னணியில், சமாதானப் பேச்சுவார்த்தையில் நோர்வேயின் பங்கு என்ன என்பதில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்துக்கும் இடையில் நடைபெற்றுவரும் கடிபிடியை அவதானிப்பவர்களுக்கு விஷயம் புரிகிறது.

நோர்வே அரசு பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாளராக இருந்தால் மட்டும்போதும். அதற்கு மேல் மத்தியஸ்தராகவோ அல்லது மூன்றாவதுகட்சிக்காரராகவோ இருக்கத் தேவையில்லை என்கிறார் அமைச்சர் கதிர்காமர்.

அப்புறம் அனுசரணையாளர் என்றால் அவருடைய பணி என்ன என்று முட்டையில் மயிர் பிடுங்கும் விதத்தில் வியாக்கியானங்கள் செய்து வருகிறார்.

பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இலங்கை அரசையும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் பேச்சுவார்த்தைக்கான மேசைக்குக் கொண்டு வருவதோடு அனுசரணையாளரின் பணி முடிவடைகிறது. பேச்சுவார்த்தையில் எந்த விதத்திலும் அனுசரணையாளர் தம்மைச் சம்பந்தப்படுத்திக்கொள்ள முடியாது. இது சட்டத்தரணியான அமைச்சர் கதிர்காமரின் வாதம்.

அன்டன் பாலசிங்கம் இதை ஏற்றுக்கொள்ளவில்லை.

அரசினரும் புலிகளும் மாறுபட்ட கருத்துக்க

காண்டீபம்

ளையும் எத்தனையோ பிரச்சினைகளையும் உடையவர்கள். நீண்டகாலப் பகைவர்கள். ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கையற்றவர்கள்; சந்தேகம் கொண்டவர்கள்.

இவர்களை அனுசரணையாளர் ஒருவர் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்துச் சென்று உங்கள் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள் என்றுவிட்டால் பேச்சு நடக்குமா? எதைப் பேசுவார்கள், எப்படிப் பேசுவார்கள்? எங்கிருந்து ஆரம்பிப்பார்கள்? பேச்சுக்குப் பதில் ஏச்சு இடம்பெறுவதுதான் பெரும்பாலும் சாத்தியம். அதனால் எல்லாமே குழம்பிப் போகும்.

ஆகவே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஒரு மத்தியஸ்தர் அல்லது மூன்றாமவர் இருந்து பேச்சுவார்த்தையை நெறிப்படுத்த வேண்டும். இரு சாராரும் தண்டவாளத்தை விட்டு விலகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் பிரயோசனமான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடக்கும்; பயன் கிடைக்கும்.

அதற்கு அனுசரணையாளராக அன்றி மத்தியஸ்தராகவோ அல்லது மூன்றாமவராகவோ நோர்வே அரசு பணியாற்ற வேண்டும்.

மத்தியஸ்தர் அல்லது மூன்றாமவர் பேச்சுவார்த்தையை நெறிப்படுத்துவதோடு சரி. அவருக்கு பிரச்சினையில் தன்னுடைய கருத்துக்களை முன்வைக்கும் உரிமையோ, நீதிபதி ஸ்தானமோ அல்லது தீர்ப்புக்கூறும் அதிகாரமோ கிடையாது. இப்படி அன்டன் பாலசிங்கம் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

இது அரசுக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் கடந்த வருடம் நவம்பரில் வன்னியிலே தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நேரில் சந்தித்துப் பேசினார் அல்லவா?

அப்போது பிரபாகரன் வழங்கிய அன்பளிப்பை அவர் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்.

பிரபாகரன் சமாதான முயற்சிகளில் உண்மையான பற்றுறுதி கொண்டிருக்கிறார் என்று எங்கும் பறைசாற்றினார்.

பிரபாகரனின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்த அறிவிப்பை வெகுவாகப் பாராட்டினார்.

பிரபாகரன் கேட்டுக்கொண்டபடி பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகச் சொல்ஹெய்ம் தான் புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தயாரித்தார்.


லக்ஷ்மன் கதிர்காமர்

அந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களில் ஒன்று வடக்கு – கிழக்கில் அரச கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கான பொருளாதாரத் தடையை அரச முற்றாக நீக்கவேண்டும் என்பதாகும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையைப் புலிகள் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்பதை வெளிப்படுத்தி அரசும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்ஹெய்ம் திரும்பத் திரும்பக் கேட்டு வருகிறார்.

எப்படியோ எரிக்சொல்ஹெய்ம் புலிகள் மீது அதிக நல்லெண்ணம் வைத்திருக்கிறார் என்ற கருத்து அரசுக்கு ஏற்பட்டுவிட்டது. அதனால் அவரின் நடுநிலைமை அரசைப் பொறுத்தவரை கேள்விக்குறியாகிவிட்டது.

அமைச்சர் கதிர்காமர் அடிக்கடி இந்தியா சென்று புதுடில்லியில் இந்திய அரசாங்கத் தலைவர்களுக்கு இலங்கை நிலைமையை அறிவித்து வருவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்.

இந்தியா கூட ஒரு கட்டத்தில் நோர்வேயின் அனுசரணை தேவையா என்று பலமாகச் சிந்தித்தது.

எது எப்படி இருந்தபோதிலும் நோர்வேயை உதவிக்கு அழைத்துவிட்டு முகத்தை முறிக்கும் விதத்தில் வேண்டாம் போ என்று விரட்ட முடியாது. அது நாகரிகமாகாது. தவிரவும் அப்படிச் செய்தால் சர்வதேச சமூகத்திடமிருந்து தப்பவும் முடியாது. நிலைமையை உணர்ந்து நோர்வேயே தனது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நைஸாகப் பணியிலிருந்து விலகி நழுவிவிடுமானால் அது அரசுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தமாதிரி இருக்கும். சமாதானப் பேச்சு நாடகத்தின் அடுத்த சீன் அதுவாக இருந்தால் ஆச்சரியப்படாதீர்கள்.

# வெள்ளி விழாவோடு புலிகளின் வழி மாறுமா?


பிரபாகரன்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வேலுப்பிள்ளை பிரபாகரனால் 1976இல் ஆரம்பிக்கப்பட்டது. அடுத்த மே 5ஆம் திகதியுடன் 25 ஆண்டுகளாகின்றன.

ஆரம்பத்தில் ஒரு சில போராளிகளுடன் கரந்து உறைந்து அதிரடித் தாக்குதல் நடத்தும் கெரில்லா இயக்கமாகச் செயற்பட்டுவந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இன்று ஒருநாட்டின் படைகளை எதிர்கொண்டு அவற்றுடன் நேருக்கு நேர் போர் புரியும் மரபு வழிப் போராட்ட இயக்கமாகப் பரிணமித்திருக்கிறது.

உலகின் நான்காவது பெரிய படையான இந்தியப் படைக்கே ஈடுகொடுக்கும் அளவுக்கு விடுதலைப்புலிகள் இயக்கம் வளர்ச்சி அடைந்தமை உலகையே வியப்பில் ஆழ்த்திவிட்டது.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தையும் மட்டக்களப்பையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த விடுதலைப்புலிகள் இயக்கம் இன்றும் அந்த இரண்டு பகுதிகளிலும் கணிசமான நிலப்பரப்பில் அதிகாரம் செலுத்திவருகிறது.

அதேவேளை இலங்கை, இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் முதலான நாடுகளால் பயங்கரவாத இயக்கம் என்று தடைசெய்யப்பட்டு இருக்கிறது.

அப்படி இருந்தும் கடந்த 18 வருடப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக அந்த இயக்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தி தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் ஆரம்ப முயற்சிகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகள் 10 வருடப் போருக்குப் பின்னர் 1987இல் ஆயுதப் போராட்டத்தை நிறுத்திவைத்துவிட்டு அகிம்சைப் போராட்டத்தில் குதித்துப்பார்த்தார்கள்.

ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார். அப்போதிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசு அதைக் கணக்கில் எடுக்கவில்லை. திலீபன் உயிர் துறந்தார். மட்டக்களப்பில் உரிமைக்காக அன்னை பூபதியும் உண்ணாவிரதம் இருந்து உயிர்விட்டார்.


திலீபன்

உண்ணாவிரதப் போராட்டங்கள் வெகுஜன இயக்கங்களாக உருவெடுத்தும் உருப்படியான பலன் எதையும் அளிக்கவில்லை.

அதைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் போராட்டப் பாதைக்கு மீண்டும் திரும்பினர்.

சர்வதேச சமூகத்தின் விருப்புக்கு இணங்க இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தப் புலிகள் 2000 டிசம்பர் 24ஆம் திகதி ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்தத்தை அறிவித்து அதை நான்கு மாதங்களாக அனுஷ்டித்து வந்தார்கள்.

ஆனால் இலங்கை அரசு அதைச் செய்யவில்லை.

இது எதைக் காட்டுகிறது? வெள்ளி விழாவோடு புலிகளின் வழி மாறுமா என்று கேட்பவர்களைப் புலிகள் இப்படித் திருப்பிக் கேட்கிறார்கள்.

# ஆபத்துகளைக் கடந்து வன்னி சென்ற பெண் பத்திரிகையாளர்!

## தனது உரிமையையே பயன்படுத்தினார் என்கிறது ஊடகவியலாளர் அமைப்பு

யுத்தப் பிரதேசங்களுக்கே சென்று செய்திகளை வழங்கத் தயங்காதவர்கள் பத்திரிகையாளர்கள்.

உயிராபத்தையும் பொருட்படுத்தாது பல பத்திரிகையாளர்கள் வெளிநாடுகளில் இக் கடமையைச் செய்துள்ளனர்.

கடமைகளின் போது சிலர் உயிரையும் இழந்துள்ளனர்.

இலங்கையின் வடக்கு, கிழக்கில் யுத்தம் நடைபெறும் பகுதிகளுக்கோ பத்திரிகையாளர்கள் செல்ல அனுமதியில்லை. இதனால் இராணுவம் அழைத்துச் செல்லும் பகுதிகளுக்கு மட்டுமே பத்திரிகையாளர்கள் செல்ல முடியும்.

இத்தடையை மீறி உள்ளூர் பத்திரிகையாளர்களோ அல்லது வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களோ இதுவரை யுத்தப் பகுதிகளுக்குச் சென்றதில்லை.

ஆனால், பிரிட்டிஷ் 'சன்டே ரைம்ஸ்' பத்திரிகையின் பெண் பத்திரிகையாளரான மாரி கொல்வின் இராணுவத்தின் அனுமதி இல்லாமலேயே வன்னி யுத்தப் பகுதிக்குச் சென்று ஒரு பரபரப்பை ஏற்படுத்தி விட்டார்.

வன்னி சென்று திரும்பும் போது துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த அவர் கடந்த 19ஆம் திகதி மேலதிக சிகிச்சைக்காக லண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கிருந்து அமெரிக்கா செல்லவிருந்தார். அவர் ஒரு அமெரிக்கப் பெண்.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து செய்தி சேகரிப்பதற்காக மாரி கொல்வின் மார்ச் 27ஆம் திகதி இலங்கை வந்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் தன்னை வெளிநாட்டுப் பத்திரிகையாளராக அவர் பதிவும் செய்து கொண்டார்.

பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் அனுமதி பெற்று இலங்கை வந்த இவர், வெளிநாட்டு அமைச்சரைப் பேட்டிகாண கால அவகாசமும் பெற்றிருந்தார். ஆனால் அமைச்சரை சந்திக்கவில்லை என தகவல் திணைக்களம் கூறுகிறது.

அரசாங்கத் தகவல் திணைக்களமும் செய்தி ஊடகங்களும் இப் பத்திரிகையாளரின் இரகசிய வன்னிப் பயணம் குறித்து தகவல்களை வெளியிட்டுள்ளன. பத்திரிகையாளர் மாரி கொல்வினும் தனது வன்னிப் பயணம் பற்றிய தகவல்களைத் தெரிவித்துள்ளார்.



மாரி கொல்வின்

வவுனியாவில் இருந்து வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இவர் மோட்டார் வாகனத்திலேயே சென்றார்.

அந்த வாகனத்தில் பயணம் செய்த புலி ஆதரவாளர்களிடம் இராணுவம் வழங்கிய அனுமதிப்பத்திரம் இருந்தது.

பூவரசங் குளம் பகுதிக்குச் செல்வதாக இராணுவ வீதிச் சோதனை நிலையத்தில் கூறுமாறு அவரிடம் தெரிவிக்கப்பட்டது.

''அதிர்ஷ்டவசமாக எவரும் என்னிடம் எதுவும் கேட்கவில்லை'' என்று மாரி கொல்வின் தனது லண்டன் சன்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அனுப்பிய தகவலில் தெரிவித்துள்ளார்.

பயணத்தில் முதல் நாள் இரவு விவசாயக் குடும்பம் ஒன்று அவருக்கு உணவு வழங்கியது. மன்னாருக்கு அருகேயுள்ள ஒரு பாடசாலையின் தரையில் அவர் உறங்கினார். பாடசாலை அதிபருடன் இரவு நீண்ட நேரம் உரையாடலில் ஈடுபட்டார்.

மறுநாள் காலை இராணுவத்தின் காட்டுச் சீருடையை ஒத்த உடையில் துவக்கு, கைக்குண்டுகள் சகிதம் பத்து புலி உறுப்பினர்கள் வந்து அவரை அழைத்துச் சென்றனர். சீரழிந்த முந்திரிகை தோட்டமொன்றின் வழியாக ஒரு டிராக்டரில் அவர்கள் பயணம் செய்தனர்.

குறுக்குப் பாதை ஒன்றை அடைந்து அடர்ந்த காடு தென்படும் வரை பயணம் தொடர்ந்தது.

சூரியன் மறையும் வேளை பயணத்தின் அடுத்த கட்டம் தொடங்கியது.

ஆறு ஒன்றை அவர்கள் கடந்து செல்ல வேண்டியதாயிற்று.

இரவு 9 மணியளவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையிலான பெருந்தெருவைக் கடந்து சென்று மல்லாவியை அடைந்தனர்.

மல்லாவியை அடைந்த பின்பே தனக்கு நிம்மதி ஏற்பட்டதாக மாரி கொல்வின் தெரிவித்துள்ளார்.

இரண்டு வாரங்களை அவர் வன்னியில் செலவிட்டார். அங்கிருந்து லண்டனில் உள்ள தனது பத்திரிகைக்கு அவர் செய்தியும் அனுப்பி இருந்தார்.

புலி உறுப்பினர்கள் அவரை மீண்டும் வவுனியாப் பகுதிக்கு அழைத்து வந்தனர்.

இவ்வாறு அழைத்து வரும் பொழுதே மடு வீதியில் உள்ள பிரமணாலங்குளம் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் இவர் காயமடைந்தார்.

கடந்த 16ஆம் திகதி இரவு 9.45 மணியளவில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

அரசு அறிவித்த புத்தாண்டு தாக்குதல் ஓய்வு முடிவடைய சில மணி நேரம் இருக்கையிலேயே இது நடந்துள்ளது.

தாக்குதலில் காயமடைந்த பத்திரிகையாளர் ''ஹெல்ப்'', ''ஹெல்ப்'' என கூச்சலிட்டார். இராணுவத்தினர் வந்து அவரைத் தூக்கிச் சென்றனர்.

இச்சம்பவம் குறித்து வவுனியா இராணுவ கட்டளையிடும் அதிகாரி ஒருவர் வெளிநாட்டுச் செய்திச் சேவை ஒன்றுக்கு பின்வருமாறு கூறியுள்ளார்.

''கருமை நிற உருண்டைகள் தூரத்தில் உருளுவதைக் கண்டோம். இராணுவ பாதுகாப்பு வலயங்களில் இவ்வாறு புலிகளே நுழைவார்கள். சில வேளைகளில் காட்டுப் பன்றிகளும் இவ்வாறு நுழையும்.

''அவ்வேளையில் அத்திசையில் தாக்குதல் நடத்துவதே எவரும் செய்யக் கூடிய காரியம் ஆகும். இரு தரப்பினரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். கைக்குண்டுகளும் எறிந்தனர். வெளிநாட்டுப் பெண்ணுடன் இருந்த புலிகள் தப்பியோடி விட்டனர்''.

இவ்வாறு அந்த இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

இப் பெண் பத்திரிகையாளர் முன் அனுமதி இல்லாமல் வன்னிக்குச் சென்று வந்ததே இச் சம்பவம் அனைத்துக்கும் காரணம் என்று அரசு தரப்பில் கூறப்படுகிறது.

யுத்தம் குறித்து செய்தி சேகரிக்க பத்திரிகையாளர்களுக்கு உரிய அனுமதியும் வசதியும் வழங்கப் பட்டிருக்குமேயானால் இந்த துர்ப்பாக்கிய சம்பவம் இடம் பெற்றிருக்காது என்று சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது.

பத்திரிகையாளர் மாரி கொல்வின் அனுமதியின்றி யுத்தப் பிரதேசத்துக்குச் சென்றிருப்பது எவ்வகையிலும் தவறாகாது எனவும் ஒரு பத்திரிகையாளர் என்றவகையில் தனக்குள்ள உரிமையைப் பயன்படுத்தியிருக்கும் செயலே அது எனவும் ஊடகவியலாளர் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

—அவதானி

---

## நல்லதைச் செய்

ஓ....மனிதர்களே!
இரும்புத் தண்டவாளங்கள் கூட
உங்களுக்காக தங்கள் உடலை
கரும்பாகப் பிழிந்து
அரும்பணியாற்றுகின்றன!

பாரிய விலைக்கொண்ட
பாதரட்சைகள் கூட
உங்கள் பாதங்கள்
மிதிப்பதைத மதிப்பாக கருதி
மண்டியிட்டுக் கிடக்கின்றன.

ஆனால் மனிதர்களே நீங்கள்
அவைகளுக்காக செய்வதெல்லாம்
அநியாயமும் அக்கிரமும் தானே!

—எம்.ஜே. அன்வர் அலி

## உணர்வது எப்போ?

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
ஒப்பற்ற வேதத்தின் உண்மை அது
நன்றாய் வாழ்ந்தார் — நம் முன்னோர்கள்
இன்றென்ன கோலம் வந்தது நமக்கு?
இழவு வீடாய்ப் போனது வாழ்க்கை
சுயநலம் வாழ்வின் வேதமாய்ப் போச்சு
சொத்து சுகங்கள் வாழ்க்கையாய் ஆனது
அண்ணன் தம்பியை கோட்டுக்கிழுத்து
அவலப்படுத்தும் காலமாய் ஆனது
குடும்பக் குவலயம் குலைந்து தான் போச்சு
கண்ணீர்க் குளத்தில் வாழ்க்கை நீந்துது
ஊரில் சண்டை உலகத்தில் சண்டை
வீட்டில் சண்டை வீதியில் சண்டை
மானிட நேயம் மறந்துதான் போச்சு
மக்கள் மாக்களாய் மாறித்தான் போயினர்.
காக்கையும் புறாவும் கற்றுக் கொடுக்கும்
ஒற்றுமை தன்னை உணர்வது எப்போ?

வி. மாதினி

## இன்றைய இளைஞன்

தலை நிமிர்ந்து நட
இளைஞனே!
இவ்வுலகம் உனதே!
இவ்வுலகில் பிறந்தது
பாவம்
என்று நினைத்து
விடாதே!
நினைத்தால்
இலட்சியங்கள்
நிறைவேற
வழியில்லை!

—முகம்மது ரைஸ்

## கறுப்பு வாழ்க்கை

தமிழனாகப் பிறந்ததினால்
போனதெங்கள் வாழ்வு

குருதியிங்கு பொங்குவதால்
மனதிலெல்லாம் தாழ்வு

சாமிகள் பல இருந்தும்
நிம்மதிதான் ஏது?

சமாதானம் வரும் வரையில்
போகின்றோம் தூது

எம்மினமோ நீரில்லாத
கோடை காலப் பயிரு

பல்குழலின் ஓசையிலே
போகுதெங்கள் உயிர்

வசந்தகால பறவையென
வந்தோமே இங்கு

விழிகளின் பார்வையினால்
சிறகொடிந்தோம் நொந்து

அகதியாகி அடிமையாக
அலைகின்றோம் இன்று

அமைதியான வாழ்க்கையிங்கு
வருவதுதான் என்று?

கண்ணீரில்லா வசந்தமான
காலமிங்கு வருமா?

கவலையில்லா இனிமையான
விடிவுதனை தருமா!

இ. விஜயசுமன்

## பயம் என்றால் பயம்

ஊரைச் சொல்லவும் பயம்
பேரைச் சொல்லவும் பயம்
வீட்டிலிருக்கவும் பயம்
காட்டிலிருக்கவும் பயம்
ரோட்டிலிருக்கவும் பயம்
உறக்கப் பேசவும் பயம்
அழவும் பயம்
சிரிக்கவும் பயம்
சிந்திக்கவும் பயம்
இருட்டினாலும் பயம்
விடிந்தாலும் பயம்
விடியுமோ என்றும் பயம்
கண் மூடவும் பயம்
கண்விழிக்கவும் பயம்
சொந்த வீடு என்றாலும்
பயம்
வாடகை வீடென்றாலும்
பயம்
குடியிருந்தாலும் பயம்
குடி பெயர்ந்தாலும் பயம்
அடையாள அட்டை
இருந்தாலும் பயம்
இல்லாவிட்டாலும் பயம்
செக் பொயின்ட்
என்றாலும் பயம்
சுற்றி வளைப்பு என்றாலும்
பயம்
கடல் கடந்து செல்லவும்
பயம்
இந்நாட்டில் வாழவும் பயம்

ஜே.எம். பாரிஸ்

## ''சான்று''

சட்டத்தினால்
நீதியையும்
அதிகாரத்தால்
அமைதியையும்
சண்டையிடுவதால்
சமாதானத்தையும்
சந்தேகத்தால்
சந்தோஷத்தையும்
சந்திப்புக்களால்
பேச்சு வார்த்தையையும்
ஏற்படுத்த முடியாது!
இங்கு நிகழும்
சம்பவங்களே
இதற்கு நல்ல சான்று!

—அ. அரசரெத்தினம்.

## நல்ல தீர்வு வராதா?

ஏறிச் செல்லும் விலைவாசி
இறங்க வழி வராதா?
இங்கே இறங்கிப் போன
பொருளாதார வளம்
ஏற்றம் பெற வழி வராதா?
உறுமிச் செல்லும் வெடியோசை
ஓய வழி வராதா?
தமிழ் இனத்தை உறுத்தும்
இன வாதம் ஒழிக்க வழி வராதா?
மாறி மாறி பேசுகின்ற
தாறு மாறு பேச்சுக்கள்
திசை மாறிப் போக—ஒரு
தீர்வு வராதா?
நாறிப் போகும் புதைகுழிகள்
வெறியாட்டம் போடும்
பாலியல்கள், வல்லுறவு
மாறிப் போக இங்கு ஒரு
மாற்றம் வந்து சேராதா?
திண்டாடும் தமிழர் இனம்
நல்ல தீர்வு பெற்று வாழ—ஒரு
திருப்பு முனை விரைவில் வந்து
இன்னல்களைத் தீர்க்காதா?

—கவிக்குயிலன் சேனையூர்

# மகிழ்ச்சியின் அறிகுறி இராட்சத டிராகன்



இராட்சத டிராகன் விலங்கை சீனர்கள் மிகவும் உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றுகிறார்கள். மகிழ்ச்சியின் அறிகுறியே இராட்சத டிராகன் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அதனால் மிகவும் முக்கியமான கொண்டாட்டங்களின்போதும் தேசிய விழாக்களின் போதும் டிராகன் நடனம் நிச்சயம் நடைபெறுவது வழக்கமாக இருக்கிறது. சீனாவில் தேசிய விழா நடந்தபோது டிராகன் உருவம் ஒன்று உருவாக்கப்பட்டு அதற்குள் கலைஞர்கள் புகுந்து நடனத்தை ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் காட்சி இது.



# காட்டு வாழ்க்கை கசந்து விட்டதா?

வன விங்குகள் அடர்ந்த காடுகளில் சுதந்திரமாக வாழ்ந்து பழக்கப்பட்டிருக்கின்றன. தாவரப்பட்சணி விலங்குகளை மாமிசப் பட்சணி விலங்குகள் கொன்று தின்று உயிர்வாழ்கின்றன. இருந்தபோதிலும் காட்டுக்கே ராஜாவான சிங்கத்துக்குக்கூட இன்று அமைதி இல்லை. காடுகள் அழிக்கப்பட்டு நாடுகள் உருவாக்கப்படுவதால் வனவிலங்குகள் அமைதியுடன் வாழ்வது இனி முடியாத காரியமாகிவிடும். அதற்கு உதாரணமாக இருக்கிறது இந்தக்காட்சி. ஆபிரிக்க நாடான நைரோபியில் ஒரு காட்டுப்பாதையில் வாகனங்கள் விரைந்து செல்கின்றன. இருப்பினும் இந்தச் சிங்கம் நடுக்காட்டிலிருந்து வெளிவந்து நடுவீதியில் இவ்வாறு குந்திவிட்டது. அதையிட்டு எவரும் அலட்டிக்கொள்ளவும் இல்லை. காட்டு வாழ்க்கை கசந்து விட்டதா சிங்கத்துக்கு?



# கதிகலங்கிப் போய்விட்ட காளை மாட்டுச் சண்டை

காளை மாட்டுச் சண்டையில் உலகப் புகழ் பெற்ற நாடு ஸ்பெயின் ஆகும். ஆண்டு தோறும் அங்கே சண்டையிட்டு உயிர்ப்பலியாகும் காளைகள் 40 ஆயிரத்துக்கும் மேல் இருக்கும். கசாப்புக் கடைக்கு அனுப்பப்படும் இந்தக் காளை மாட்டு இறைச்சிக்கு நல்ல மதிப்பு உண்டு. ஆனால் அண்மையில் மாடுகளுக்கு கோமாரி நோய் ஏற்பட்டதை அடுத்து சண்டைக் காளைகளின் இறைச்சி விற்பனை பாதிக்கப்பட்டிருக்கிறது. சுகாதார அதிகாரிகளின் அனுமதியின்றிக் காளை மாட்டு இறைச்சியை விற்பனை செய்ய முடியாது. இதனால் சண்டைக்காளைகளின் உரிமையாளர்கள் கதிகலங்கிப் போயிருக்கிறார்கள்.

# மசாலா mix


## வீடியோ விளையாட்டு மூலம் வீட்டுக்குள் குதூகல ஆட்டம்



"வீடியோ கேம்" எனப்படும் டெலிவிஷன் விளையாட்டுக்கள் இன்று வீடு தோறும் களை கட்டத் தொடங்கி விட்டன. சிறுவர்கள் மாத்திரம் அல்லர். முதியவர்களும், பெண்களும் கூட வீடியோ விளையாட்டில் ஆர்வம் காட்டுகிறார்கள். வீடியோ விளையாட்டுக்களுக்கு வரவேற்பு அதிகரித்ததை அடுத்து புதுப்புது முறையிலான ஆட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கின்றன. இங்கே ஒரு அழகி தனது இரு கால்களையும் கொண்டு இயக்கி மகிழ்வது ஒரு வீடியோ விளையாட்டில் தான்.

# வானத்தைத் தொட்டுவிட துடிதுடிக்கும் கட்டிடங்கள்

நகரங்களை அபிவிருத்தி செய்யும் உலக நாடுகள் வானுயர கட்டிடங்களை நிறுவுவதில் முக்கிய கவனம் செலுத்துகின்றன. மேற்கு நாடுகளில்தான் வானத்தைத் தொட்டுவிடத் துடிக்கும் கட்டிடங்கள் எழுந்து நிற்கின்றன என்று கூறிவிட முடியாது. ஏனெனில் மலேஷியாவின் தலைநகரான கோலாலம்பூரில்தான் உலகிலேயே மிக உயரமான கட்டிடங்கள் இருக்கின்றன. பெட்ரொனஸ் இரட்டைக் கோபுரங்கள் என அழைக்கப்படும் இந்த உயர்ந்த கட்டிடங்களின் எழிற்கோலம் இது. இந்தக் கோபுரங்களுக்குப் போட்டியாக மேலும் எத்தனையோ கோபுரங்கள் உலக நாடுகளில் உருவாகி வருகின்றன.



# ஒளிந்திருக்கும் முகம் எது?

ஏப்ரல்—15, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் அஜித் குமாருடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு:—

1. ஏ.தியாகராஜன், அட்டுத்தளை
2. எம்.எப்.பைஸல் அஹமத், மாத்தறை
3. சுகானா கிறிஸ்டி போல், தலவாக்கலை

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிர்ஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.



கடந்த வாரம் (22.04.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிர்ஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.



இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? தனது தலைநகரின் பெயரை மாற்றிக்கொண்ட மாநிலத்திலிருந்து தமிழகம் வந்து கதாநாயகியாக உயர்ந்தவர் அண்மையில் ஒரு தாடிக்கார இயக்குநரின் மனைவியானவர்.

இந்த முகத்திற்குரிய நடிகையைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதிப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர்ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு — 06.

# விண்வெளியில் வட்டமிடும் இந்திய செயற்கைக் கோள்



ராக்கெட்டின் மாதிரி வடிவத்துடன் டாக்டர் கே.கஸ்தூரி ரங்கன்

இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட ஜி.எஸ்.எல்.வி ரொக்கெட் மூலம் கடந்த வாரம் 18ஆம் திகதி செயற்கைக் கோள் ஒன்று விண்வெளியில் பறக்கவிடப் பட்டிருக்கிறது.

செயற்கைக்கோள் மூலம் செய்திப் பரிவர்த்தனையில் முன்னணியில் இருக்கும் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, கனடா ஆகிய நாடுகளின் வரிசையில் தற்போது இந்தியாவும் சேர்ந்து கொண்டுவிட்டது.

செயற்கைக்கோள் தகவல் பரிமாற்றத்துக்கு இந்தியா தற்போது வேறு நாடுகளில்தான் தங்கியிருக்கிறது. இனிமேல் சுயமாகவே தனது நிலையை வலுப்படுத்தும் நிலைக்கு இந்தியா வந்திருக்கிறது. அத்துடன் வேறு நாடுகளுக்கு செயற்கைக்கோளை வாடகைக்கு விட்டு பணம் சேர்க்கும் நிலைக்கும் இந்தியா உயர்ந்திருக்கிறது.

கடந்த மாதம் 28ஆம் திகதியே இந்த ரொக்கெட்டை விண்வெளிக்கு ஏவ இந்தியா ஆயத்தங்களைச் செய்தது.

சென்னைக்கு அருகே ஆந்திரமாநில எல்லையிலுள்ள ஸ்ரீஹரி கோட்டாவில் இந்தியாவின் மிகப்பெரிய ரொக்கெட் தளம் இருக்கிறது. அங்கிருந்து ஜி.எஸ்.எல்.வி ரொக்கெட்டை விண்வெளிக்கு ஏவுவதற்கு ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டன.

ரொக்கெட்டை ஏவி விடுவதற்கான விசையை அழுத்துவதற்கான நேரத்தின் ஒரு விநாடி முன்பதாகவே முக்கிய கருவியில் தீ பரவி விட்டது. எனவே கம்பியூட்டர் கருவி ரொக்கெட் பறப்பதைத் தடுத்துவிட்டது.

ரொக்கெட் விசையின் வால் பகுதியில் சீறிப் பாய்ந்த தீப்பிளம்புகள் அடங்கிப் போயின. ரொக்கெட் எவ்வித சேதமும் இன்றி அப்படியே ஸ்தம்பித்து விட்டது.

ரொக்கெட் பயணம் நிறுத்தப்பட்டு விட்டது என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத் தலைவர் டாக்டர் கே.கஸ்தூரிரங்கன் தெரிவித்தார்.



ஜி.எஸ்.எல்.வி. ரொக்கெட் வெற்றிகரமாக ஏவப்படும் காட்சி.

ஏற்பட்ட தவறைத் திருத்திக் கொண்டு வெகு விரைவில் ரொக்கெட்டை விண் வெளிக்கு ஏவும் முயற்சியை மேற்கொள் வோம் என்று கே. கஸ்தூரிரங்கன் தெரிவித்தார். அவ்விதமே ரொக்கெட் மூலம் செயற்கைக்கோள் அனுப்பப் பட்டிருக்கிறது.

இந்தியா முதன் முதலில் 1979ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10ஆம் திகதி எஸ்.எல்.வி ரக ரொக்கெட்டை விண்ணில் ஏவியது. படிப்படியாக தரத்தை உயர்த்தி பி.எஸ்.எல்.வி ரக ரொக்கெட்களை விண்ணில் ஏவியது. 1999ஆம் ஆண்டு மே 26ஆம் திகதி பிரதமர் வாஜ்பாய் முன்னிலையில் பி.எஸ்.எல்.வி—சி2 ரக அதி நவீன ரொக்கெட் ஏவப்பட்டது. இந்தியா வர்த்தக ரீதியில் முதல் முதலில் ஏவிய ரொக்கெட் இதுதான்.

பி.எஸ்.எல்.வி ரக ரொக்கெட் சுமார் 900 கிலோ எடை உள்ள செயற்கைக் கோளை மட்டுமே ஏவும் திறன் கொண்டது. வேகம் சற்றுக் குறைவுதான். எனவே அதிக எடை உள்ள செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தக்கூடிய அதிவேக அதி நவீன ரொக்கெட்டுகளை தயாரிக்க இந்திய அரசு தீர்மானித்தது.



ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள ராக்கெட் ஏவுதளத்தில் ஜி.எஸ்.எல்.வி. ராக்கெட் விண்ணில் ஏவப்படுவதற்கு தயாராகிறது.

அதன்படி 1990 ஆம் ஆண்டு ஜி.எஸ்.எல்.வி ரக ரொக்கெட் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டது. 10ஆண்டுகளாக தீவிரமாக செயல்பட்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி விஞ்ஞானிகள் நவீனரக ரொக்கெட்டைத் தயாரித்தனர். இதற்காக 1400 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. முழுக்க முழுக்க இந்திய தொழில்நுட்பத்தில் இந்த ரொக்கெட் தயாரிக்கப்பட்டது.

# ஏ. ஆர். வை. தங்கக் கிண்ணம் இலங்கைக்கு!



அணித்தலைவர் சனத் தங்கக் கிண்ணத்தைப் பெறுகிறார்



வெற்றியில் குதூகலிக்கும் வீரர்கள்

ஏப்ரல் 8 முதல் 20 வரை சார்ஜாவில் நடைபெற்ற ஏ.ஆர்.வை தங்கக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இலங்கை அணி அபாரமான வெற்றியீட்டியுள்ளது.

ஆரம்பச்சுற்றில் நான்கு போட்டிகளிலும் பாகிஸ்தான் அணி வெற்றியீட்டியது. இலங்கை ஒரேயொரு போட்டியில் வெற்றியீட்டி ஓட்ட வீத அடிப்படையில் இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

சார்ஜா அரங்கத்தில் பாகிஸ்தான் ஆதரவாளர்களே அதிகமாக இருப்பார்கள். இதனால் பாகிஸ்தான் அணி சாம்பியனாகும் என்றே எதிர்பார்க்கப்படுவது வழமை. இது உளவியல் ரீதியில் எதிரணிக்குப் பாதகமாகும். ஆனால் இதை முற்றாகப் புறக்கணித்து விட்டு துடிப்புடன் விளையாடினார்கள் இலங்கை வீரர்கள்.

முதலில் துடுப்பெடுத்தாடக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி அணித்தலைவர் சனத், உபதலைவர் மார்வன் அத்துபத்து, மஹேல ஜயவர்தன ஆகியோர் அரைச் சதங்களைக் குவித்ததன் மூலம் இலங்கை அணி 297 ஓட்டங்களைப் பெற்றது. இச்சுற்றுப் போட்டியில் இன்னிங்ஸ் ஒன்றில் ஒரு அணி பெற்ற ஆகக் கூடுதலான ஓட்ட எண்ணிக்கை இது.

பெருந்தொகையான ஓட்ட இலக்கை அடைய வேண்டியிருந்ததால் பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்களும் வேகமாக ஓட்டங்களைக் குவிக்க முற்பட்டனர். ஆரம்பக் கட்டத்தில் ஓட்டங்கள் வேகமாகக் குவிந்தாலும் மறுபுறத்தில் விக்கெட்டுகளும் வேகமாக விழத் தொடங்கின.

சயீட் அன்வர் மாத்திரமே அரைச்சதம் (62) பெற்றார். இளம் வீரர் ஹுமாயுன் ஃபர்ஹாட் 39 ஓட்டங்களைக் குவித்தார். எதிர்பார்ப்புக்குரிய வீரர்களான சஹிட் அஃப்ரிடி, இன்ஸமாம் உல் ஹக், யூனிஸ்கான், அப்துல் ரஸாக் ஆகியோர் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். இதனால் பாகிஸ்தான் அணி 220 ஓட்டங்களையே பெற்றது.



வெற்றிக்கிண்ணத்துடன் இலங்கை வீரர்கள்

இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சற்றும் சளைக்காமல் பந்து வீச்சாளர்களும் தம்பணியை செவ்வனே நிறைவு செய்தனர். தனது முதலாவது ஓவரிலேயே நுவன் சொய்ஸா 2 விக்கட்டுகளைக் கைப்பற்றினார். சமிந்த வாஸ் மூன்று விக்கெட்டுகளையும், முத்தையா முரளிதரன், டில்ஹார பெர்னாண்டோ ஆகியோர் தலா 2 விக்கட்டுகளையும் வீழ்த்தினர்.

சனத் ஜயசூரிய ஒரு விக்கட்டையே கைப்பற்றினார். ஆனாலும் அவருக்கு அது முக்கியமானதொரு விக்கட்டாகும். ஒரு நாள் போட்டிகளில் சனத் ஜயசூரிய வீழ்த்திய 200 ஆவது விக்கட் அது.

களத் தடுப்பிலும் இலங்கை வீரர்கள் சோடைபோகவில்லை. பாகிஸ்தான் வீரர்கள் பல பிடிகளைத் தவறவிட்டமை இலங்கையின் ஓட்ட எண்ணிக்கை அதிகரிக்க உதவியது. ஆனால் இலங்கை வீரர்களோ கடினமான பிடிகளைக் கூட அனாயசமாகக் கைப்பற்றினார். நீண்ட காலத்தின் பின் களத்தடுப்பில் இலங்கை அணியினர் பிரகாசித்த போட்டி இது.

துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத் தடுப்பு என சகல துறைகளிலும் திறமைகாட்டி 77 ஓட்டங்களால் வெற்றியை சுவீகரித்தது இலங்கை.

இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்றிய மற்றொரு அணியான நியூஸிலாந்தில் முக்கிய வீரர்கள் பலர் இடம் பெறவில்லை. இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிப்பதற்காகத்தான் அவ்வணி இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்ற இணங்கியது. ஆனாலும் ஏனைய அணிகளுக்கு சவாலாக விளங்கத் தவறவில்லை நியூஸிலாந்து. இத்தொடரில் நியூஸிலாந்து வீரர் மத்தியூ சின்கிளெயர் இரண்டு சதங்கள், ஒரு அரைச்சதம் உட்பட 304 ஓட்டங்களைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் — சிங்கள புத்தாண்டு காலத்திலேயே இச்சுற்றுப் போட்டி நடைபெற்றது. புதுவருடத்தைக் கொண்டாட வேண்டிய வீரர்கள் தமது குடும்பத்தினரைப் பிரிந்திருந்து போட்டிகளில் பங்குபற்றினர். ஆனாலும் முழு இலங்கைக்கும் புத்தாண்டுப் பரிசாக ஏ.ஆர்.வை தங்கக் கிண்ணத்தை வென்று வந்திருக்கிறார்கள் இலங்கை கிரிக்கெட் அணியினர்.

**சார்ஜா கிரிக்கெட் பரிசுப் போட்டி!**

சுடர் ஒளி நடத்திய 'சார்ஜா கிரிக்கெட் பரிசுப் போட்டி'

முடிவுகள் அடுத்த இதழில் வெளிவரும்

சுடர் ஒளி










# பித்தன் பதில்கள்

கே. பானுமதி, கரவெட்டி.
கே : பித்தனே...! எரிபொருள்களின் விலை கடந்த ஆறு மாதங்களில் மூன்றாவது தடவையாக உயர்த்தப்பட்டு விட்டதே. இப்படியே போனால் விலைவாசி உயர்வு எங்கே போய் நிற்கப் போகிறது?.
ப : விலைவாசி உயர்வு உலகம் முழுவதையுமே ஆட்டம் காண வைத்துவருகிறது. ஆனால் இங்கு யுத்தம் என்ற போர்வைக்குள் இதற்கெல்லாம் நியாயம் காண்பிக்கப்பட்டு வருகிறது.

சந்திரகுமார், மன்னார்.
கே : பித்தனே...! யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியா சென்ற ஒருவர் உலகிலேயே பெரிய தோசை ஒன்றைத் தயாரித்து சாதனை புரிந்துள்ளாரே!
ப : இது ஒரு சாதனைதான். ஆனால் யாழ்ப்பாணத்தில் தற்பொழுது நடைபெறும் தர்பாரின் கீழ் இப்படி எத்தனையோ சாதனைகளை நிலைநாட்டப் போகினம். இதற்கு விரைவில் முடிவு கட்டப்படா விட்டால் ஆபத்துத்தான்!




மதன், திருகோணமலை.
கே : பித்தனே பெண்களை 'வாழ்விழந்தவள்' என்று கூறுவது போல் ஆண்களைக் கூறுவதில்லை. ஏன் அப்படி?
ப : ஆண்களுக்கு ஒரு வாழ்வு முடிந்தால் இன்னும் பல வாழ்வுகள் உண்டு என்று அர்த்தப்படலாம்.

எஸ்.ஜோதினி, பண்டாரவளை.
கே : ஆண்களை விட பெண்களுக்கு ஆயுள் அதிகமாமே....?
ப : ஓய்வு அதிகம் அதனால் தான்.

ஏ.எல்.எம். இர்சாத், தெமட்டகொடை
கே : ஆண்களோடு போட்டியிட வேண்டுமென டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் கூறுவது பற்றி...?
ப : முதலில் அவர் பெண்களுக்கான போட்டியில் முதலிடத்தை பெறட்டும். அவரது அக்கா வீனஸ், ஹிங்கிஸ், டெவொன்போர்ட் என்று பலர் செரீனாவை விட முன்னணியில் இருக்கிறார்களே!



க.ஷர்மிளா, மருதானை.
கே : பித்தனே மூளை என்பது என்ன?
ப : ஒரு மனைவியிடம் கணவன் இறுதியாகத் தேடுவது மூளையைத் தான். அவன் தேட வேண்டியதை எல்லாம் தேடிக் கண்டறிந்த பிறகு இறுதியாகத் தேடுவது அதனைத் தான்.

பா.சோழன், நல்லூர்.
கே : பித்தனே...! அண்மையில் ரசித்த ஜோக் ஒன்று சொல்லுங்களேன்.
ப : அரசியல் வாதி ஒருவர் நாயுடன் 'வாகிங்' போகிறார். அப்பொழுது எதிரே வந்த ஒருவர் ''என்ன கழுதையுடன் போகிறாய்?'' என்று கேட்கிறார். அதற்கு அரசியல்வாதி இது கழுதை அல்ல நாய் என்கிறார். எதிரே வந்தவர் சிரித்துக் கொண்டு, நான் உங்களிடம் கேட்கவில்லை, நாயிடம் கேட்டேன் என்கிறார்.

த.கோமதி, திருகோணமலை.
கே : பித்தனே முத்தம் என்றதும் உங்கள் நினைவுக்கு வருபவர் யார்?
ப : நடிகைகளிடம் கேட்க வேண்டிய கேள்வி இது.

வி.அருமை நாயகம், வவுனியா.
கே : பித்தனே...! விண்ணுக்கும் மண்ணுக்கும் பட விளம்பரத்துக்கான ஒரு முன் முயற்சி தானாமே தேவயாணி – ராஜகுமாரன் இரகசியத் திருமண அறிவிப்பு.
ப : இருக்கலாம். விளம்பர யுகத்தில் இது ஒன்றும் ஆச்சரியமான செய்தி இல்லை.

என்.சுதன், மாளிகாவத்தை.
கே : வாழ்க்கையில் வெற்றிகரமான கணவன் யார்?



ப : மனைவி செலவு செய்வதை விட அதிகமாகச் சம்பாதிக்கக் கூடியவர்.

எஸ்.எல்.எம். ரபீக், கண்டி.
கே : வக்கார் யூனுஸ் பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைவராக நீடிப்பாரா?
ப : நிச்சயமில்லை. மொயின் கான் குணமடைந்ததும் அவருக்கே மீண்டும் தலைமைப்பதவி வழங்கப்படும் எனத் தெரிவிக் கப்படுகிறது.



ரா.சேகர், கம்பளை
கே : பாபர் மசூதி இடிப்பின் எதிரொலி இன்னும் கேட்டவண்ணம் இருக்க தலிபான் அரசின் புத்தர்சிலை தகர்ப்பு மட்டும் ஓய்ந்து விட்டதே. இது ஏன்?
ப : உலக நாடுகள் எல்லாம் எப்படிக் கத்தினாலும் தலிபான் அரசு தான் நினைத்ததைச் செய்யும் என்பதால் தான்.

எம். மன்சூர், மருதானை
கே : பித்தனே...! கொழும்பில் மீண்டும் இஸ்ரேல் தூதரகத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதாமே!
ப : முன்னைய பண்டாரநாயக்க அரசுகள் முஸ்லிம் மக்களின் நலன் கருதியும் அவர்களது வாக்குகளைப் பெறுவதற்காகவும் இஸ்ரேலுடனான உறவுகளைத் துண்டித்திருந்தன. ஆனால் இன யுத்தம் முஸ்லிம்களின் நலனை இரண்டாவது இடத்துக்குத் தள்ளிவிட்டது.

பா. நிரஞ்சன், திருகோணமலை
கே : தமிழ்நாட்டில் கோவணத்துடன் தேர்தல் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யச் சென்ற ஒருவர் பொலிஸாரினால் திருப்பி அனுப்பப்பட்டாராமே...!
ப : துணிவிலை உயர்வை எதிர்த்து கோவணத்துடன் நாடாளுமன்றம் சென்றவர் முன்னாள் காலி எம்.பி தஹநாயக்க. இந்தியாவுடன் ஒப்பிடும் போது இலங்கையில் தனிநபர் சுதந்திரம் அதிகம் போல.

எஸ். வாணி, மட்டக்களப்பு
கே: இன்ரநெற்றில் இளசுகளுடன் அரட்டை அடிக்கும் பழக்கம் பித்தனுக்கும் உண்டா?
ப: இன்ர நெற்றில் அரட்டை அடிக்கும் பிள்ளைகளைக் கட்டுப்படுத்துவது தற்பொழுது பெற்றோருக்குப் பெரிய பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது.

எஸ். ஜேக்கப், நீர்கொழும்பு.
கே : பித்தனே! மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பான காம்ப் டேவிட் முத்தரப்பு ஒப்பந்தம் போன்று சந்திரிகாவும் பிரபாவும் நோர்வேப் பிரதமரும் ஒப்பந்தம் செய்தால் எப்படி இருக்கும்?
ப : கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இன்னும் சமாதான முயற்சிகளில் ஒரு முன்னேற்றத்தையும் காணவில்லையே!


LINK-Salt to taste LINK-Salt to taste LINK-Salt to taste
சிறந்த தரத்திற்கான சர்வதேச விருதுபெற்ற லிங்க் அயடீன் கலந்த உப்பு
Link Imports & Exports (Pvt)Ltd.
86/1, Chatham Street, Colombo - 01.
Tel : 321085 TeleFax : 435959E-Mail :link@scienceland.lk


## சக்தி TV சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் (நேரடிஒளிபரப்பு) குட்டிச் சுட்டி |
| 11.30-12.00 | | | | | | | |
| 12.00-12.30 | | | | | | பொலிஸ் டயரி | |
| 12.30-13.00 | | | | | | ஸ்டார் சமையல் | இசைக்கோலம் |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்னி | சக்தி வீக்கெண்ட் மெட்னி |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | வசந்த நிலா |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | கோபி |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரை விமர்சனம் | அரட்டை அரங்கம் | ஸ்டார்ஷோ |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | இளமை புதுமை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | காற்றாய் வருவேன் | கேள்வியின் நாயகனே | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | புதுப்பாடல் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | சாவித்திரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | கதைநேரம் | தித்திக்கும் ஓசை | சத்யா | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | நிம்மதி உங்கள்... | ஜன்னல் |

# இலவச பாட நூல்கள் தாமதம்; அரசு அசமந்தப் போக்கு!

## ஒதுங்கி நின்று தமது கதிரைகளைக் காப்பாற்ற முயலும் அதிகாரிகள்

குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களுக்கான இலவசப் பாடநூல்களை முழுமையாக உரியவேளையில் வழங்க அரசு பின்னடித்து வருகிறது.

இது தொடர்பாக யாழ். கல்விச் சமூகத்தில் இருந்தும் வேறு பல தரப்புக்களில் இருந்தும் நீண்டகாலமாகக் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. எனினும் அரசு அவற்றுக்குச் செவிமடுப்பதாகத் தெரியவில்லை.

குடாநாட்டில் உள்ள கல்வி அதிகாரிகளும் சரி, மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரிகளும் சரி இது விடயத்திலும் இது போன்ற மாணவர்களின் வேறு பல கல்விப் பிரச்சினைகளிலும் ஒதுங்கி நின்று தங்கள் கதிரைகளைக் காப்பாற்றிக் கொள்ளவே முனைகின்றனர்.

இந்த ஆண்டுக்கான இலவசப் பாட நூல்கள் இன்னமும் யாழ். மாணவர்களுக்குச் சீராக வழங்கி முடிக்கப்படவில்லை.

கிடைத்த நூல்களையும் வலயங்களிடையே பங்கிட்டுக் கொள்வதில் கல்வி அதிகாரிகளிடையே இழுபறி ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

முதலாம் தவணை முடிவடைந்த பிறகும் புத்தகங்கள் கிடைக்காததால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த நிலைமையைச் சீர்செய்ய எவரும் முன்வராத நிலையில் யாழ்ப்பாணத்துப் பெற்றார் ஒருவர் இது விடயத்தில் அரசிடம் நீதிகேட்டு சட்ட நடவடிக்கையில் இறங்கியிருக்கிறார்.

பாடநூல் விநியோகம் குடாநாட்டில் சீராக நடைபெறாததால் தனது மகனின் கல்வியும் ஏனைய மாணவர்களின் கல்வியும் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து சுன்னாகத்தைச் சேர்ந்த அ.பரமேஸ்வரன் என்ற தந்தை சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தல் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

தனது மகனுக்கு இலவசப் பாடநூலை வழங்காதது அடிப்படை உரிமை மீறல் என்று இவர் தெரிவிக்கிறார்.

அரசு மீது வழக்குத் தொடர முன்னேற்பாடாகவே சட்டமா அதிபருக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார் அந்தத் தந்தை.

அத்துடன் நின்றுவிடாமல், தனது மகனின் கல்வி கற்பதற்கான அடிப்படை உரிமை மறுக்கப்பட்டதற்கு நஷ்டஈடு கோரி கல்வி அமைச்சருக்கும் சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளுக்கும் சட்டத்தரணி ஊடாக கேள்விக் கடிதங்களையும் (Letter of Demand) அவர் அனுப்பி வைத்திருக்கிறார்.

குட்டக் குட்டக் குனிபவன் மடயன் என்பதால் தட்டிக் கேட்க துணிவுடன் செயலில் இறங்கியிருக்கிறார் அந்தத் தந்தை. அவரது முயற்சிக்கு பெற்றோர்கள் மத்தியில் இருந்து பெரும் வரவேற்புக் கிடைத்திருக்கிறது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் உட்பட அனைத்தையுமே ஸ்ரீலங்கா அரசுகள் காலம் காலமாக மறுத்துவருகின்றன. கல்வித்துறை மட்டுமன்றி சகல துறைகளிலும் அநீதி இழைக்கப்படுகிறது. இந்த அநீதிகளை எல்லாம் நாட்டின் அரசமைப்புச் சட்டத்தின் கீழ் தட்டிக்கேட்க — நீதி கேட்க — எவருமே முன்வருவதில்லை.

இதற்குப பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் எந்த அரசு தமிழர்களின் அடிப்படை உரிமைகளை அப்பட்டமாக மீறுகின்றதோ அந்த அரசையே தட்டிக்கேட்க அரசமைப்புச் சட்டத்தில் வசதி வாய்ப்புகள் உள்ளன.

நீதி கிடைக்காவிடினும் அதற்காகப் போராடுவது எவ்வளவோ மேலானது.

பாதிக்கப்பட்ட மாணவனின் தந்தையின் முயற்சி பலருக்கு வழிகாட்டும்— வழிகாட்டவும் வேண்டும்.

### குடாநாட்டில் உள்ள குறைகளில் ஒன்று

போரினால் அழிந்துபோன குடாநாட்டைப் புனரமைப்பதற்கு முழு வீச்சில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று செய்திகள் வெளியாகின்றன.

இதற்கென அதிகாரசபை ஒன்றும் தனியான அமைச்சும் கூட அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் யதார்த்த நிலை வேறுவிதமாக இருக்கிறது.

குடாநாட்டில் சேதமடைந்த கட்டடங்களைத் திருத்த அல்லது பெரிய கட்டடத் தொகுதிகளை அமைக்கத் தகுதி வாய்ந்த கட்டட ஒப்பந்தக்காரர்கள், கட்டட பொறியியல் நிறுவனங்கள் இல்லை.

அங்குள்ள சில கட்டட ஒப்பந்தக்காரர்கள் பெரிய அளவிலான கட்டட நிர்மாணப்பணிகளைப் பொறுப்பேற்கத் தயங்குகிறார்கள்.

கட்டட நிர்மாணிப்புக்கான மூலப்பொருள்கள் எதனையும் தற்போதைய சூழ்நிலையில் இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியாது.

திடீரெனத் தலைகீழாக மாறிவிடக் கூடிய நிச்சயமற்ற இயல்பு நிலைமை யாழ்ப்பாணத்தில் உள்ளது.

இவை இரண்டுமே கட்டட நிர்மாணப்பணிகளைப் பொறுப்பேற்க நிறுவனங்கள் பின்னடிப்பதற்குக் காரணம் ஆகும்.

நாட்டின் ஏனைய இடங்களில் உள்ள பிரபல கட்டடப்பொறியியல் நிறுவனங்களும், வெளிநாட்டு நிறுவனங்களும் கூட இதே காரணங்களுக்காக கட்டடப் பணிகளைப் பொறுப்பேற்றுச் செய்யத் தயங்குகின்றன.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு புதிய கட்டடத் தொகுதி ஒன்றை நிறுவும் திட்டம் பொருத்தமான கட்டட ஒப்பந்தகாரர் கிடைக்காததால் இழுபட்டு வருகிறது.

கோப்பாயில் இந்தக் கட்டடத்தை நிறுவுவதற்கான காணியை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் குடும்பத்தினர் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

அங்கு புதிய கட்டடத்தை நிறுவ சுமார் 45 கோடி ரூபா நிதியை சர்வதேச நிறுவனம் ஒன்று வழங்கியுள்ளது.

கட்டடத்தை அமைப்பதற்குப் பொருத்தமான ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்வி கோரப்பட்டு நீண்ட காலமாகியும் கூட வேலையைப் பொறுப்பேற்க எந்த நிறுவனமும் முன்வரவில்லை.

கட்டட வேலைகளைப் பகுதியாகப் பொறுப்பேற்க சில ஒப்பந்தகாரர்கள் தயாராக உள்ளனர். ஆனால் நிதியை வழங்கிய வெளி நாட்டு நிறுவனமோ கட்டட வேலைக்கான ஒப்பந்தத்தைப் பகுதி பகுதியாக வழங்க விரும்பவில்லை. இந்நிலையினால் கட்டட வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

முதலில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பெரும் இடநெருக்கடிக்கு மத்தியில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட தேசிய கல்வியியல் கல்லூரி பின்னர் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கு இடம்பெயர்ந்தது. தற்போது அங்கிருந்து மீண்டும் கோப்பாய்க்கு இடம் மாறியுள்ளது.

விடுதி வசதியின்மை உட்பட பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர்.

### வர்த்தகர்களின் வேதனை

யாழ் நவீன சந்தை புடைவை வர்த்தகர்கள் சிலர் வேதனையோடு வெளியிட்ட தகவல் இது.




யாழ்ப்பாணத்தில் வழமைக்கு மாறாக கடந்த சில வாரங்களாக மழைக்கால நிலை நீடிக்கிறது. யாழ் நகரின் மத்தியில் உள்ள நவீன சந்தைக்கட்டடத் தொகுதிகளில் ஏராளமான புடைவைக் கடைகள் உள்ளன.

முன்னர் இடம் பெற்ற பாரிய குண்டு வீச்சுக்களால் ஏற்பட்ட அதிர்வுகள் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியை ஈடாட வைத்துள்ளன.

பல இடங்களில் சுவர்களிலும் கொங்கிறீட் மேற்தளங்களிலும் வெடிப்புகள், விரிசல்கள். மழைக் காலங்களில் சில கடைகளுக்குள் மழைநீர் கொட்டுகிறது.

அண்மையில் புத்தாண்டு வியாபாரம் மும்முரமாக நடைபெற்ற வேளை விற்பனைக்காக வைத்திருந்த புடைவைகள் மழை நீரில் நனைந்து சேதமடைந்து போனதாக சில வர்த்தகர்கள் ''சுடர் ஒளி''யிடம் வேதனையோடு முறையிட்டிருக்கிறார்கள்.

நவீன சந்தைக் கட்டடத் தொகுதியைத் திருத்துவதற்கு யாழ் மாநகர சபையால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திருத்த வேலைகள் முடிவடைந்த பின்னரும் இந்த நிலை நீடிப்பது குறித்து வர்த்தகர்கள் விசனமடைந்துள்ளனர்.

### வங்கிகளின் நகை அடகு

குடா நாட்டுக்கு சட்டபூர்வமான முறையில் தங்கத்தை எடுத்து வருவதற்கான வழிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

உத்தரவு பெற்ற நகை வியாபாரிகள் முன்பு வங்கிகள் ஊடாகத் தங்கத்தை கொள்வனவு செய்து வந்தனர்.

போர் தீவிரமடைந்து பாதுகாப்பு நிலைமை சீர்குலைந் ததை அடுத்து 1980 களின் முற்பகுதியில் தங்கத்தை விநியோகிக்கும் பணியை வங்கிகள் நிறுத்திக் கொண்டன.

அதன் பிறகு சட்டவிரோதமான முறையிலேயே தங்கம் எடுத்து வரப்படுகிறது.

வங்கிகள் ஊடாகத் தங்கத்தை விநியோகிக்க முடியாமைக்கு குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமையையே அதிகாரிகள் காரணமாகக்காட்டி வருகின்றனர்.

ஆனால் நீண்ட இடைவெளிக்குப் பிறகு யாழ்ப்பாணத்து வங்கிக்கிளைகளில் நகை அடகு பிடிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டு வங்கிகள் ஏட்டிக்குப் போட்டியாக நகை அடகு பிடிக்கும் பணிகளை மேற்கொள்வதாக வாடிக்கையாளர்களுக்கு விளம்பரப்படுத்தி இருக்கின்றன.

சட்டபூர்வமான வழி முறையில் தங்கத்தை எடுத்துவந்து பொற்கொல்லர்களுக்கு விநியோகிக்க அரசு தயங்குகிறது. அதற்கான பாதுகாப்பு நிலைமை குடாநாட்டில் இல்லை என்று கூறப்படுகிறது.

அப்படியானால் வங்கிகளில் பெருமளவு அடகு நகைகளைச் சேமித்து வைக்க எப்படி முடிகிறது? அதற்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்கியது யார்?.

யாழ் நகர பொற்கொல்லர் ஒருவர் எழுப்பியுள்ள நியாயமான கேள்விகள் இவை.

— வலிகாமத்தான்


# Diploma in Multimedia

- ☑ Introduction to Multimedia
- ☑ Micromedia Flash 5.0
- ☑ 3DS Max 3.2
- ☑ Sound Forge 3.1
- ☑ Adobe Premeire 5.5
- ☑ Moho
- ☑ Fire Works

Course fee each Module - 4000/=
Duration - 2 Months

Course Fee : 15000.00 Duration : 9 Months

## Web Page Development

**Fundamental Level**
Introduction www, Internet & E-mail, HTML, Front Page 2000
Course Fee : 2500.00 Duration : 2 Months

**Intermediate Level**
Advance HTML, DHTML, Flash 5.0, Photo Shop 6.0, Fire Works, GIF Animator
Course Fee : 3500.00 Duration : 3 Months

**Advance Level**
Advance HTML, DHTML, Flash 5.0, ASP
Course Fee : 5000.00 Duration : 4 Months

## Advance Diploma in Computer Hardware Engineering

With Monitor Repairing & Networking
Course Fee : 4500.00 Duration : 4 Months

## Electronic, Electrical & Computer Hardware Engineering

- Fundamental of Electronic
- Electronic Circuits
- Fault Finding : Radio, TV, Computer Monitor, Computer Hardware
- Repairing & Maintenance

Duration : 4 Months Course Fee : 7000/=

**கீழ்க்காணும் பாடநெறிகளுக்கான சலுகைக் கட்டணம் 2500.00 மட்டுமே!**
ஒவ்வொரு பாடநெறிகளிலும் முதல் பத்து மாணவர்களுக்கு மட்டுமே இச்சலுகைக் கட்டணம்.

| | |
|---|---|
| JAVA 2 | Visual Basic 6.0 |
| C++ | Freehand |
| ASP | Illustrator |

**முதல் 100 மாணவர்களுக்கு கீழ்க்காணும் கம்ப்யூட்டர் பாடநெறிகளில் 50% கட்டணக் கழிவு**

பிரபல கணினி எழுத்தாளரும் விரிவுரையாளருமான [illegible] நேரடி வழிகாட்டலின் கீழ்

## MS-Office 2000

Introduction to Computing, Microsoft Word 2000, Microsoft Excel 2000, Microsoft Access, Windows 98, Microsoft Powerpoint, Internet & E-mail
Duration : 4 Months
Course Fee: ~~4500.00~~ Special Offer Fee: 2250.00

## Diploma in Computer Studies

Introduction to Computing, Microsoft Word 2000, Microsoft Excel 2000, Microsoft Access, Windows 98, Introduction to Visual Basic 6.0, Basic Concept of JAVA & $C^{++}$
Duration : 4 Months
Course Fee: ~~4500.00~~ Special Offer Fee: 2250.00

மற்றும் பிரபல பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற விரிவுரையாளர்களின் நேரடி வழிகாட்டலின் கீழ்

| COURSE | Course fee | Special Offer Fee |
|---|---|---|
| Diploma in Computerized Accounting | 5750/= | 2875/= |
| Diploma. in Computer. Hardware Engin. | 4750/= | 2375/= |

அனுமதிக்கு முந்துங்கள். இரண்டே நாட்களில்

## Internet, E-mail & Web

Course Fee : 600/= Only

பிரபல கிரஃபிக்ஸ் எழுத்தாளரும் விரிவுரையாளருமான **வித்துவானின்** கிரஃபிக்ஸ் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

### 1. Diploma in Typesetting

Introduction to Computing, Adobe PageMaker 6.5, Corel Draw 10.0, Scanning Techniques, WordArt, TextArt, ClipArt, Paint Brush, Key board Trainning
Duration : 3 Months Course Fee : 3750/=

### 2. Diploma in Graphic Designing

Introduction to Graphics, Adobe PageMaker 6.5, Adobe Photoshop 6.0, Corel Draw 10.0, , Corel Photopaint 10.0, Instant Artist, MS-Publisher, Introduction to Micromedia Flash 5.0.
Duration : 5 Months Course Fee : 7750/=

கிரஃபிக்ஸ் பாடநெறிகளை திறமையாகப் பூர்த்தி செய்யும் அனைத்து மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படும்.

B ICT

**British Institute of Computer Technology**
(Overseas Education Centre)
379-1/5, 1st Floor, Galle Road, Wellawatta. Tel : 01- 552735 (Opposite Delmon Hospital)

## ஆசிரியர் சிவநாயகம் பற்றி சிங்கத்தார் எழுதாதது ஏன்?

# ஏன்?...ஏன்?...ஏன்?

கேள்விக் குளவிகள் என்னைத் துரத்தித் துரத்திக் கொட்டின. காட்டில் அல்ல, விவேகானந்தா மேட்டில்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கமலா மோடி மண்டபத்தில் ஆசிரியர் எஸ்.டி. சிவநாயகத்தின் ஓராண்டு நினைவு தினப் பஜனையும் இரவு விருந்தும் நடைபெற்றன.

ஆசிரியர் சிவநாயகத்தின் துணைவியார் மங்களவதி, பிள்ளைகள் உதயநாயகம், சித்திரா, இந்திரஜித், செந்தில்குமரன் மற்றும் மருமகன் டாக்டர் அருள் இராமலிங்கம் ஆகியோர் பஜனையையும் விருந்தையும் ஏற்பாடு செய்திருந்தனர்.

வெகு உருக்கமான பஜனை உள்ளத்துக்கும், அருமையான விருந்து வயிற்றுக்கும் இதமாக இருந்தன. அப்போது தான் இந்த குளவிக் கொட்டுதலும் நடந்தது.

ஆசிரியர் திரு.எஸ்.டி. சிவநாயகம் இலங்கையின் தலை சிறந்த தமிழ்ப் பத்திரிகையாளர். எல்லாத் துறைகளிலும் தமது எழுத்தாற்றலை முழுமையாகக் காட்டியவர். தமிழ்ப் பத்திரிகைத் துறைக்குப் புதிய பரிமாணம் கொடுத்து அதை வளர்த்தவர்.

இவை மட்டுமல்ல. அவரைப் போல் வேறு எவரும் இந்த நாட்டில் பத்திரிகையாளர்களையும் எழுத்தாளர் களையும், கவிஞர்களையும் உருவாக்கித் தரவில்லை. இலங்கையில் உள்ள தமிழ்ப் பத்திரிகைகளில் மட்டு மல்லாமல் ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளிலும், ரேடியோ, டி.வி. நிலையங்களிலும் ஆசிரியர் எஸ்.டி.சிவநாயகத்திடம் பயிற்சி பெற்றவர்களே பெரும் எண்ணிக்கையில் பெரிய பதவிகளில் இருக்கிறார்கள். அவரை இந்த நாடு நன்கு அறியும். தமிழகத் தமிழர்கள் அறிவார்கள். ஏன், தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் கண்டங்கள் அனைத்தும் உள்ள தமிழர்களும் அறிவார்கள்.

அவரின் ஓராண்டு நினைவையொட்டியாவது அவரைப்பற்றி நீங்கள் சுடர் ஒளியில் ஏதாவது எழுதியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் அல்லவா? ஏன் எழுதவில்லை? ஏன்.... ஏன்?... ஏன்...?

இப்படிப் பலர் என்னிடம் கேட்டார்கள். நியாயமான கேள்விதான். இத்தனைக்கும் அவர்கள் என்னைச் சுடர் ஒளி மூலம் மட்டுமே அறிந்து கொண்டவர்கள். என்னுடன் நேரடிப் பரிச்சயம் இல்லாதவர்கள். என்னுடைய முன்புலத்தை அறியாதவர்கள்.

ஆசியர் சிவநாயகம் மீது அவர்கள் வைத்திருக்கும் அன்பையும் அபிமானத்தையும் பெருமதிப்பையும் கண்டு புளகாங்கிதம் அடைந்தேன்.

சுடர் ஒளி இப்போது எடுத்து அடிவைக்கும் எட்டு மாதக் குழந்தை. அதன் மீது வாசகர்கள் எவ்வளவு பற்றும் பாசமும் வைத்து அதனை அணைத்து மகிழ்கிறார்கள்.!

ஆசிரியர் சிவநாயகம் ஏற்கனவே பெருமைக்கு உரியவர். சுடர் ஒளியில் அவரைப் பற்றி எழுதினால் சுடர் ஒளிக்கும் பெருமை சேருமே என்று கருதிக் கேள்வி கேட்கிறார்களே, அதை எண்ணி எண்ணிப் பூரிப்பு அடைந்தேன்.

இந்த நிலையில் என்னுடைய பாடசாலைக் காலத்தில் இருந்தும் பின்னர் பத்திரிகைத் தொழிலில் நான் காலடி எடுத்து வைத்த காலத்திலிருந்தும் என்னுடன் மிகவும் பரிச்சயமானவர்கள் என்னை அணுகினார்கள். அவர்களில் பலர் ஆசிரியர் சிவநாயத்தையும் நன்கு அறிந்தவர்கள். அவருடைய ஆப்த நண்பர்களும் கூட.

என்னை ஒரு நன்றி கெட்டவன், உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்பவன் என்ற தோரணையிலேயே அவர்கள் என்னை உரிமையோடு குடைந்தார்கள்.

ஆசிரியர் சிவநாயம் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமற்றவராக இருந்து அருஞ்சேவை ஆற்றியவர்.

அவரை அறிந்தவர்களும் அவரோடு அவ்வப் போது பணியாற்றியவர்களும் அவரைப் பற்றிப் பல்வேறு பத்திரிகைகளிலும் எழுதிவிட்டார்கள்.

பிற்காலத்தில் பத்திரிகைப் பணியோடு அவர் ஆற்றிய அளப்பரிய சாயிபணி பற்றியும் பலரும் எழுதியிருக்கிறார்கள்.

பத்திரிகைத் துறையில் ஆசிரியர் சிவநாயகம் விண்ணாதி விண்ணன், ஜாம்பவான், நடமாடும் பல்கலைக்கழகம், பேராசான் என்றெல்லாம் பலரும் தத்தமக்குத் தெரிந்த உண்மைகளை எழுதினார்கள்.

ஆசிரியர் சிவநாயகம் வெறுமனே பத்திரிகைத் துறையோடும் சமயத்துறையோடும் நின்று விடவில்லை. அவர் பல்வேறு துறைகளிலும் அகலக்கால் வைத்து வெற்றி கண்டவர். அவர் அரசாங்கச் சான்றிதழ் பெற்ற ஒரு வைத்தியர், சிறந்த சோதிடர். இரத்தினக்கல் தொழில் துறையில் படித்துப் பட்டம் பெற்றவர். பல கைத்தொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டவர். அவர் ஒரு புகைப்படக் கலை நிபுணர். நல்லதொரு கலைஞர்.

இந்த விவரங்கள் பலருக்குத் தெரியாதவை.

பத்திரிகைத் துறையில் கூட ஆசிரியர் சிவநாயகம், தினகரன், சுதந்திரன், வீரகேசரி, தினபதி, சிந்தாமணி, சூடாமணி ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியதைத் தான் பலரும் அறிந்திருக்கிறார்கள்.

அவர் நடத்திய சிந்தாமணிப் பத்திரிகையின் விற்பனை ஒரு லட்சத்தை எட்டியது. இலங்கையில் வேறெந்தத் தமிழ்ப் பத்திரிகையும் வாரந்தோறும் இவ்வளவு பிரதிகள் விற்பனையாகியது கிடையாது. இன்றைக்கும் சிந்தாமணியின் சாதனையை எந்தத் தமிழ்ப் பத்திரிகையாலும் முறியடிப்பது என்ன, எட்டக் கூட முடியவில்லை.

முன்கூறிய பத்திரிகைகள் தவிர வேறு சில பத்திரிகைகள், சஞ்சிகைகளையும் ஆசிரியர் சிவநாயகம் ஆரம்பித்து நடத்தியிருக்கிறார். அதன் முழு விவரம் எங்களுக்கே இப்போது சரிவரத் தெரியவில்லை.

இவற்றையெல்லாம் ஒன்று விடாமல் அறிந்து வைத்திருக்கும் ஒரே பத்திரிகையாளன் நீங்கள் தான். சுதந்திரன் முதல் அவர் கடைசியாக நடத்திய சூடாமணி வரை எல்லாப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் நீங்கள் அவருக்கு அடுத்த படியில் இருந்து சுமார் 45 வருடங்கள் அவருடன் சேர்ந்து பணியாற்றியிருக்கிறீர்கள்.



எஸ்.டி.சிவநாயகம்

பத்திரிகைத் துறையில் இப்படி இருவர் இணைபிரியாது இவ்வளவு நீண்ட காலம் பணியாற்றிய முதல் ஆட்கள் நீங்கள் இருவருமாகத் தான் இருப்பீர்கள் என்று நினைக்கிறோம்.

இன்னும் சொல்லப்போனால் நீங்கள் ஆசிரியர் சிவநாயகத்தின் கீழ் பணியாற்றினாலும் அலுவலகங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில், ஒரே குடும்ப உறுப்பினர்களாகவும், உடன் பிறவாச் சகோதரர்களாகவும் நண்பர்களாகவும் தோழர்களாகவும் பழகியிருக்கிறீர்கள்.

அந்த வகையில் பத்திரிகை விஷயங்களையும் மற்றும் பொதுவான விஷயங்களையும் நீங்கள் இந்த 45 வருடங்களும் கலந்து பேசியிருப்பீர்கள்.

அதனால் பத்திரிகையாளர்களில் நீங்கள் ஒருவர் தான் ஆசிரியர் சிவநாயகத்தை உள்ளும் புறமும் முழுமையாக அறிந்திருப்பீர்கள். அந்த வாய்ப்பு உங்களுக்கு மட்டும் தான் கிடைத்தது. பத்திரிகைத்துறை வித்தைகள் உட்படப் பல்வேறு விஷயங்களையும் அவர் உங்களுக்குச் சொல்லித் தந்திருப்பார்.

ஆகவே அவரிடம் நீங்கள் கண்ட அருட்கொடைகள், குணாவியல்புகள், நிறைகள், குறைகள், அதீத திறமைகள், உணர்வோட்டங்கள், உள்ளக் குமுறல்கள், அணுகுமுறைகள், ஆளுமை, அவர் ஒரு காலத்தில் அரசியலில் பிரவேசிக்க ஆவல் கொண்டிருந்தார் என்று சிலர் கதை அளந்து அவர் மீது களங்கம் கற்பிக்க முயன்றார்களே, அது பற்றிய உண்மைநிலை முதலானவற்றை நீங்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டாமா? அது உங்கள் கடமை என்று நீங்கள் உணரவில்லையா? அவரைப்பற்றி நீங்கள் ஒன்றும் எழுதாமல் நன்றிகெட்டதனமாக நடந்து கொள்ளலாமா? இது முறையா? இது தகுமா?

ஆசிரியர் சிவநாயகத்துக்கும் எனக்கும் இறுதி வரை இருந்து வந்த தொடர்பை நன்கு அறிந்து வைத்திருந்த நண்பர்கள் இப்படி எல்லாம் கேட்டு என்னை நிலை குலைய வைத்துவிட்டார்கள்.

அவர்கள் கூறியவை அனைத்தும் உண்மை. மிகையல்ல. இனியும் இரகசியத்தை வெளியிடாமல் இருக்க முடியவில்லை.

பத்திரிகைத் துறைக்கு என்னை அழைத்தவர் ஆசிரியர் சிவநாயகம்.

தன்னோடு வைத்திருந்து என்னை வளர்த்து எடுத்தவர் ஆசிரியர் சிவநாயகம்.

பத்திரிகைத் துறையில் என்னை நிலைக்க வைத்து அதில் பெரு மகிழ்ச்சியும் ஆறுதலும் அடைந்தவர் ஆசிரியர் சிவநாயகம்.

தமிழ்ப் பத்திரிகைத் துறையில் அவர் அண்டப் பிரமாண்டமாக (Colossus) உயர்ந்து நிற்பவர்.

நான் அவரோடு எப்படிப் பழகியிருந்தாலும் அவர் என்னுடைய குரு.

அவரைக் குருவாகப் பெற்றது நான் செய்த பாக்கியம்.

பணம் படைத்த பல்லாயிரக்கணக்கான மேற்கு நாட்டுப்பக்கத்தவர்களின் குருவாக இருந்த ஒரு சுவாமி மீது எனது குருவுக்கு ஒரு நாட்டம் இருந்தது. அது வேறு ஒன்றுக்குமாக அல்ல, அந்தச் சுவாமியின் ஒரே ஒரு கொள்கைக்காக மட்டுமே.

அந்தச் சுவாமி வேறு யாருமல்லர். ரஜ்னீஷ் சுவாமியார்.

அமெரிக்காவில் தனிக் காலனி அமைத்து எவ்வளவோ சொத்து சுகங்களுடன் டாம்பீகமாக இருந்தவர். அவருக்காக பக்தர்கள் எதையும் செய்யத் தயாராக இருந்தார்கள்.

கடைசியில் சுவாமியார் அரசாங்கத்திடம் மாட்டுப்பட்டுக்கொண்டார். அவர் மீது பல்வேறு குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. அவருக்குக் கஷ்ட காலம். எல்லாவற்றையும் இழந்த நிலை. மரணம் அல்லது நாடுகடத்தல் தான் பாக்கி என்றாகிவிட்டது.

உண்மையான விசுவாசம் கொண்ட சிஷ்யர் ஒருவர் குருவை அணுகினார். "குருவே! உங்கள் நினைவு உலகு உள்ளளவும் எல்லோர் உள்ளத் திலும் இருக்க வேண்டும். அதற்கு நிலையான காரியம் எதையாவது செய்ய வேண்டும் என்று மனது துடிக்கிறது, என்ன செய்யலாம். கட்டளையிடுங்கள் சுவாமி!" என்று சிஷ்யர் மன்றாடினார்.

ரஜ்னீஷ் சுவாமி அதைக் கேட்டு அந்தக் கஷ்ட வேளையிலும் சிரித்தார். சிரித்துவிட்டுச் சொன்னார்:—

"ரஜ்னீஷ் என்று ஒருவன் உலகத்தில் இருந்தான் என்று எவரும் நினைக்க வேண்டாம்.

நினைக்க வைக்கும் கைங்கரியம் எதிலும் நீ ஈடுபடவும் வேண்டாம். எனக்கு அது போதும்"

அந்தக் குருவின் இந்த வாக்கு அந்த சிஷ்யருக்குப் பிடித்ததோ என்னவோ எனது குருவின் உள்ளத்தைத் தொட்டுவிட்டது.

நாம் இருவரும் தனியாக இருந்து தத்துவம் பேசும்போதெல்லாம் ஆசிரியர் சிவநாயகம் இதை என்னிடம் சொல்லுவார். சுவாமியார் எப்படிப்பட்டவராக இருந்தபோதிலும் அவருடைய இந்தக் கொள்கை எவ்வளவு பெரிய தத்துவக் கொள்கை என்று உயர்த்திப் பேசுவார். உலகில் எத்தனை பேர் இப்படியான அற்ப ஆசை இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்று கேட்பார். ரஜ்னீஷ் சுவாமியின் அந்தக் கொள்கை தான் தன்னுடைய கொள்கையும் என்று பல தடவைகள் அவர் என்னிடம் தெரிவித்திருக்கிறார்.

மனிதன் தற்செயலாகப் பிறக்கிறான். எதையாவது செய்து தற்காலிகமாக வாழ்கிறான். நிச்சயமாக இறந்து போகிறான்.

மனிதன் தன்னுடைய தற்காலிக வாழ்வில் செய்தவை நல்லவையாகவும் பிறருக்குப் பயன்படத்தக்கவையாகவும் இருந்தால் அவை எவருடைய முயற்சியும் இல்லாமல் இயல்பாகவே நிலைக்கும். இது நியதி என்பதில் ஆசிரியர் சிவநாயகம் திடமான நம்பிக்கை கொண்டிருந்தார்.

அவர் தாம் நடத்திய பத்திரிகைகளில் பிற்காலத் தில் பெரியார்களின் பிறந்த நாள், மற்றும் நினைவு நாள் கட்டுரைகள் பிரசுரிப்பதைத் தவிர்த்து வந்தார்.

ஆசிரியர் சிவநாயகத்தை எத்தனையோ பாராட்டுகள், பட்டங்கள், விருதுகள் தேடி வந்தன. எதையும் அவர் ஏற்க மறுத்து விட்டார்.

இவையெல்லாம் அவருடைய தெளிந்த மனநிலையின் வெளிப்பாடுகள்.

மாதா, பிதா, குரு, தெய்வம், வணக்கத்துக்கு உரியவர்கள்; மதிக்கப்பட வேண்டியவர்கள்; மனநிறைவு பெறச் செய்யப்பட வேண்டியவர்கள்.

ஆசிரியர், சிவநாயகம் அன்று மட்டுமல்ல இன்றும் என்னுடைய குரு. என்றைக்கும் அவர் என்னுடைய குருவேதான்.

அவரிடம் நான் பெற்ற நீண்ட கால அனுபவத்தை எல்லோருடனும் பகிர்ந்து கொள்ள எனக்கும் ஆசைதான்.

அவருடைய அருமை பெருமைகளை எழுதுவதானால் தொகுதி தொகுதியாக எத்தனையோ நூல்களை எழுதிக் குவிக்கலாம்.

என்ன செய்வது? குருநாதரின் கொள்கைக்கும் விருப்பத்துக்கும் மாறாக நடக்க மனம் இடம் தரவில்லை. நானே மாறாக நடந்தால் அவருடைய ஆத்மா சாந்தி அடையுமா? அவருடைய ஆத்ம சாந்திக்காக என்னை நான் கட்டுப்படுத்திக் கொண்டேன். என் கைகளைக் கட்டிக்கொண்டேன். என்னை அனைவரும் மன்னிக்க வேண்டுகிறேன்.

இப்படி நான் இரகசியத்தைப் புட்டு வைத்தும் கேள்விக் குளவிகளின் கொட்டுதல் நின்று விட்டது. நன்றி கெட்டவன் நான் என்ற தோரணையில் ஏவப்பட்ட கணைகள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டன. என்னுடைய மனதை அழுத்திக் கொண்டிருந்த சுமை இறங்கியது.

— கே.கே.இரத்தினசிங்கம்

# காமுகன்

ஜூல்ஸ் ஒரு கட்டிடக் கலைஞன். நியூவோர்லியன்ஸ் பிரதேசத்தில் வாழ்ந்து வந்தான். மரியா, ஜூலியட் எனும் இரு பெண் பிள்ளைகள் அடங்கிய சிறிய குடும்பம் இவனுடையது.

மரியா சிறியவள், ஜூலியட் 12 வயதான சிறுமி. அவள் பூப்பெய்தவில்லை. என்றாலும் நல்ல சதைப் பிடிப்புடன் 'மொழு மொழு' வென்றிருந்தாள்.

ஜூல்ஸ் குடும்பத்தாரின் வீட்டிற்குக் கொஞ்சம் தொலைவில் டாக்டர் டெஸ்சாம்சனின் வீடு இருந்தது. சிறுமியர் இருவரும் டாக்டரின் வீட்டிற்குப் போவது வழக்கம்.

1888ஆம் வருடம், ஒரு நாள் காலையில் மரியா டாக்டர் வீட்டிலிருந்து அழுதுகொண்டு திரும்பினாள்.

'ஏன் அழுகிறாய்? ஜூலியட் எங்கே?' என்று தகப்பன் ஜூல்ஸ் கேட்டான். மரியா குமுறிக் குமுறி அழுதாளே தவிர பதில் எதுவும் சொல்லவில்லை.

ஜூல்ஸ் மறுபடியும் அதட்டிக் கேட்கவே அவள் அழுதுகொண்டே 'ஜூலியட் சாகப் போகிறாள், டாக்டர் சொன்னார்' என திக்கித் திணறிச் சொன்னாள்.

ஜூல்ஸ் நடுநடுங்கிவிட்டான். 'ஐயோ மகளே! என பதறித் துடித்துக்கொண்டு அவன் வீதிக்குப் பாய்ந்தான். டாக்டரின் வீட்டை நோக்கி தலைதெறிக்க ஓடினான்.

டாக்டரின் வீட்டுக் கதவு உட்பக்கமாகப் பூட்டிக் கிடக்கிறது. ''படபட'' வெனத் தட்டினான்.

கதவு திறக்கப்படவில்லை.

'என்ன செய்வது?' என கைகளை நன்றாகப் பிசைந்து கொண்டிருந்த ஜூல்ஸ் ஒரு பைத்தியக்காரனைப் போல வீதியில் தலைதெறிக்க ஓடினான்.

அவனுடைய ஓட்டம் பொலிஸ் ஸ்டேசன் முன்பாக முடிவடைந்தது.

'இன்ஸ்பெக்டர்'

'என் மகள் ஜூலியட்டைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்' என கதறியழும் ஜூல்ஸை பொலிஸ் இன்ஸ்பெக்டர் அமைதியாகப் பார்த்தார்.

'மிஸ்டர் ஜூல்ஸ் என்ன நடந்தது? பதறாமல் சொல்லுங்கள்'

ஜூல்ஸ் முழுக் கதையையும் ''மளமள'' வெனச் சொல்லி முடித்தான்.

கதையைக் கேட்டுக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டருக்கு ஏதோ விபரீதம் நடைபெறுகிறது என்று மனம் பதற ஆரம்பித்து விட்டது. அவர் ஓடிவந்து ஜீப்பில் தாவி ஏறினார்.

ஜூல்ஸும் ஜீப்பில் ஏறிக்கொண்டான். அது மின்னல் வேகத்தில் பறந்தது.

ஜீப் டாக்டரின் வீட்டின் முன்பாக வந்து நிற்கிறது. அந்த வீடு ஒரு சிலையைப் போல் அமைதியாகக் காட்சியளிக்கிறது.

''தடதட'' வென இறங்கிய பொலிஸ்காரர்கள் வீட்டைச் சுற்றி சுறு சுறுப்பாகத் தேடுதலில் இறங்கினார்கள்.

'அதோ கம்பியில்லாத ஒரு கண்ணாடி ஜன்னல் தெரிகிறது.' ஏதோ துப்புக் கிடைத்தது போல் ஒரு பொலிஸ்காரன் கத்தினான்.

இன்ஸ்பெக்டர் ஒரு அசகாய சூரன். டார்சனாக மாறிய அவர் ஜன்னல் கண்ணாடியை 'படா'ரென உடைத்துக் கொண்டு வீட்டினுள் போய் 'தொப்' பென விழுந்தார்.

அறை, அறையாக ஒரு வேட்டைக்காரனைப் போலச் சுற்றி வந்த அவர் அறையில் கண்ட காட்சி இன்ஸ்பெக்டரை திகிலடையச் செய்தது.

சிறுமி ஜூலியட் ஒரு கட்டிலில் நிர்வாணமாகக் கிடந்தாள். தாடி வளர்த்தவொரு பூதாகரமான மனிதர் அவளருகில் நிர்வாணமாகக் குனிந்து கொண்டிருக்கிறார்.




அவருடைய நெஞ்சிலிருந்து சொட்டுச் சொட்டாக இரத்தத் துளிகள் விழுகின்றன.

இந்தக் காட்சியைப் பார்த்த திகிலினால் விறைத்து சில கணங்கள் சிலையாக நின்றிருந்த இன்ஸ்பெக்டர் 'கைகளைத் தூக்கு!' என பயங்கரமாக அலறினார். அவருடைய துப்பாக்கி 'இதோ உன் மண்டையை சிதறடிக்கிறேன்' என்பதுபோல் டாக்டரை குறிபார்த்துக் கொண்டிருந்தது.

சின்னவொரு யானைக் குட்டியைப் போல் காட்சியளித்த டாக்டர் விசும்பி விசும்பி அழுது கொண்டிருந்தார்.

ஜூலியட்டின் உடம்பில் அசைவில்லை. அவள்



இறந்துகிடந்தாள்.

அந்தப் பிஞ்சு உடம்பில் டாக்டரின் பல் அடையாளங்கள் பல இடங்களில் இருந்தன. சிறுமியின் பெண்மையும் சிதைக்கப்பட்டிருந்தது. இவற்றை அவதானித்த இன்ஸ்பெக்டர் டாக்டரைக் கைதுசெய்தார்.

* * *

பரபரப்பான இந்த விவகாரம் விசாரணைக்கு வந்த போது வெளியிடப்பட்ட தகவல்களினால் நியூ வோர்லியன்ஸ் மக்கள் மட்டும் அல்ல, முழு உலகமும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தது. விஞ்ஞான வளர்ச்சி கண்ட ஐரோப்பாவிலும் இன்னும் மூட நம்பிக்கையில் மூழ்கிக் கிடக்கும் மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்பதை, அது வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தது.

> பரபரப்பான இந்த விவகாரம் விசாரணைக்கு வந்தபோது வெளிவந்த தகவல்களினால் முழு உலகமுமே ஆச்சரியத்தில் ஆழ்ந்தது. விஞ்ஞான வளர்ச்சி கண்ட ஐரோப்பாவிலும் கூட இன்னும் மூடநம்பிக்கையில் மூழ்கிக் கிடக்கும் மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்பதை, அது வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தது.

ஜூல்ஸ் மருந்திற்காக அடிக்கடி டாக்டரைப் பார்க்கச் செல்வது உண்டு. போகும்போது தனது இரு சிறுமிகளையும் அழைத்துச் செல்வான். டாக்டரும் ஜூல்ஸும் அடிக்கடி சந்தித்துக்கொண்டமையால் மிகவும் நெருக்கமான நண்பர்களானார்கள்.

தனக்கு ஹிப்னாடிஸம் தெரியும் என டாக்டர் ஒரு நாள் ஜூல்ஸிடம் கூறினார். இந்த ஹிப்னாடிஸம் சக்தியால் ஜியான் லெபீட் என்ற கடற்கொள்ளைக்காரன் ஒளித்து வைத்துள்ள புதையலைத் தான் கண்டு பிடிக்கப் போவதாகவும் அதற்குப் பன்னிரெண்டு வயது சிறுமி ஒருத்தியின் உதவி தேவை என்றும் ஜூலியட் மிகவும் பொருத்தமானவள் என்றும் டாக்டர் கூறினார்.

புதையல் என்றதும் ஜூல்ஸ் 'ஆ'வென வாய்பிளந்தான். உடனே ஜூலியட்டின் உதவி தாராளமாகக் கிடைக்கும் என்றும் உறுதியளித்தான்.

ஜூலியட்டும் மரியாவும் காலையில் டாக்டர் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். மரியாவை முன் வராண்டாவில் விளையாடச் சொல்லிவிட்டு ஜூலியட்டை டாக்டர் அறைக்கு ஹிப்னாடிஸம் செய்வதற்காகக் கூட்டிப் போனார்.

* * *

இரண்டாம் நாள்

ஜூலியட் உள்ளே போவதற்கு தயங்கினாள். 'மரியா நீயும் வா!' என்று தங்கையைப் பார்த்துப் பயத்துடன் அழைத்தாள்.

அப்பொழுது டாக்டர் வரும் காலடிச் சப்தம் கேட்டது. அறைக்குள் திடீரென தோன்றிய டாக்டர் மரியாவும் அறைக்குள் இருப்பதை அவதானிக்கவில்லை. பூதாகரமான அந்த மனிதர் மிகவும் ஆசையோடு ஓடி வந்து ஒரு துணித் துண்டினால் ''சட்''டென ஜூலியட்டின் முகத்தை மூடினார்.

அறையில் குளோரோபோம் வாசம் நிறைந்தது. மயக்க மருந்தான குளோரோபோம் நனைக்கப்பட்ட துணியினாலே ஜூலியட்டின் முகத்தை டாக்டர் மூடினார்.

குளோரோபோம் முகத்தில் பட்டதும் ஜூலியட் ஒரு பூமாலையைப் போல் துவண்டு விடுகிறாள்.

டாக்டர் மிகவும் பெருத்த சரீரமுடையவர். குட்டி யானையைப் போன்ற தோற்றமுடைய அவர் ஜூலியட்டை ஒரு முயல் குட்டியைப் போல் தூக்கிக் கொண்டு போய் கட்டிலில் கிடத்துகிறார்.

ஜூலியட்டின் உடைகளைக் களைந்து அவள் நிர்வாணமாக்கப்படுகிறாள்.

டாக்டரும் ''பரபர''வென தனது உடைகளைக் கழற்றி வீசி எறிகிறார். அதன் பிறகு டாக்டர் செய்த காரியங்களால் மரியா நடு நடுங்கி விட்டாள். 'ஐயோ ஜூலியா' என அவளுடைய அலறலால் திகிலடைந்துபோன டாக்டர் கட்டிலிலிருந்து எழும்பி அவளை நோக்கி நடந்து வந்தார்.

'மரியா பயப்படாதே, ஜூலியாவிற்கு மாரடைப்பு. நான் அவளைக் காப்பாற்றி விடுவேன். பயப்படாதே...!' என்று சொல்லிக் கொண்டே அவளை நெருங்கினார். நைசாக கதைத்துக்கொண்டு வந்த அவர் மரியாவைப் பிடிப்பதற்கே நெருங்கினார்.

மரியா ஒரே தாவாக வீட்டிற்கு வெளியில் பாய்ந்து தப்பினோம் பிழைத்தோம் என தன் தந்தையைத் தேடி சிட்டுக் குருவியாகப் பறந்துவிட்டாள்.

* * *

விசாரணையின் போது டாக்டர் தன் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. தான் ஹிப்னாடிஸம் செய்துகொண்டிருந்த போது, ஜூலியட்டிற்கு மாரடைப்பு ஏற்பட்டு விட்டது, என்றும் அதன் காரணமாகத்தான் நெஞ்சில் கத்தியால் குத்தி அவளுக்கு இரத்ததானம் செய்து அவளை உயிர்ப்பிக்க முயற்சி செய்ததாகவும் புழுகினார்.

'பொய்காரன், காமுகன், வெறிபிடித்த பயல், அவனை உயிரோடு கொளுத்துங்கள்' என்று நீதிமன்றத்தில் குழுமியிருந்த மக்கள் கோபத்துடன் கத்தினார்கள்.

'ஐயோ என் மகளே' என ஜூலியட்டின் பெற்றோர்கள் கதறி அழுதார்கள்.

சிறுமியின் உடல் எங்கும் காணப்பட்ட டாக்டரின் பல் அடையாளங்களும், சிதைந்து போய்க் கிடந்த பெண்மையும் டாக்டரின் வெறித்தனத்தை எடுத்துக் காட்டின. குளோரோபோமை பயன்படுத்தி சிறுமியை மயக்க நிலையில் வைத்தே டாக்டர் தனது வெறித்தனத்தைத் தீர்த்துக் கொண்டுள்ளார் என தெரிவித்த நீதிமன்றம் டாக்டருக்கு மரண தண்டனை விதித்தது.



“சரத்குமார், ராதிகாவைத் திருமணம் செய்து விட்டார்” என்ற செய்தி சமீப காலமாகத்

# சரத்குமார்-ராதிகா திருமணம் ஊர்ஜிதம்
# புதுமாப்பிள்ளை பகிரங்கமாக கூறுகிறார்

திரையுலகின் மூலை முடுக்கெங்கும் பரவியது.

இது உலக வாழ் தமிழ் சினிமா ரசிகர்களையும் திரும்பிப் பார்க்கவைத்தது. உண்மையை அறிந்துகொள்வதற்காக சம்பந்தப்பட்ட இருவரையும் துளைத்தெடுத்துவிட்டார்கள்.

ஆனால் அவர்களும் அசைந்து கொடுக்காமல் மௌனத்தையே பதிலாகத் தந்தார்கள். ஆனாலும் இந்தச் செய்தி 75% அளவில் உண்மைதான் என்று கூறுமளவுக்கு பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டன.

ஆனாலும் ஒரேயொரு குறை சரத்குமார்— ராதிகா இவர்கள் யாருமே இத்திருமணத்தை ஒப்புக்கொள்ளவில்லையே. சினிமாவில் கிசு கிசு சகஜம் என்று அனைவரும் எண் ணிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் இப்போது அந்தக் குறையும் தீர்ந்துவிட்டது. சரத்குமார் — ராதிகாவுடனான தனது திருமணத்தை ஒப்புக்கொள்கிறார். அப்போது ராதிகாவும் உடனிருக்கிறார்.

புதுமாப்பிள்ளை சரத்குமார் சொல்வதைக் கேட்போம்.

**கே: அரசியல், சினிமா இரண்டு துறையிலும் சிறந்து விளங்குகிறீர்கள். மக்களிடையே பிரபல்யம் பெற்ற உங்களது இப்போதைய திருமணம் பற்றிய செய்திக்கு தங்களது பதில் என்ன?**

ப: சுபாஷ் சந்திரபோஸின் மகள் ஜெர்மனியிலிருந்து வந்திருந்தபோது நானும் ராதிகாவும் வரவேற்புக்குப் போயிருந்தோம்.

சரத்குமாரும் திருமதி ராதிகா சரத்குமாரும் கலந்துகொண்டார்கள் என்று செய்தி வெளிவந்தது. ஆம் அதுதான் உண்மை. நாங்கள் இருவரும் திருமணம் செய்துகொண்டோம்.

**கே: சரி. திருமணம் பற்றிய கிசு கிசுக்கள் வெளிவந்தபோதே உண்மையை ஒப்புக்கொண்டிருக்கலாமே?**

ப: திருமணம் எனது தனிப்பட்ட விஷயம். அதனால் அதனை செய்தியாக்க நான் விரும்பவில்லை.

**கே: உங்கள் முன்னைய திருமண வாழ்க்கை வெற்றியளித்திருக்காமைக்குக் காரணம் ஏதாவது இருக்கிறதா?**

ப: நான் பழையவற்றை மீண்டும் ஞாபகப்படுத்த விரும்பவில்லை. ஆனால் நானும் சராசரி மனிதன் போன்று வாழவே விரும்புகிறேன்.

**கே: ராதிகா மேடத்தினால் விஜயகாந்த் ஸாருக்கும் உங்களுக்கும் மோதல் என்ற ஒரு கருத்து நிலவுகிறதே?**

ப: அது உண்மைக்குப் புறம்பானது. விஜி ஸாருடன் நான் நிறையப் படங்களில் நடித்திருக்கிறேன். நாங்கள் நல்ல நண்பர்கள்.

**கே: நீங்கள் வெறுப்பது?**

ப: ஒரு மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவதை.

**கே: சினிமாவை விட்டுவிலகி வேறுபல விடயங்களைப் பேசிவிட்டோம். இப்போது சினிமாவிற்கு வருவோம். கனமான பாத்திரங்களை ஏற்றுத் திறமையாக நடித்துவரும் நீங்கள் 'ரிஷி' படத்தில் சாதாரணமான வேடம் ஏற்றது ஏன்?**

ப: நடிகனுக்கு சாதாரணமான அசாதாரணமான வேடம் என்று எதுவுமில்லை. எல்லா வேடங்களிலும் சிறப்பாக நடிக்கவேண்டும். அதுதான் திறமையுள்ள நடிகனின் தகுதி.

**கே: நடிப்பு, கோடீஸ்வரன் நிகழ்ச்சி, நடிகர் சங்கம், அரசியல்..... அப்பப்பா! எப்படி ஒருவரால் இப்படி அனைத்திலும் ஈடுபட முடிகிறது.....?**

ப: எல்லாம் இறைவனுடைய ஆசிர்வாதம்தான்.

**கே: புது வாழ்க்கை எப்படி இருக்கிறது?**

ப: சந்தோஷமாக இருக்கிறது.

**கே: 'கோடீஸ்வரன்' நிகழ்ச்சித் தயாரிப்பாளரான ராதிகாவும் நிகழ்ச்சி நடத்துனரான நீங்களும் நிஜ வாழ்விலும் இணைந்தது திட்டமிட்ட செயல் என்று கூறலாமா?**

ப: இல்லை. எங்கள் இருவரிடையேயும் உள்ள புரிந்துணர்வுகளே எம்மை இணைத்தன.

**கே: 'கோடீஸ்வரன்' நிகழ்ச்சி இந்தியில் அமிதாப் நடத்தும் 'குரோர்பதி' நிகழ்ச்சியின் நகல் என்று கூறுகிறார்களே?**

ப: அப்படிச் சொல்ல முடியாது. ஒரு பிரமாண்ட நிகழ்ச்சிக்கு மூலமாக ஏதாவது ஒரு நிகழ்ச்சி இருக்கலாம். ஆனால் அதை நகல் என்று சொல்ல முடியாது.

நான் நிறையப் படிக்கணும். நிறைய விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலிலேயே கோடீஸ்வரன் நிகழ்ச்சியில் பங்கேற்றேன்.

**கே: சமீபத்தில் நீங்கள் நடித்த 'விண்ணுக்கும் மண்ணுக்கும்' படம் வெளியாகியுள்ளது. நீங்கள் சிறப்பாகச் செய்திருந்தாலும் எதிர்பார்த்த அளவுக்கு இல்லையே?**

ப: நீங்களே சொன்னீர்களே! சரத் சிறப்பாகச் செய்திருந்தாலும் என்று. அதுதான் எனக்குத் தேவை. என் பங்கை நான் சரியாகச் செய்தேன் என்ற திருப்தி இருக்கிறது.

**கே: நீங்கள் அரசியலில் அவசரமாக இறங்கினீர்கள். ஆனால் அது வெற்றியளிக்கவில்லை. ராதிகா தி.மு.கவில் திறமைமிக்க பேச்சாளர். நீங்கள் இருவரும் இணைந்து தேர்தலில் ஈடுபடுவீர்களா?**

ப: ஆமாம். சட்டசபைக்குப் போட்டி போடவில்லை. ஆனால் பிரசாரத்துக்குப் போகிறேன். நிச்சயம் தலைவரின் ஆசியோடு எம்.பி தேர்தலில் போட்டியிடுவேன். அதில் எந்த மாற்றமுமில்லை.

**கே: நீங்கள் இருவரும் இணைந்து பிரசாரத்தில் ஈடுபடுவீர்களா?**

ப: நிச்சயமாக.

**கே: தற்போது நடித்து வரும் புதிய படங்கள் பற்றி..?**

ப: 'தோஸ்த்', 'சமுத்திரம்'. இதில் எனக்கு 'சமுத்திரம்' படத்தில் நல்ல கரெக்டர் கிடைத்துள்ளது.

ஷாம்.



'ரிஷி'யில் சரத்குமார் — மீனா

பிளஸ் டூ படிக்கும் பெண்ணிற்கும் பிளஸ் டூ படிக்கும் பையனுக்கும் இடையில் ஏற்படும் காதலை வைத்து காதல் அழிவதில்லை என்ற படத்தை எடுக்க இருக்கிறார் டி.ஆர்.ராஜேந்தர்.

கதாநாயகனாக அவரின் மகன் சிலம்பரசன் நடிக்கிறார். வில்லனே இல்லாமல் வித்தியாசமாக உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்போகிறார்களாம். 'சொன்னால்தான் காதலா'விலும் இரண்டு பாடல்களுக்கு நடனமாடியிருக்கிறார் சிலம்பரசன்.

குழந்தை நட்சத்திரமாக நடித்த சிலம்பரசன் படிப்பதற்காகவே நடிப்பிலிருந்து ஒதுங்கியிருந்தாராம். இப்போது பாட பரீட்சை முடிந்து விட்டது. இனி திரையில் காதல் பரீட் சையே!



## பாட பரீட்சை முடிந்ததும் காதல் பரீட்சை

நடிகை சாக்ஷி 'சைனிகா' என்ற கன்னடப்படத்தில் யோகேஷ்வருடன் நடித்தார். படப்பிடிப்பின்போது, தயாரிப்பாளரும் நடிகருமான யோகேஷ்வர் சாக்ஷியிடம் ''ஒரு படத்தில் ஒல்லியா வர்றே இன்னொரு படத்தில் குண்டா தெரியறே என்ன காரணம்'' என்று கேட்டிருக்கிறார். சாக்ஷியும் ''சில படங்களுக்கு எனக்குப் பதிலாக தங்கையை அனுப்பி விடுகிறேன்'' என்று கேலியாகக் கூறியிருக்கிறார்.

இதை உண்மை என்று நினைத்த யோகேஷ்வர் நடிகை சாக்ஷி சொன்னதை பத்திரிகைகளுக்குக் கூற விஷயம் பெரிதாகி விட்டது. சாக்ஷி ஏமாற்றுகிறார் என்று பத்திரிகைகள் பெரிய எழுத்தில் செய்திகளை வெளியிட்டுவிட்டன. இப்போது தயாரிப்பாளர்களே சாக்ஷியைப் பார்த்தவுடன் இவர் சாக்ஷியா? அல்லது அவரது தங்கை

## சாக்ஷி எத்தனை சாக்ஷியடி

ஷில்பாவா? என்று கேள்வி கேட்டுக் கொண்டிருக்கின்றனர். நொந்துபோன சாக்ஷியும் தங்கையின் போட்டோ சகிதம் ஸ்டேட்மென்ட் விடுத்துக் கொண்டிருக்கிறார்.






| | கிழக்கு | |
|---|---|---|
| புதன் மரகதம் Emerald | சுக்கிரன் வைரம் Diamond | சந்திரன் முத்து Pearl |
| குரு புஷ்பராகம் Y. Sapphire | சூரியன் மாணிக்கம் Ruby | செவ்வாய் பவளம் Coral |
| கேது வைடூரியம் Catseye | சனி நீலம் Sapphire | ராகு கோமேதகம் Cinnamon |
| | மேற்கு | |

வடக்கு — தெற்கு

Navaratnam

இங்கு நவகோள்களின் அம்சமான நவரத்தினங்களைப் பற்றிய விபரங்கள் உள்ளன. பிறப்பு எண்ணையும் கூட்டு எண்ணையும் வைத்து இலவசமாக கணித்து கூற அவரவர்க்கு ஏற்ற ரத்தினங்களை அணிந்து அதற்கேற்ப பலன்களையும் நன்மைகளையும் அடையலாம். நன்றி.

ARUL jewellers அருள் ஜுவலர்ஸ்

3, Sea Street, Colombo-11. T.P. 436331

மற்றவர்கள் பேசுவதை நாம் செய்கின்றோம்

இலவசம் (முதல் பத்து) வாடிக்கையாளர்களுக்கு அழகிய பென்டன்ட்





லேட்டஸ்ட் வரவுகளில் 'பத்ரி' படநாயகி பூமிகாவுக்குத் தான் வரவேற்பு அதிகமாம். செக்கச் செவேலென்று இருக்கும் பூமிகாவைப் பார்த்த மாத்திரத்திலேயே எல்லோருக்கும் பிடித்துப் போகிறதாம்.

# பூமிகா மேல் பிடிப்பு

காதலர் ராஜுசுந்தரத்தின் பேச்சைக் கேட்டு தன் மனேஜரை சிம்ரன் கழற்றி விட்டதும் அந்த மனேஜரை விந்தியா 'கப்' என்று பிடித்துக் கொண்டதும் பழைய கதை. ஆனால் சிம்ரன் மீது கோபமாக இருக்கும் மனேஜர் விந்தியாவை வைத்து எப்படியாவது சிம்ரனை மட்டம் தட்டி விடுவது என்ற சபதத்தில் இருக்கிறாராம்.

இவரின் ஆலோசனைப்படி தனது எடையில் ஏழு கிலோவை குறைத்து விட்டாராம் விந்தியா.



# மனேஜர் சபதம் விந்தியா எடை குறைப்பு

'மிட்டா மிராசு' கதை முதலில் மீனாவிடம் தான் சொல்லப்பட்டதாம். கடலையைக் கொறித்த படியே களஞ்சியம் சொன்ன கதையை முழுவதுமாகக் கேட்டு முடித்தார் மீனா. பின்னர் என்ன நினைத்தாரோ ''நான் நடிக்க மாட்டேன்'' என்று மறுத்து விட்டாராம்.

இப்போது 'மிட்டா மிராசு'வில் மாட்டியிருப்பவர் ரோஜா. பிரபுவுக்கு ஜோடியாக இரண்டு குழந்தைகளுக்குத் தாயாக அசத்தலாக நடித்திருக்கிறாராம். அதுமட்டுமல்ல, 'சூப்பர் குடும்பம்' படத்திலும் பிரபுவோடு சேர்ந்து மடிசார்கட்டி ஆர்ப் பாட்டமாக நடித்து வருகிறார்.



# மீனா மறுத்தார் ரோஜா மாட்டினார்

நடிகர் ரஜினிகாந்த் அரசியலில் மட்டுமல்ல தனது அடுத்த பட அறிவிப்பிலும் மௌனம் சாதித்து வருகிறார். இரண்டு விதமாகக் கதை தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் வரும் தேர்தலின் முடிவைப் பொறுத்தே படஅறிவிப்பு வெளிவரும் என்றும் கூறுகின்றது சூப்பர் ஸ்டாரின் தரப்பு.



# சூப்பர் ஸ்டார் படம் அடுத்த ஆட்சியில் ரிலீஸ்

தி.மு.க ஆட்சியமைத்தால் ஒரு கதையும் அ.தி.மு.க ஆட்சியமைத்தால் அதற்கொரு கதையும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாம்.

கவர்ச்சி வேடங்களில் நடித்து வருபவர்களில் ராதிகா சௌத்ரியும் ஒருவர். இதுவரை காலமும் இளவட்டங்களின் நெஞ்சங்களில் மையங் கொண்டிருந்த இந்தக் கவர்ச்சிப் புயலை இப்போது ஆந்திர எல்லைக்கு அழைத்துச் செல்கிறார்

# கவர்ச்சிப்புயல் ராதிகா சௌத்ரி இசைத் தென்றலாகிறார்



தெலுங்கு இயக்குனர் நேகிருஷ்ணா. அவர் இயக்கி வரும் இசை சம்பந்தப்பட்ட ஒரு படத்தில் ராதிகா சௌத்ரிக்கு முக்கியமான கரெக்டராம். தமிழ் நாட்டில் கவர்ச்சியாய் வீசிய புயல் ஆந்திராவில் சேலை கட்டி தென்றலாக வீசப் போகின்றதாம்.

# 'தாஜ்' நடிகையின் மறுபக்கம்

'சின்ன சிலுக்கு' என்று தமிழ்த் திரையுலகில் பெயரெடுத்துள்ளவர் 'தாஜ்' நடிகை. டி.ஆரின் மோதிரக்கையினால் 'மோனிஷா என் மோனாலிஸா' படத்தில் அறிமுகமானார்.

அப்போது 'தாஜ்' நடிகையின் எதிர்பார்ப்புகள் ஏகப்பட்டவை. இருப்பினும் வாய்ப்புகள் வரவில்லை. இப்படியே விட்டால் 'தாஜ்' நடிகையின் விலாசமே தெரியாமல் போய்விடும் என்பதனால் கிடைத்த கவர்ச்சி வேடங்களைப் பயன்படுத்தத் தொடங்கினார்.

அம்மணி கவர்ச்சியுலகில் காலடி எடுத்துவைத்தநேரம் கவர்ச்சிக்கென நிரந்தரமான இடம் யாருக்குமிருக்கவில்லை. இதனால் அந்த இடம் இலேசாகவே 'தாஜ்' நடிகைக்குக் கிடைத்துவிட்டது. நடிகையும் தாராளமயக் கொள்கையைக் கடைப்பிடித்ததுடன் அனைவருடனும் ஒத்துழைத்தார். பிறகென்ன கேட்கவும் வேண்டுமா? வாய்ப்புகள் கவர்ச்சித்தாரகையின் காலடியில் கிடக்கின்றன. இப்போது திரையுலகின் நம்பர்—2 இடம் 'தாஜ்' நடிகைக்கே கிடைத்திருக்கிறது.

'தாஜ்' நடிகையின் போதையூட்டும் நடனத்தின் உச்சக்கட்டம் 'குஷி' படத்தில் இடம்பெற்ற கட்டிப்புடி கட்டிப்புடிடா பாடல்தான்.

இதற்குப்பின்னர்தான் அவரது மார்க்கெட் சூடுபிடிக்க ஆரம்பித்தது. அம்மணி ஒரு கனவுக்காட்சியில் வந்து மூன்று நிமிடம் ஆட்டம் போட்டால் போதும் படம் ஹிட் என்ற நிலை தற்போது தமிழ்த்திரையுலகில் நிலவுகின்றது.

இவரின் கைவசம் அரை டசின் படங்கள் இருக்கின்றன. இப்படி இருக்க, இளம் கதாநாயகர்களே 'தாஜ்' நடிகையோடு ஒரு கனவுக்காட்சியாவது வையுங்கள் என்று தயாரிப்பாளர்களைக் கெஞ்ச ஆரம்பித்து விட்டார்களாம்.

முதல் படம் ரிலீஸ் ஆன போது லட்சத்துக்கே தடுமாறிய அம்மணி இப்போது கோடியில் புரளுகிறார்.

இதேநேரம் 'தாஜ்' நடிகையின் சொந்த வாழ்வில் அம்மணி சோகவாழ்வு வாழ்கிறாராம். எல்லாவற்றுக்கும் காதல்தான் காரணமாம். அம்மணியின் காதலர் பெயர் முகேஷ் பாட்டியா.

காதலருடன் கதைப்பதற்காக பிரத்தியேகமாக இரண்டு செல்போன்கள் வைத்திருந்தார். இந்த இலக்கங்கள் மூன்றுபேருக்கு மட்டுமே தெரியும். 1. 'தாஜ்' நடிகை. 2. நடிகையின் காதலர். 3. நடிகையின் மனேஜர் ரியாஸ்.

காதலர்கள் இருவரும் செல்போன் வழியாக ஒரு நாளைக்குப் பலமுறை காதல் மொழிகளைப் பரிமாறிக்கொள்வார்கள்.

ஆனால் கடந்த டிசம்பர் மாதமுற்பகுதியில் இருந்து காதலர் முகேஷிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை. அதனால் நடிகை யாருக்கும் தெரியாமல் மும்பை செல்ல முடிவெடுத்து டிக்கெட்டும் புக் செய்துவிட்டாராம். விஷயம் எப்படியோ மனேஜருக்குத்தெரிய வந்திருக்கிறது. ''இங்கே படங்களை ஒப்புக்கொண்டுவிட்டு மும்பைக்குப்போய் விட்டால்... தொழில் என்னாகும்'' என்று எகிறிக்குதித்திருக்கிறார்.

நடிகையின் மும்பை பயணம் தடைப்பட்டது. இதனால் மனமுடைந்த நடிகை 20 நைட்ரோ வைட் மாத்திரைகளை விழுங்கி விட்டாராம்.

உணவுக்காக 'தாஜ்' நடிகையை அழைத்த போது அவரிடமிருந்து எந்த சத்தமும் வராததனால் சந்தேகப்பட்டு பெட்ரூம் கதவை உடைத்துப் பார்த்திருக்கின்றனர்.

('தாஜ்' நடிகையின் மனேஜர் ரியாஸ் அவரது மனைவி, சகோதரர் ஆகியோர் 'தாஜ்' நடிகையுடனேயே வசித்து வருகின்றனர்) நடிகையின் நிலை தெரிந்ததும் டாக்டரை வரவழைத்து அவரை உயிர் பிழைக்க வைத்திருக்கின்றனர். 'தாஜ்' நடிகையிடம் இது குறித்து வினவிய போது, 'அப்பப்ப எனக்கு லோ— பிரஷர் வரும். அதற்காக இரண்டு நாள் ரெஸ்ட் எடுத்தேன்'' என்று கூறினாராம்.



# திரை மறைவில்

ஸ்லிம்மிற்குப் பெயர் பெற்றிருக்கும் 'ரன்' நடிகையின் வாரிசாகக் களமிறங்கியிருப்பவர் 'ஸ்லிம்' மின் ஒன்று விட்ட சிஸ்டர்.

பார்வை பார்த்த படத்தில் அறிமுகமாகியவர் 'கிளாமர் ஒன்று போதுமே' என்ற நினைப்புடன் களமிறங்கியிருக்கிறார்.

படத்தில் கவர்ச்சியில் தூள் கிளப்பியிருந்தாலும் படப்பிடிப்பில் அம்மணி போட்ட கூத்தை யூனிட்டார் அவர்களது ஆயுளுக்கும் மறக்க மாட்டார்களாம்.

ஒரு இரவுச் சாப்பாட்டுக்கு மட்டும் இரண்டாயிரம் ரூபாவைக் காசாகக் கேட்டாராம்.

சரி சாப்பாடுதானே சாப்பிட்டு விட்டுப் போகட்டும் என்று பார்த்தால், அடிக்கடி ஷூட்டிங்கிலிருந்து எஸ்கேப்பாகி விடுவாராம். மறுநாள் வந்து பிளைட்டிற்கான பில்லைத் தயாரிப்பாளரிடம் நீட்டி விடுவாராம். முதல் படத்திலேயே அம்மணி போட்ட கூத்தினால் அடுத்த படத்திற்கு ஒப்பந்தம் செய்வதற்குத் தயாரிப்பாளர்கள் தயங்குகிறார்களாம்.

**

போஷாக்காக இருக்கும் 'ரக்ஷனா' நடிகை, சில விட்டுக் கொடுப்புகளைச் செய்திருக்கிறாராம். வரும் படங்களில் தன் அழகை ரசிகர்களின் கனவுகளுக்கு மான்யமாக வழங்குவதோடு நான் லேட்டஸ்ட்டாகத் தமிழ்த் திரையுலகைப் புரிந்து கொண்டவள் என்ற ஸ்டேட்மென்ட் வேறாம்.



ரக்ஷனா

**

'கறுப்புத் தான் எனக்குப் பிடிச்ச கலரு' என்றுகூறிய நடிகையை 'ஆழி' யின் மறு பெயர் கொண்ட படத்தில் அதே கறுப்பு நடிகருக்கு ஜோடி சேரக் கேட்டனராம். அம்மணி சம்பளமாக பத்து விரலைக் காட்டவே ஆளைவிட்டால் போதும் என்று ஓடி வந்திருக்கின்றனர்.

**

என்ன நேரத்தில் 'பியூட்டிபுல்' நாட்கள் என்று பெயர் வைத்தார்களோ! நவரச நாயகனுக்கு ஜோடியாக ஒப்பந்தமான நடிகைகள் எல்லோரும் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று ஓடிக் கொண்டிருக்கின்றனராம்.

முதலில் 'ரன்' நடிகை ஒப்பந்தம் செய்யப்பட்டார். தயாரிப்பாளர்களின் ஸ்டிரைக்கினால் ரன் தெலுங்குப் படங்களில் பிஸியாகி விட்டார்.

அதனால் 'சாக்ஷி' நடிகையை வைத்து காட்சிகளை எடுக்க ஆரம்பித்தனர். சாக்ஷியும் டாட்டா காட்டி விடவே, அடுத்து தொடையழகியிடம் தஞ்சம் அடைந்திருக்கின்றனர் நவரசநாயகனும் இயக்குனர் சுந்தர்சியும். அம்மணியின் கடாட்ஷம் கிட்டுமா! அழகான நாட்கள் நகருமா? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

# தாயுள்ளம்

சுடர் ஒளி சிறுகதை

காவலூரான்

21 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி, தைத் திங்களின் ஒரு மகத்தான நாள். மானிட உலகமே வியந்து நிற்கின்ற, மறக்க முடியாத, கூடாத நாள். ஆம் அன்று தான் விஞ்ஞான யுகத்தின் உச்சத்தைத் தொட்ட நாள்.

சனிக் கிரகத்தின் துணைக் கோள்களில் ஒன்றும், பூமியின் தட்ப வெப்ப அமைப்பைக் கொண்டதுமான டைட்டன் துணைக் கோளில் முதன் முதலாக கால் பதித்துவிட்டு அன்றைய தினத்தில் திரும்பவும் பூமியை வந்தடைய விருக்கிறார்கள் டாக்டர் கிறேக் தலைமையிலான ஏழு பேர் கொண்ட குழுவினர். அக்குழுவில் இலங்கைத் தமிழர் ஒருவரும் அடங்குகின்றார் என்பது நமக்குப் பெருமையான செய்தியல்லவா?

அந்த வரலாற்று நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு வசதி படைத்தவர்கள் அமெரிக்கா சென்றிருக்க மற்றவர்கள் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன் தவம் கிடந்தார்கள்.

***

வழக்கம் போல் அதிகாலையில் எழுந்து கோவிலுக்குச் சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த அன்னம்மா ரீச்சருக்கு நடப்பதெல்லாம் விசித்திரமாக இருந்தது. வழக்கத்துக்கு மாறாக வீதி வெறிச் சோடிக்கிடந்தது. வீதியின் ஓரத்தில் இருக்கும் கந்தசாமியின் ரீக்கடை எப்போதும் சூடான செய்தியும் சூடான ரீயுமாக அந்தக்காலை நேரத்தில் கலகலத்துக் கொண்டிருக்கும். ஆனால் இன்றோ கடை பூட்டிக் கிடந்தது.

அப்படி என்ன விசேஷம் ஊரில் என்று யோசித்துக் கொண்டு வந்தவளுக்கு பக்கத்து வீட்டு அம்புஜத்தின் மகன் எங்கோ அவசரமாகச் செல்வது தெரிந்தது.

''டேய் மகனே, நீ இண்டைக்கு பள்ளிக் கூடத்துக்குப் போகவில்லையா?'' என்று கேட்டாள்.



''என்ன ரீச்சர் விஷயம் தெரியாதா? அமெரிக்காவில் இண்டைக்கு டைட்டனுக்குச் சென்றவர்கள், முதன் முதலில் அங்கு கால் வைத்துவிட்டு திரும்பவும் வந்திறங்கப் போறாங்களாம். அதில நம் ஊரைச் சேர்ந்த எஸ்.சிவமும் இருக்கிறாராம். அதனால இன்றைக்கு பள்ளிக்கூடம் லீவு. இப்போது நானும் பக்கத்து வீட்டதான் ரீ.வி பார்க்கப் போறேன்'' என்றவாறு அவன் ஓடத் தொடங்கினான்.

நாட்டில் இப்போது என்ன நடக்குதென்றே தனக்குத் தெரியாமல் போயிற்று என்று தன்னை நொந்து கொண்டே வீடுவந்து சேர்ந்தவளுக்கு ரீ.வி பார்க்க வேண்டும் என்ற எண்ணம் உருவானது.

ரீ.வியைப் போட்டுவிட்டு அதன் முன் உட்கார்ந்தாள்.

ரீ.வியில் விண்கலம் தற்போது பூமியில் இருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது. எவ்வளவு நேரத்தில் பூமியை வந்தடையும் என்று அறிவித்துக் கொண்டிருந்தார்கள்.

அம்மாவின் நினைவுகள் பின்னோக்கி நகரத் தொடங்கின.

***

அம்மா ஆறாம் தரத்தில் படித்துக் கொண்டிருந்த போது நடந்த சம்பவம் இன்னும் அம்மாவிற்கு பசுமரத்தாணி போல நினைவிருக்கிறது.

தமிழாசிரியரின் கட்டளைப்படி அவளுடைய பக்கத்து வீட்டு வாணி பாடப் புத்தகத்தில் நீல் ஆம்ஸ்ட்ரோங் மற்றும் இருவரும் சந்திரனுக்குச் சென்றதும், சந்திரனில் முதன் முதலாக அவர்கள் காலடி பதித்தது பற்றியும் வாசித்துக் கொண்டிருந்தாள். அப்போது பக்கத்து வளவில் கேட்ட வெடிச் சத்தத்துடன் அவளின் அப்பள்ளிக் கூட வாழ்க்கை முடிவுக்கு வந்தது.

அடுத்த நாள் அவர்கள் அவ்வூரை விட்டு இடம் பெயர வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானார்கள்.

அம்மாவின் சொந்த ஊரான கரம்பொன்னில் இருந்து முதலில் இடம் பெயர்ந்து சுருவிலுக்குப் போய் பின்பு அங்கிருந்து யாழ்ப்பாணம் போய், பின்பு அங்கிருந்து மிருசுவிலுக்கு என்று மாறி மாறி இடம்பெயர்ந்து இறுதியாக வவுனியாவைப் போய்ச் சேர்ந்தார்கள். இடையில் ஏற்பட்ட மலேரியாக் காய்ச்சலால் அவளுடைய தந்தை இறந்து போக அவளுடைய குடும்பம் மிகவும் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டது. இதனிடையில் அவள் உயர்தரப்பரீட்சையில் சித்தியெய்தியிருந்தாள். யார் மூலமாகவோ அவளுக்கு பக்கத்துப் பாடசாலையில் ஆசிரியர் வேலை கிடைக்க வாழ்க்கைச் சக்கரம் பிரச்சினை இல்லாமல் நகரத் தொடங்கியது.

அதன் பின்னர் அவளுடன் வேலை செய்த நடராஜனை விரும்பி திருமணம் செய்து கொண்டாள். அவ்வேளையில் நாட்டில் சமாதானமும் ஏற்பட்டு அவரவர் சொந்த இடத்துக்குத் திரும்பக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டது. இவர்களும் தமது சொந்த இடத்துக்கு மாற்றம் பெற்று வந்துவிட்டார்கள்.

சொந்த ஊருக்கு வந்த ஆறாவது மாதமே அவளுக்கு ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த மூன்றாவது மாதம் வீட்டுக்குப் பின்னால் இருந்த பற்றையைத் துப்புரவு செய்யச் சென்ற அவளுடைய கணவன் கண்ணி வெடியில் இறந்து போக அவள் தனிமரமானாள். சிறிது காலத்தில் அவளுக்கு ஒரே ஒரு ஆதரவாக இருந்த அவளின் தாயும் இறந்து போக அவளும் அவளுடைய மகனும் தனித்து விடப்பட்டார்கள்.

அவளுடைய ஒரே நோக்கம் அவளுடைய மகன் சதாவை வளர்த்துப் பெரியாளாக்குவது ஒன்று தான் என்று மாறியது. மிகவும் கஷ்டப்பட்டு தன்னை ஒறுத்து மகனைப் படிப்பித்தாள். அவனும் தாயின் கஷ்டத்தைப் புரிந்து கொண்டு அதற்கேற்றவாறு மிக நன்றாகப் படித்து உயர்தரப் பரீட்சையில் இலங்கையிலேயே முதல் மாணவனாக தேறி அவளுக்குப் பெருமை தேடித்தந்தான். அத்துடன் அமெரிக்க அரசின் விஷேட புலமைப்பரிசில் பெற்று அமெரிக்காவுக்குச் சென்றான்.

அமெரிக்காவுக்குச் சென்ற ஆரம்பத்தில் வாரமொருமுறை போன்பண்ணியவன் நாட் செல்லச் செல்ல மாதமொரு முறையாக மாறி பின்னால் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை பின்னர் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை என்று சென்று பின்னர் பண்டிகைகளுக்கு மட்டுமே மகனிடமிருந்து வாழ்த்து அட்டைகளுடன் கடிதமும் வந்தது. இறுதியாக ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தன்னுடைய படிப்பு முடிந்து விட்டதாகவும், தனக்கு அமெரிக்காவின் பிரபல்யமான பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக வேலை கிடைத்து விட்டதாகவும் எழுதியிருந்தான். அத்துடன் தன்னுடைய பட்டமளிப்பு விழாவில் எடுத்த படங்களையும் அனுப்பியிருந்தான். அதன் பிறகு அவனிடமிருந்து எவ்விதமான தொடர்பும் இருக்கவில்லை. ஆனால் அவள் மட்டும் மாதமொருமுறை அவனுக்குக் கடிதம் அனுப்பிக் கொண்டுதானிருக்கிறாள். இப்போது அவள் ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியை.

மகனுக்கும் 30 வயது ஆகிவிட்டதால் ஒரு நல்ல பெண்ணைப் பார்த்து கல்யாணம் செய்து விட்டால் தன்னுடைய பொறுப்பு முடிந்துவிடும் என்றவாறு பழைய சிந்தனைகளில் மூழ்கியிருந்தவளுக்கு இன்னும் ஐந்து நிமிடங்களில் விண்கலம் பூமியை வந்தடையும் என்ற அறிவிப்பு சுயநினைவுக்கு மீளச் செய்தது.

களைப்பாக இருந்தபடியால் சமையலறைக்குச் சென்று ஒரு ரீ குடித்து விட்டு வரவும் விண்கலம் பூமியில் இறங்கவும் சரியாக இருந்தது.

முதலாவதாக டாக்டர் கிறேக் ஜோன்சன் மீண்டும் பூமியில் கால்பதிக்க அவரைத் தொடர்ந்து மற்றவர்கள் இறங்கினார்கள்.

ஒவ்வொருவராக இறங்கிக் கொண்டிருந்த போது வருணனையாளர் அவர்களைப் பற்றிய குறிப்புக்களை சொல்லிக் கொண்டிருந்தார்.

''இப்போது இறங்கிக் கொண்டிருப்பவர் இலங்கைக்கு குறிப்பாக தமிழ் இனத்துக்கே பெருமை தேடித்தந்த எஸ்.சிவம் என்றழைக்கப்படும் சதாசிவம் – நடராஜன் அவர்கள். இவர் யாழ். நகரின் கரம்பொன் என்னும் இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்......'' என்று வருணனையாளர் கூறிக் கொண்டிருந்த போது ஆறாவதாக இறங்கிக் கொண்டிருந்தவர் தமது முகக் கவசத்தைக் கழற்றினார். அம்மா அதிர்ந்து போனாள். அது அவளுடைய மகன்.

தன் மகன் சான்றோன் எனக் கேட்ட அத்தாயின் உள்ளம் சந்தோஷத்தால் பூரிப்படைந்தது. தன் மகன் செய்த சாதனையை நினைத்தவளுக்கு தான் இவ்வளவு நாளும் பட்ட கஷ்டங்கள் எல்லாம் மாயமாய் மறைந்து விட்டது போன்ற ஒரு உணர்வு உண்டானது.

மீண்டும் தொலைக்காட்சியில் தன் கவனத்தைத் திருப்பிய போது அவள் கண்ட காட்சியின் விபரீதம் புரிவதற்கு முன்னரே அவளின் உயிர் உடலைவிட்டுப் பிரிந்தது.

தொலைக்காட்சிப் பெட்டியில் ''டாக்டர் எஸ். சிவம் மூன்றாண்டுகளுக்குப் பின்னர் தன் மகள் மாகிறேட்டைக் கொஞ்சுவதையும் அருகில் அமெரிக்கரான அவரின் மனைவி சிசிலியா நிற்பதையும் காணலாம்'' என்று வருணனையாளர் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார்.

***

வாசலில் ரீச்சர் கதவைத் திறவுங்கோ என்ற வார்த்தைகள் அதிகரித்துக் கொண்டிருந்தனவே தவிர அவளை எழுப்புவதற்கு திராணியற்றிருந்தன.

தன் மகன் சான்றோன் எனக் கேட்ட அத் தாயுள்ளம் அவன் தன்னை ஏமாற்றியதை ஏற்காமல் மீளாத்துயிலில் உறங்கிவிட்டிருந்தது.

# விலைபேசப்படும் குழந்தைகள்

பணத்திற்காக குழந்தைகளை விற்கும் கொடுமை மூன்றாம் மண்டல நாடுகளில் அதிகம். ஆனால் பணக்காரர்கள் வாழும் அமெரிக்காவிலும் ஒரு தாய் தனது குழந்தைகளை விற்ற கொடுமை நடைபெற்றிருக்கிறது.



அதிலும் இன்ரர்நெற் மூலம் நடைபெற்ற இந்தக் குழந்தை வியாபாரம் உலகம் முழுவதையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது.

அமெரிக்காவின் 'மிசவுரி' மாநிலத்தைச் சேர்ந்தவள் வெக்கர். இவளுக்கு 2 பெண் குழந்தைகள். குழந்தைகளுக்கு கிம்பர்லி, பெலிண்டா என்று பெயர் சூட்டினாள்.

குழந்தைகள் அழகாக கொழு கொழுவென்றிருந்தன. அவற்றை விற்றால் தனக்கு நிறையப் பணம் கிடைக்கும் என்ற விபரீத ஆசை பெற்றவளின் மனதில் ஊற்றெடுத்தது.



இன்ரர்நெற் மூலம் தனது குழந்தைகளை விற்பனை செய்ய விளம்பரப்படுத்தினாள். இந்த இன்ரர்நெற் விளம்பரத்தை இங்கிலாந்தில் வாழும் கில்ஷா தம்பதியினர் பார்த்தனர். வெக்கரின் குழந்தைகளைத் தாமே தத்தெடுக்க முடிவு செய்தனர்.

இங்கிலாந்தில் குழந்தைகளைத் தத்து எடுக்கும் சட்டங்கள் சிக்கலானவை என்பதனால் அமெரிக்கா சென்று திருமதி வெக்கரைச் சந்தித்தனர்.

வெக்கர் ஏற்கனவே ரிச்சர்ட் என்பவருக்கு குழந்தைகளை விற்பனை செய்து விட்டாள். ஆனாலும் பண ஆசையினால் அதை மறைத்து முன்னர் விற்றதை விட அதிக விலைக்கு கில்ஷா தம்பதியினரிடம் பேரம் பேசியிருக்கிறாள்.

இந்த விவகாரம் வெளியே கசிந்து பொலிசார் வரை சென்றிருக்கிறது. வெக்கர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டாள்.

பெற்ற தாயும் கைது. தத்தெடுத்தவரும் கைது என்ற நிலையில் குழந்தைகள் தந்தை ஆரன் வெக்கரிடம் ஒப்படைக்கப்பட்டன.

– ஷர்மிலா



# கூட்டு மேதினம் என்ற பேச்சு அந்த மேடையோடு போச்சு!

## இ.தொ.கா — ம.ம.மு. திட்டமிட்டபடி கூட்டாகக் கொண்டாட்டம்

**மலையகக் கண்ணோட்டம்**
இரா. புத்திரசிகாமணி

பெருந் தோட்டத்துறை தொழிற் சங்கங்கள் மத்தியில் தனித்துவம், தலைமைத்துவம் என்ற தடுமாற்றத்தால் ஒரே மேடையில் கூட்டு மேதினம் என்ற சமீபத்திய கோஷங்கள் காற்றோடு பறந்து விட்டன. ''தொழிற்சங்க வாதிகளின் பேச்சு சத்தியாக்கிரக மேடையோடு போச்சு'' என்பது இன்று உண்மையாகி விட்டது.

இ. தொ.கா. பொதுச் செயலாளர் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானும், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரன் எம்.பியும் கூட்டாக மேதினத்தை நடத்த வருமாறு ஏனைய தொழிற்சங்கங்களுக்கு நேசக் கரம் நீட்டினர். ஆனால் இவர்களின் முயற்சி கை கூடவில்லை.

''கொள்கைகள் வித்தியாசமாக இருக்கலாம். ஆனால் கோரிக்கைகளும் நோக்கங்களும் ஒன்றே. இதன் அடிப்படையில் நாம் மற்றும் சில அமைப்புகளுடன் இணைந்து மேதினத்தை அட்டனில் கொண்டாடு கிறோம். நேற்று நடந்த தீயதை மட்டும் அசை போடாமல், நாளை நடக்க வேண்டிய நன்மைகளுக்காகவாவது ஒன்றுபட வேண்டும்'' என்கின்றார்கள் இந்த இரு இளம் தலைவர்களும்.

இது தொடர்பாக தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டியின் செயலாளர் நாயகம் பி.பி. கந்தையா, (கூட்டுக் கமிட்டியில் 13 சிறு தொழிற்சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன) ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் மனோ கணேசன், தேசிய தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் இரா. தங்கவேல் ஆகியோருடன் தொடர்பு கொண்டோம்.

இவர்களின் கூற்றுகளும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டே காணப்பட்டன.

''தொழிலாளர்களின் பொதுக் கோரிக்கை என்பதால் சத்தியாக்கிரகத்தை ஆதரித்தோம். சத்தியாக்கிரகத்தின் போது ஒரே மேடையில் கூட்டு மேதினம் என்றார்கள். அதன் பின் எவருமே இதைப்பற்றிப் பேசவில்லை. எங்களை பேச்சுக்கு அழைக்கவும் இல்லை. நாம் தனிக்கட்சி, எமக்கு எவருமே தனியான கொள்கை, தனியான தலைமைத்துவம் உண்டு. எமது சுய கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும். எனவே தனியாகவே மேதினத்தைக் கொண்டாடு வோம்'' என்று கூறுகிறார் பி.பி. கந்தையா.

மனோ கணேசனின் கருத்து சற்று வித்தியாசமானது, காரசாரமானது. ''நாம் எப்போதுமே இவர்களை நம்புவதில்லை. எதையும் திறந்த மனதுடன் வெளிப்படையாகக் கூறவும் அதனைச் செயல்படுத்தவும் கூடிய துணிவு இவர்களுக்கு இல்லை.

400 ரூபா சம்பளப் போராட்டம் பொதுவானது என்பதால் சத்தியாக்கிரக மேடைக்கு வெளியில் இருந்தே ஆதரவு அளித்தோம். என்ன நடந்தது? ஏமாற்றப் பட்டோம். இது கசப்பான அனுபவம்.

''உள்ளதை உள்ளபடி வெளிப்படுத்த வேண்டும் என்பதே எனது நோக்கம். தொழிலாளர்களை ஏமாற்றக் கூடாது என்ற நோக்குடன் ஒத்துப் போகும் மனப்பாங்கு உள்ளவர்களுடன் இணைந்து செயற்படவே விரும்புகிறோம். இந்த அடிப்படையிலேயே மேதினத்தையும் கொண்டாடுகிறோம்''

இப்படி மனோகணேசன் குறிப்பிட்டார்.

இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எம்.எஸ். செல்லச்சாமி எம்.பி கூட்டு மேதினத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி என்பன இணைந்து அட்டனில் நடத்தும் கூட்டு மேதினத்தில் கலந்து கொள்வதாக அவர் கூறினார். தனிப்பட்ட கருத்து முரண்பாடுகளை மறந்து தொழிலாளர்களின் நன்மைக்காக ஒன்றுபட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய மாகாண சபை தமிழ்க்கல்வி அமைச்சரும் இ.தொ.கா. பிரமுகருமான வி. இராதாகிருஷ்ணன் ஏனைய சங்கங்களின் குற்றச்சாட்டை மறுக்கின்றார்.

அவர் கூறியதாவது:—

''நல்ல எண்ணத்துடன் எல்லாத் தொழிற்சங்கங்களும் சேர்ந்தே கூட்டு மேதினம் என முடிவெடுத்தோம். இம்மாதம் 8ஆம் திகதியும் 11 ஆம் திகதியும் எல்லா தொழிற்சங்கங்களுக்கும் அழைப்பு விடுத்தோம். மேதினம் பற்றி பேசுவோம் வாருங்கள் என கோரிக்கை விடுத்தோம்.

''ஒற்றுமை உணர்வு கொண்டவர்கள் கலந்து கொண்டனர். சிலர் இரண்டு ஆலோசனை கூட்டங்களுக்குமே வரவில்லை. நாம் அழைக்கவில்லை, பேசவில்லை என்று இப்பொழுது குற்றஞ்சாட்டுகின்றனர்.

எது எப்படியாயினும் கூட்டு மேதினம் என்பதே எமது நோக்கம். இந்த நோக்குடனேயே அட்டனில் மேதினத்தை நடத்துகிறோம்.

இப்படி அவர் கூறினார்.

'மலையகத்தில் இப்போது ஆறுமுகம் — சந்திரசேகரன் அலை வீசுகின்றது. தோட்டத் தொழிலாளர்கள் இந்தக் கூட்டு மேதினத்தை பெரிதும் வரவேற்கின்றனர். தலைவர்கள் போக வேண்டாம் எனக் கூறினாலும், கூட்டு மேதினம் வேண்டும் என்கிறார்கள் தொழிலாளர்கள்.

''கொள்கைகள் வித்தியாசமானவை யாக இருக்கலாம். ஆனால் நோக்கமும் செல்லும் வழியும் ஒன்றாக இருப்பதால் மலையக மக்கள் முன்னணியும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸூம் தமது ஆதரவுக் கட்சிகளுடன் சேர்ந்து அட்டனில் திட்டமிட்டபடி கூட்டு மேதினத்தைக் கொண்டாடும்'' இப்படிக் கூறுகின்றார் மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் எம். சிவலிங்கம்.

''படிக்காத பாமரத் தொழிலாளர்கள் வர்க்க ரீதியாக ஒன்றுபடுகின்ற போது இந்த தலைவர்கள் அவர்களைப் பிரித்து வைத்து வேடிக்கை பார்க்கின்றார்களே'' என புத்தி ஜீவிகள் வேதனைப் படுகின்றனர்.

# விற்பனை போனஸ் ஒன்பது ரூபாவிலும் வெட்டு! கொடுப்பனவுகளிலும் கைவைப்பு

## சாதுரியமாகக் கருமமாற்றும் நிருவாகங்கள் — சங்கங்கள் மௌனம்

தோட்டத் தொழிலாளர்களுக்கு விற்பனை போனஸ் என்ற பெயரில் கிடைத்த சொற்ப தொகையும் தோட்ட நிர்வாகங்களினால் தட்டிப் பறிக்கப்பட்டுள்ளது. ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் மேலதிகமாக வேலை செய்தால் மட்டுமே ஒன்றரை நாள் சம்பளம். இல்லா விட்டால் அதுவும் இல்லை.

சத்தியாக்கிரகத்தின் போதும் சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தின் போதும் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய தோட்ட நிர்வாகங்கள் இந்த குறுக்கு வழியைக் கையாண்டு வருகின்றன.

இதனால், தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் பெரும் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. தொழிற்சங்கங்களும் கண்டும் காணாமலும் இருப்பதாகத் தொழிலாளர்கள் குறை கூறுகின்றனர்.

அண்மையில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது விற்பனை போனஸாக 9 ரூபா மட்டுமே கிடைத்தது. அதுவும் அடிப்படை சம்பளத்தில் சேர்க்கப்படவில்லை.

இந்த 9 ரூபாவை எந்த வகையிலும் தட்டிப்பறிக்கும் வாய்ப்பு நிர்வாகங்களுக்கு உண்டு. இதனை நாம் அப்போதே சுட்டிக் காட்டி இருந்தோம்.

இப்பொழுது தோட்ட நிர்வாகங்கள் அதனைத் தட்டிப் பறிக்க ஆரம்பித்து விட்டன.

வழமையாக 12 கிலோ தேயிலைக் கொழுந்து பறித்தால் ஒரு நாள் முழுச்சம்பளம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால், சத்தியாக்கிரகத்தின் பின் ஒருநாள் சம்பளம் பெறுவதற்கு 18 கிலோவுக்கு குறையாமல் தேயிலைக் கொழுந்து கொண்டு வர வேண்டும் என தொழிலாளர்கள் கட்டாயப்படுத்தப் படுகின்றனர். இதற்குக் குறைவாக கொண்டு வருபவர்களுக்கு அரைநாள் சம்பளம் அல்லது ஆறு மணித்தியால வேலைக்கான சம்பளம் கணித்து வழங்கப்படுகிறது. இப்படி வழங்கப்படும் போது அடிப்படை சம்பளமான 101 ரூபாவுக்கும் குறைவாகவே கிடைக்கிறது.

ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் வேலை செய்தால் வழமையான நாட்சம்பளத்துடன் அரை நாள் சம்பளம் மேலதிகமாக கட்டாயம் வழங்கப்படவேண்டும். இது தொழிற் சட்டத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் தோட்ட நிர்வாகங்கள் இப்பொழுது என்ன செய்கின்றன? ஒரு நாள் சம்பளத்திற்காக கொண்டு வர வேண்டிய 18 கிலோ தேயிலைக் கொழுந்துடன் 7 கிலோ கொழுந்தை மேலதிகமாகச் சேர்த்து மொத்தம் 25 கிலோ கொண்டு வந்தால் மட்டுமே ஒன்றரை நாள் சம்பளம் என்கின்றன. குறைந்தால் ஒரு நாள் சம்பளம் மட்டும் வழங்கப் படுகிறது. இது சட்டப்படி தொழில் பிணக்குச் சட்டங்களை மீறும் ஒரு செயலாகும்.

இதே போன்று றப்பர் தோட்டத் தொழிலாளர்களும் கட்டாயப்படுத்தப் படுகின்றனர். தினமும் அவர்கள் இரண்டரைக் கிலோ றப்பர் பால் சேகரிக்க வேண்டும். ஆனால் இப்பொழுது 4 கிலோ சேகரிக்க வேண்டும் என கேட்கப்படுகிறது.

இதனை ஆட்சேபித்து களுத்துறை மாவட்டத்தில் உள்ள றைகம் தோட்டத் தொழிலாளர்கள் எட்டு நாட்கள் வேலை நிறுத்தம் செய்தனர். ஆனால், எந்தவிதமான முடிவும் இன்றி வேலைக்குத் திரும்பி விட்டனர். இவ்விடயம் இப்பொழுது களுத்துறை உதவி தொழில் ஆணையாளர் முன் விசாரணை செய்யப்படவுள்ளது.

இது தொடர்பாக சில தொழிற்சங்க அலுவலகங் களுடன் தொடர்பு கொண்ட போது தோட்டத் தொழிலாளர் களிடம் இருந்து தமக்கு எந்தவிதமான முறைப்பாடும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தொழிலாளர்களோ தொழிற் சங்கத் தலைவர்களிடம் முறையிட்டும் ஏதும் நடந்ததாக தெரியவில்லை என்கின்றனர்.

இதில் யார் சொல்வது சரி? எப்படியாயினும் தோட்ட நிர்வாகங்கள் தொழிற்சங் களின் ஒற்றுமை இன்மையைத் தெளிவாகத் தெரிந்து கொண்டு காரியமாற்றுகின்றன.

பாதிக்கப்பட்டிருப்பவர்கள் அப்பாவித் தோட்டத் தொழிலாளர்கள் தான். இவர்களுக்கு விடிவைத் தேடித் தருபவர்கள் யார்?

# ஐந்து பிரதான மேதின ஊர்வலங்கள், கூட்டங்கள்

மலையகத்தில் ஐந்து பிரதான மேதின ஊர்வலங்கள், கூட்டங்கள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கூட்டு மேதின முயற்சி தோல்வி அடைந்தபோதிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தோட்டத் தொழிலாளர் யூனியன் இணைந்து அட்டனில் மேதினம் நடத்துகின்றன.

இந்த அணியுடன் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கப் பிரமுகர்களான கே. வேலாயுதம், வி. புத்திரசிகாமணி ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அதிருப்தியாளர் குழுவின் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி, ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் அமைப்புகள் மேதினத்தை நுவரெலியாவில் கொண்டாடு கின்றன:

கூட்டுக் கமிட்டியின் செயலாளர் நாயகமான பி.பி.கந்தையாவை பொதுச் செயலாளராகக் கொண்ட தொழிலாளர் தேசிய சங்கம் நோர்வுட் நகரில் மேதின ஊர்வலத்தை நடத்துகின்றது.

விவசாய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸின் மேதினக் கூட்டம் மடுல்சீமையில் நடைபெறும்.

அகில இலங்கை ஐக்கிய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தனியாக மேதினத்தை கொண்டாடும்.

அஸீஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் அதன் மறைந்த தலைவர் ஏ. அஸீஸின் சிரார்த்த தினமான 29ஆம் திகதியே மேதினத்தைக் கொண்டாட இருப்பதாக நம்பப் படுகிறது.




### ஜுராஸிக் கால ரகசியங்கள்!

அந்தத் தனித்துவக் கட்சியின் மறைந்த தலைவரினால் உருவாக்கப்பட்ட கட்சியின் பல உள்வீட்டு விவகாரங்கள் ஜுராஸிக் கால ரகசியங்கள் போலவே மறைந்திருக்கின்றனவாம். அரசியல் அம்பலக் காரருக்கு இந்த ரகசியங்கள் குறித்து பட்டும் படாமலும் சொல்லும் கடிதங்களும் வந்துள்ளன.

ஒரு 'டிரஸ்ட்' பற்றிச் சொல்லும் அக்கடிதங்களில் தெரிவிக்கப்பட்டிருந்த தகவல்களையிட்டு தனித்துவக் கட்சியின் சில முக்கிய புள்ளிகளிடம் கேட்டால் பல கதைகளைக் கூறுகிறார்கள். ஆனால் உரியவர்களிடம் கேட்கமாட்டோம் என்கிறார்கள்.

டிரஸ்ட் பற்றித் தனித்துவக் கட்சியின் நிதி விவகாரங்களுக்குப் பொறுப்பானவர் நிச்சயம் அறிந்திருக்க வேண்டும். ஆனால் அவர் 'டிரஸ்ட்' உண்மை என்றும், அது நம்பிக்கைக்குரிய பொறுப்பாளர் அமைப்பில் பதியப்பட்டிருக்கிறது என்றும், எவரும் அதைப் பார்க்கலாம் என்றும் சவால் விட்டார்.

ஆனால் அப்படி ஒரு பதிவும் செய்யப்படவில்லை என்று அரசியல் அம்பலக்காரருக்கு நம்பகமான தகவல் கிடைத்திருக்கிறது. இப்போது அந்த நிதி விவகாரப் பொறுப்பாளரும் அப்படியா என்று வாய் பிளக்கிறார்.

'டிரஸ்ட்' ஏற்படுத்தப்பட்டது உண்மையானால் அதில் முக்கிய புள்ளிகள் இருப்பார்கள். அதில் இருக்கிறார் என்று கூறப்படும் நிதிவிவகாரங்களுக்குப் பொறுப்பானவருக்குக் கூட அதன் கணக்கு வழக்கு விவகாரங்கள், கூட்டங்கள், தீர்மானங்கள் பற்றி எல்லாம் தெரிய வேண்டுமே என்கிறார்கள் சில முக்கிய புள்ளிகள். ஆனால் அந்தப் பொறுப்பாளர் என்று கூறப்படுபவருக்கு எந்த விவரமும் தெரியவில்லை.

'ட்ரஸ்ட்'டில் அங்கத்தவர்களாக இருப்பவர்கள் யார் யார் என்ற விவரங்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். இந்த டிரஸ்ட் தனியுரிமை பெற்றதா? அல்லது கட்சிக்கும் பொது மக்களுக்கும் உரிமையானதா என்ற கேள்விகளுக்கு விடை என்ன என்றும் இவர்கள் கேட்கிறார்கள்.

''மறைந்த அந்தப் பெரும் தலைவர் நேர்மையாக நடக்க விரும்பினார். கட்சி சிதைவடைவதையும் அதன் வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதையும் தவிர்க்கச் சில மிக மிக முக்கியமான புள்ளிகளிடம் ''வளங்கள்'' விடுவிப்பு தொடர்பாகக் கையெழுத்து வாங்கினார்.

கையெழுத்துப் போட்டுக் கொடுத்தவர்கள் அவ் வளங்கள் பற்றிப் பிற்காலத்தில் பேச விரும்பவில்லை. ஆனால் மறைந்த தலைவரே இவ் வளங்களைக் கட்சியின் எதிர்கால நலன்களுக்காகப் பாதுகாக்க நம்பிக்கைக்குரிய பொறுப்பாளர் அமைப்பின் உதவியை நாடியிருக்கிறார். டிரஸ்ட்டாகப் பதிவதற்குச் சில நாட்களில் வருவதாகத் தலைவர் கூறியிருக்கிறார். ஆனால் அவரால் இறுதியில் அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.''

இதுதான் நடந்த உண்மை என்பது இப்போது தெரியவருகிறது. மறைந்த தலைவரின் செய்ய விரும்பிய பணி நிறைவேற்றப்படுமா என்பது தான் கேள்வி.

### சாம்பார் அரசாங்கம்

ஜுலை மாதம் ஆரம்பத் திகதிக்குள் அரசாங்கத்தை எப்படியும் கவிழ்த்து விட முடியும் என்று பச்சைக் கட்சிக்கார முக்கியஸ்தர்கள் மத்தியில் பலமாகப் பேசிக் கொள்ளப்படுகிறதாம்.

''வரவு செலவுத் திட்டத்தின் போது அரசாங்கத்தை கவிழ்த்திருக்க முடியும். ஆனால் லீடர் அதனை விரும்பவில்லை. அப்போது கவிழ்த்திருந்தாலும் பெரிதாக எதையும் சாதித்திருக்க முடியாது. அதனால் தான் ஜுலை மாதமளவில் அரசுக் கவிழ்ப்புக்கு பச்சைக் கட்சி லீடர் முக்கியத்துவம் கொடுத்தார்.'' இப்படி அந்த லீடருக்கு மிக நெருக்கமான முக்கியஸ்தர் ஒருவர் அரசியல் அம்பலக்காரருக்குத் தெரிவிக்கிறார்.

''ஜுலையில் பெரிய மாற்றம் வரப்போகிறது. இப்போது நான் அதனை முன்கூட்டியே உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

மாற்றத்துக்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. கூட்டு அரசாங்கம் ஒன்று அப்போது ஏற்படுத்தப்படும். ஆயுதம் தாங்கிய சில தனியார் அமைப்புகளின் (தமிழ்க் குழுக்கள் அல்ல) ஆயுதங்களும் களையப்படும்.

ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கக் கூடிய அமைப்புகளுக்குக் கூடிய முக்கியத்துவம் கொடுத்துக் கூட்டு அரசை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதனைத் தொடர்ந்து சுதந்திரமான தேர்தல் ஒன்றும் நடத்தப்படும்''

இப்படி லீடர் தெரிவிக்கிறார்.

அப்படி என்ன ஏற்பாடுகள் நடக்கின்றன? யார் யார் அதில் சம்பந்தப்படுகிறார்கள் என்று கேட்டால் வேறு கேள்விகள் கேட்கக்கூடாது என்று லீடர் சொல்கிறார். ஜுலை மாதம் அரசாங்கம் கவிழுமா கவிழாதா? இதற்கு காலம் தான் பதில் சொல்லும்.

ஆனால் சில பச்சைக் கட்சி, அரச தரப்பு முக்கிய புள்ளிகள் கூட்டு அரசாங்கம் பற்றியும், புதிய தேர்தல் ஒன்று பற்றியும் இரண்டு சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருக்கிறார்களாம்.

பச்சைக் கட்சிக்கு தனித்து நின்று அரசாங்கத்தை எதிர்த்துச் செயற்பட முடியவில்லை என்று அதே கட்சியில் உள்ள இன்னுமொருவரும் புலம்புகிறார். உள்ளே ஒரே குத்து வெட்டு நடக்கிறது. இதனால் தான் பச்சைக் கட்சியால் தனித்து இயங்க முடியவில்லை என்பது அவரது வாதம். இப்படிச் சொல்லும் அவர் லீடருக்கு எதிரானவர்.

அதென்ன உள்ளே குத்து வெட்டு! அவர் இப்படி ஒரு சிறு பட்டியல் போட்டார்.

கருவானவருக்கும் லீடருக்கும் பிரச்சினை. கருவானவருக்கும், காவத்தைக் காரருக்கும் பிரச்சினை. லீடருக்கும், காவத்தைக் காரருக்கும் பிரச்சினை. தீவிரபோக்குக்காரர்களுக்கும், மிதவாத போக்குக்காரர்களுக்கும் பிரச்சினை. உலக அழகுத் திருமதியால் லீடருக்கு நெருக்கமானவர்களுக்குள்ளும் பிரச்சினை.

இப்படி அவரின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

### இது தாண்டா மே தினம்!

மலையகத்தில் மேதினக் கூட்டத்தை நடத்தக் கூடாத இடத்தில் நடத்திக் கசப்பான அனுபவங்களைப் பெற்றிருந்த காரணத்தினால், மலையகத்தின் பிரதான இரு தமிழ் அரசியல் கட்சிகள் இம்முறை மேதினத்தை அட்டனில் நடத்துவது உறுதியாகியிருக்கிறது.

மேதினத்தின் பிரதான கோஷமாக இருப்பது தொழிலாளர் வாழ்க்கை உயர்வும், நலனுமே. இதைக் கருத்திற் கொண்டே இவ்விரு பிரதான தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்து மே தினத்தை நடத்த நடவடிக்கை எடுத்து வருகின்றன.

அட்டனில் ஆறுமுகமானவரும் சேகரனாரும் மே தினத்தை நடத்தவிருப்பதால், நுவரெலியாவில் தமது மே தினத்தை நடத்த ஆறுமுகத்தின் அதிருப்தியாளர்கள் தீர்மானித்தார்களாம்.

ஆறுமுகத்தாருக்கு எதிராகத்தான் நுவரெலியாவில் மேதினத்தை நடத்துகிறோம். எல்லா உண்மைகளையும், கடந்த காலத்தில் நடந்த ஊழல்களையும் பட்டியல் போட்டு அம்பலப்படுத்துவதே எமது நோக்கம் என்று அறிவிப்புகள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றனவாம். தொழிற்சங்கம் என்றால் போட்டி என்று தான் அர்த்தமோ?

### யாருக்கு அது சொந்தம்?

நூறு நாள் காலக்கெடு புகழ், முஸ்காங். தலைவர் மீது அதிகார அம்மணிக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லையாம். ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி விவகாரத்தில் இவருக்கும் தொடர்பு இருக்கிறது என்று அம்மணி சந்தேகிக்கிறார். இப்படி அடிக்கடி கூறுகிறார் அதிகாரத்தரப்பு சிறுபான்மை அமைச்சர் ஒருவர். இந்த அமைச்சர் மீண்டும் பழைய குருடி கதவைத் திறவடி என்பது போல முஸ். காங்கிரஸைச் சீண்டுவதில் அக்கறை காட்டத் தொடங்கியிருக்கிறாராம்.

நிலைமை இவ்வாறு இருக்கையில் கைவிடப்பட்டுவிட்டதாகக் கூறப்படும் 'ஒலுவில்' சமாசாரத்தில் இரு தலைமைத்துவமும் அக்கறை காட்டத் தொடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. இதனால் 'ஒலுவில்' விவகாரம் தங்கள் தங்கள் தலைவரிடமே ஒப்படைக்கப்பட வேண்டும் என்று அவர்களின் ஆதரவாளர்கள் கசமுசாவில் ஈடுபட்டிருக்கிறார்களாம்.

நூறு நாள் புகழ் தலைவரிடமே இதன் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதே பெரும்பாலானவர்களின் கருத்தாக இருக்கிறது என்று அவருக்குச் சார்பான எம்.பி ஒருவர் தெரிவித்து வருகிறாராம்.

தன்னிடமே இவ்விவகாரம் தொடர்பான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட வேண்டும் என போட்டித் தலைவி வெளிப்படையாகக் கேட்காவிட்டாலும் அதிகார அம்மணியிடம் குசுகுசுத்திருக்கலாம் என்று ஒரு ஊகம் நிலவுகிறது.

வெளியே இது பற்றி பலவாறு பேசிக்கொள்ளப்பட்டாலும் இது குறித்துத் தீர்மானமெடுக்க உதவும் முக்கிய கூட்டமொன்று விரைவில் நடக்க உள்ளதாகத் தெரியவருகிறது.

### வரம் மறுக்கும் பூசாரிகள்

இரண்டெழுத்து தீவிர இயக்கத்தினால் குறுகிய கால அவகாசத்தில் வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம் அகதிகளின் அவலவாழ்வு தொடங்கி பத்து வருடங்களுக்கு மேலாகின்றது.

புத்தளத்தில் பெருமளவாக வாழும் இந்த அகதிகள் இருந்த இடத்தின், அதிகாரமுள்ள சபையினாலும், வந்த இடத்தின் அதிகாரமுள்ளசபையினாலும் உதாசீனப்படுத்தப்படுகிறார்கள்.

அதிகார அம்மணியுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் விளைவாக இந்த அகதிகளுக்கு, அவர்களின் நலன்களைக் கவனிக்கும் விசேட ஆணையாளர் ஒருவரை நியமிக்க இணக்கம் காணப்பட்டு இருந்தது என்றாலும், அதனை முளையிலேயே கிள்ளி எறியும் நடவடிக்கைகள் மறைமுகமாகச் செய்யப்படுகின்றனவாம்.

வடக்குடன் தொடர்புபடும் ஓரிரு அதிகாரிகளும், அவர்களுக்கு மேலான அரச அதிகாரி ஒருவரும் இதில் தீவிர கவனம் செலுத்துகிறார்களாம்.

# இரவுநேர போக்குவரத்துத் தடை காரைதீவு வீதியில் விரைவில் தளர்வு!

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு கடந்த பல வருடங்களாகப் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தி வரும் காரை தீவு பிரதான வீதி ஊடான இரவு நேர போக்குவரத்துத் தடை விரைவில் தளர்த்தப்படவிருக் கின்றது.

காரைதீவுசந்திக்கு அருகில்விசேட அதிரடிப் படையின் பெரிய முகாம் ஒன்று அமைந்திருக்கிறது. இந்த முகாமின் விசேட சோதனைச் சாவடி ஊடாக மாலை ஏழு மணிக்குப் பின்னர் போக்குவரத்துச் செய்யத் தடை விதிக்கப்பட்டு பாதை மூடப்படுவது வழக்கம்.

இதனால் தென்கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த கிராம மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

அத்துடன் கல்முனை நகரத்துடனான தொடர்புகளையும், ஏழு மணி முதல் துண்டிக்க வேண்டிய கட்டாயமும் நீடித்து வருகின்றது.

அதேபோல், சம்மாந்துறை, நிந்தவூர், ஒலுவில், அட்டாளைச்சேனை, அக்கரைப் பற்று, தம்பிலுவில், திருக்கோவில், பொத்துவில் பிரதேச மக்கள் இரவு வேளைகளில் கல்முனை தெற்கு ஆதார வைத்திய சாலை, கல்முனை ஆதாரவைத்தியசாலை, மட்டக்களப்பு போதனாவைத்தியசாலை என்பவற்றுக்கு அவசர நோயாளர்களைக் கொண்டு செல்வதிலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பலவருடங்களாக நடைமுறையிலிருக்கும் இந்த போக்குவரத்துத் தடையால் கல்முனை நகரமும் இரவு ஏழு மணி முதல் சோபை இழந்துகாணப்படுகிறது.

மக்கள் எதிர்நோக்கும் இந்த அவல நிலை தொடர்பாக கிழக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, கிராமிய வீடமைப்புத்துறை அமைச்சரும், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியுமான பேரியல் அஷ்ரப் பாதுகாப்பு உயரதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

இதன் பயனாகவே இரவு ஏழு மணியுடன் மூடப்படும் காரைதீவு விசேட அதிரடிப்படை சோதனைச்சாவடியூடான போக்குவரத்துத் தடையைத்தளர்த்துவதற்கு பாதுகாப்பு உயரதிகாரிகள் இணக்கம்தெரிவித்துள்ளனர்.

இதன்படி காரைதீவு பிரதான வீதியூடாக இரவு பத்துமணிவரை போக்குவரத்துச் செய்யும் வகையில் போக்குவரத்துத்தடை தளர்த்தப்படவிருக்கின்றது.

காரைதீவு பிரதான வீதியில் அமைந்திருக்கும் விசேட அதிரடிப்படை சோதனைச் சாவடி ஊடான போக்குவரத்தை 24மணி நேரமும் அனுமதிக்க வேண்டுமெனவும் அமைச்சர்பேரியல்வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சர்பேரியல் அஷ்ரப் எடுத்துள்ள இந்த நடவடிக்கை பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏ.எல்.எம்.சலீம்

# இறால் உற்பத்தியாளர்கள் புத்தளத்தில் அவதி!

தற்பொழுது பெருமளவு அந்நியச் செலா வணியை ஈட்டித் தரும் தொழிலாகக் கருதப் படும் இறால் உற்பத்தி புதிய ஆபத் தொன்றை எதிர்நோக்குகின்றது என்று புத்தளம் பகுதியில் உள்ள இறால் உற்பத்தி யாளர்கள் ''சுடர்ஒளி'' யிடம் தெரிவித்தனர்.

தற்போது புத்தளம் பகுதியில் இடம்பெறும் திடீர் கொள்ளைச்சம்பவங்கள் இறால் உற்பத்தியாளர்களை இக்கட்டானநிலைக் குள் தள்ளிவிட்டுள்ளன.

இங்குள்ள இறால் பண்ணைகளில் — அதாவது பாலாவி, இரம்பை, மதுரங்குளி, முந்தல், மங்களவெளி போன்ற பகுதி பண்ணைகளில் கடந்த இரு வருடங்களுக்கு மேலாக திட்டமிட்ட முறையில் கொள்ளைகள் நடத்தப்பட்டுவருகின்றன.

இறால் பண்ணைகளில் பொருத்தப் பட்டிருந்த உபகரணங்கள், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், இயந்திரத்தால் சுழலும் காற்றாடிகள் என்பன பெருமள வில் கொள்ளையர்களிடமிருந்து மீட்கப் பட்டுள்ளன.

இவற்றின் பெறுமதி சுமார் 50 இலட்சம் ரூபா வுக்கு மேல் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் இன்னுமொரு விசேடம் என்ன வென்றால் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற இருவர் உட்பட பத்து சந்தேகநபர் களை ஆயுதங்கள் சகிதம் புத்தளம் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இதற்கிடையில் கடந்த 10ஆம் திகதி புத்தளம்—மன்னார் வீதியில் மூன்றாம் மைல்கல், அருகே அமைந்துள்ள சேகுலன் தீவு என்னும் இடத்திலுள்ள இறால் பண்ணை ஒன்றுக்குள் நடுநிசி யில் திருடர்கள் புகுந்தனர். சுமார் 15பேரடங்கிய இக்கோஷ்டியினர் இராணுவ வீரர்களின் உடைபோன்ற உடையை அணிந்திருந்தனர். பயங்கர ஆயுதங்களுடன் காணப்பட்டனர்.

இறால் பண்ணைக்காவலாளிகளை அறை ஒன்றில் போட்டுப் பூட்டி விட்டு மின்சாரத்தைத் துண்டித்து விட்டு பண்ணைக்குள் இறங்கி இறால் பிடித்தனர்.

அத்துடன் பிடித்த இறால்களை நன்றாக பொதிசெய்துகொண்டு தாம்கொண்டு வந்திருந்த ''எல்ப்'' லொறியில் ஏற்றிச் சென்றனர். இவர்களால் கொண்டு செல்லப்பட்ட இறால் சுமார் 800 கிலோ கிராமுக்கு மேற்பட்டது எனவும், இதன் பெறுமதி சுமார் ஆறு இலட்சம் ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டது.

பணத்தையும் சரீர உழைப்பையும் கொட்டி உற்பத்தி செய்யப்படும் இறால் ஒரே இரவில் கொள்ளை போவதால் உற்பத்தியாளர்கள் மத்தியில் விரக்தி நிலை காணப்படுகிறது.

—ஏ.எஸ்.புல்கி

## வாசகர் இதயம் பேசுகிறது

''சமாதானமா போரா?'' என்னும் தலைப்பில் வெளியாகியிருந்த கட்டுரை நாட்டின் உண்மை நிலையை வெளிப்படுத்தியிருந்தது.

— க.சின்னத்துரை, தெல்தெனியா.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறை தனது வருடாந்த உலக நாடகவிழாவில் மலையகக் கலை பண்பாட்டு நிகழ்வுகளை வெளிப்படுத்திய சிறப்பினைக் கலையமுதம் பகுதியில் தந்திருந்தீர்கள். நன்றி.

— த.துரைசாமி, மஸ்கெலியா.

பெயரளவில் வவுனியாவுக்கு ரயில் சேவை நடத்தி என்ன பயன்? பிரயாணிகளின் முறைப்பாடுகளை ''சுடர்ஒளி'' தந்திருந்த விதம் பலே.

— ஏ.பிரபாதேவி, வவுனியா.

வடக்கில் இளம் பெண்களை ஏமாற்றுவதற்குப் புதிய தந்திரம் பயன்படுவது பற்றி ''தேரடி அரட்டை''யில் வெளியான தகவல் எம்மை அதிரவைத்துவிட்டது.

— எம்.ஹஸினா சுபைர், கல்முனை.

ரம்பொடை அனுமர் கோயில் மகா கும்பாபிஷேகக் காட்சிகளை அழகுறத் தந்த வர்ணப்படங்கள் அபாரம்.

— தே.வேதநாயகம், கண்டி.

மன்னாரில் இரு பெண்கள் நாசமாக்கப்பட்ட செய்தி வந்த சூட்டுடன் திருகோணமலையில் சித்தசுவாதீனமற்ற பெண்கள் கெடுக்கப்பட்ட தகவல் வந்திருக்கிறது. நாடு எங்கே போகிறது?

— ம. சுகுமாரி, மட்டக்களப்பு.

தலைநகரில் ஒரு பாலத்தின் அவல நிலையை ''மிஸ்டர் க்றோ'' தந்து எம்மை அசத்திவிட்டார். என்றுதான் அது திருத்தி அமைக்கப்படுமோ?

— எம்.எம். ஹுசேன், பதுளை.

பட்டுப்புடைவைகளைப் பாதுகாக்கும் முறை பற்றி ''பெண்'' பகுதியில் பயனுள்ள தகவல்கள் தந்திருந்தீர்கள்.

— ஆமினா அசிலி, கல்முனைக்குடி — 13.

சமாதானப் பேச்சு பற்றி லண்டன் தகவல்கள் மூலம் உண்மையை உணரவைத்ததற்கு நன்றி.

— வி. தனபாலசிங்கம், மன்னம்பிட்டி.

''மசாலா மிக்ஸ்'' பகுதியில் வர்ணப்படங்கள் சூப்பர். தகவல்கள் ஒரே விதம்.

— பைறோஸ், சாய்ந்தமருது.

# ராசி பலன்

**29.04.2001 முதல் 05.05.2001 வரை**
**பொ.சந்திரன்.**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**
இராசியில் சூரியன் பூரணபலத்துடன் இருக்கிறார். பொருளாதாரம் தடைப்படலாம். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனங்களால் இலாபம் இல்லை. சொந்த உறவுகள் பலவீனம் அடையலாம். எதிரிகள் தொல்லை தருவார்கள். நிதானமாக செயற் பட்டால் அவர்களை வெல்லலாம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும்.

**இடபம் : கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**
இராசியில் புதன், குரு, சனி நன்மையான பலன் உச்சம் பெற்று இருப்பது விசேஷம். பொருளாதாரம் சீர்கேடு அடையலாம். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி குறையலாம். வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார் உறவினர் விசுவாசமாக இருப்பர். குடும்பத்தில் சச்சரவு இருக்கும். தேக ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**
இராசிநாதன் விரயஸ்தானத்தில் இருப்பதால் செலவு அதிகமாகும். கல்வியில் ஆர்வம் குன்றலாம். சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். சகோதர உதவி இருக்கும். உற்றார் உறவினர் விசுவாசமாக இருப்பர். குடும்பத்தில் சச்சரவு இருக்கும். தேக ஆரோக்கியம் நன்று. தொழில் விருத்தியுண்டு.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**
இராசிநாதன் இராசி உட்பட இரண்டாம் மூன்றாம் இராசிகளில் சஞ்சரிப்பது நல்லது. சனியின் பார்வை நல்லதல்ல. ஆனால் செவ்வாயின் பார்வை நன்மை செய்யும். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். சொந்தக்காரர் அயலவர் விசுவாசமாக இருப்பர். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வருவாய் அதிகரிக்கும்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம் 1.**
இராசிநாதன் பாக்கியஸ்தானத்தில் உச்சமாக இருப்பது பல வழிகளிலும் நன்மை செய்யும். சுக்கிரனின் பார்வையும் சிறப்பானதே. கையில் காசு தங்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனங்களால் செலவு ஏற்படும். தேக ஆரோக்கியம் நன்று. பிரயாண வாய்ப்புண்டு. தொழில் துறையில் பிரகாசம் ஏற்படும். பதவி உயர்வு உண்டு.

**கன்னி: உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2.**
இராசிநாதன் பாக்கியஸ்தானத்தில் குருவோடு இருப்பது நலம். சுக்கிரனின் பார்வை பலவித நன்மைகளைச் செய்யும். கையில் காசு தங்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனத்தால் இலாபம் உண்டு. சொந்தக்காரர் அயலார் விசுவாசமாக இருப்பர். குடும்ப அமைதி உண்டு. விசுவாசம் உண்டு. சுகம் உண்டு.

**துலாம்: சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3.**
இராசிநாதன் உச்சமடைந்து இருப்பது விசேஷம். உச்ச சூரியனின் பார்வை அவ்வளவு நன்மை என்று சொல்ல முடியாது. கையில் காசு தட்டுப்படலாம். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி எதிர்பார்க்க முடியாது. வீடு, வாகனங்களால் இலாபம் இல்லை. எதிரி தோசம் அடைந்திருப்பதால் ஆபத்தில்லை. குடும்பத்தில் எச்சரிக்கையுடன் கூடிய அமைதி நிலவும். பிரயாண வாய்ப்பு உண்டு. தேக சுகம் சமநிலையில் இருக்கும். தொழிலில் சிறு பிரச்சினை தோன்றலாம்.

**விருச்சிகம்: விசாகம்4, அனுஷம், கேட்டை.**
இராசிநாதன் கேது சேர்ந்தது தோஷம்தான். இருப்பினும் புதன், குரு, சனி ஆகியோரின் பார்வை நன்மைகளைச் செய்யும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் அயலார் அன்பாய் இருப்பர். குடும்பத்தில் சிறு பிரச்சினை வரலாம். தேக சுகம் நன்று. தொழிலில் போட்டி இருப்பினும் வளர்ச்சி உண்டு. பதவி உயர்வு உண்டு.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**
இராசியில் இருவர், இராசிநாதனோடு இருவர் ஆக ஐவர் மற்றும் ராகுவின் பார்வை ஆறு கிரகங்களோடு தொடர்புபட்டிருப்பதால் நன்மை, தீமை கலந்த வாரம். பணத் தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மனச் சஞ்சலம் இருக்கும். எதிரியின் பலம் அதிகம். குடும்பத்தில் வாய்ச் சண்டை இருக்கும். தேக சுகம் சிறிது பாதிக்கலாம்.

**மகரம்: உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2.**
இராசிநாதன் பூர்வ புண்ணியஸ்தானத்தில் புதன், குருவோடு இருப்பது விசேஷம். குருவின் பார்வை இராசிக்குக் கிடைப்பது நலம். கையில் காசு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் சுற்றத்தார் விசுவாசமாக இருப்பர். தேக ஆரோக்கியம் நன்று. புதிய தொழில் வாய்ப்பு உண்டு.

**கும்பம்: அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3.**
இராசிநாதன் சுகஸ்தானத்தில் குருவோடும் புதனோடும் இருப்பது விசேஷம். கையில் காசு தங்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார் உறவினர் அன்பாய் நடப்பர். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு. சுகம் உண்டு. தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறை வளர்ச்சி அடையும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**
இராசிநாதன் வீரியஸ்தானத்தில் சம பலன். ஆனால் சுக்கிரன் இராசியில் பூரணபலம் பொருந்தி இருப்பது நல்ல பலனைக் கொடுக்கும். கையில் பணம் புழங்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். குடும்பத்தில் எச்சரிக்கை கலந்த அமைதி இருக்கும். தேக ஆரோக்கியம் நன்று.

# இன்ரநெற்றில் பணப்பரிமாற்றம்

பண்டமாற்று அடிப்படையில் ஆரம்பித்த உலக வர்த்தகம் இன்று இன்ரநெற்றில் நெறிப்படுத்தப்படும் அளவுக்கு வந்திருக்கிறது.

கணத்துக்குக் கணம் சிலர் கோடீஸ்வரர்களாவதையும் சிலர் ஒட்டாண்டிகளாவதையும் இன்ரநெற் மூலம் அறியமுடிகிறது.

பணம் சேர்க்கும் வெறியில் இன்று முழு உலகும் பறந்தடித்து உழைத்துக் கொண்டிருக்கும் வேளையில் பணம் புதியதொரு பரிமாணத்தை எடுத்திருக்கிறது.

கண்ணால் மட்டுமே காணக்கூடிய – தொட்டு உணரமுடியாத – பணவடிவங்கள் இன்ரநெற் மூலம் பரவலாகப் புழக்கத்துக்கு வந்திருக்கின்றன.

அமெரிக்காவைச் சேர்ந்த 'பீன்ஸ்' (Beenz) என்னும் வலைத்தள நிறுவனம் 1998 ஆம் ஆண்டில் இவ்வகைப் பணத்தைப் புழக்கத்துக்குக் கொண்டுவந்தது. 'பீன்ஸ்' என்ற பெயரிலேயே அழைக்கப்படும் இந்த இணையப் பணத்தைக்கொண்டு இணையத் தளங்கள் மூலம் விற்பனையாகும் பொருட்களை வாங்க முடியும்.



www.beenz.com என்னும் வலைத் தளத்தினுள் நுழைந்து எமது மின் அஞ்சல்(ஈ–மெயில்) முகவரியை முதலில் பதிவு செய்துகொள்ள வேண்டும். அதன்பின் அத்தளத்தின் தகவல் பக்கங்களினுள் நுழைந்து கொள்ளும் போது எமது கணக்கில் 'பீன்ஸ்' பணம் வரவு வைக்கும் பணி ஆரம்பமாகும்.

'பீன்ஸ்' வலைத்தளத்தினுள் நாம் பார்வையிடும், பங்கேற்கும் நிகழ்வுகளுக்கு ஏற்ப புள்ளிகளின் அடிப்படையில் நமக்கு அன்பளிப்பாகத் தரப்படும் பீன்ஸ் பணத்தின் தொகை அதிகரித்துக்கொண்டே செல்லும்.

இப்படியான பீன்ஸ் பணத்தை வழங்குவதற்கென்றே ஏராளமான வலைத் தளங்கள் உருவெடுத்திருக் கின்றன. இவை தங்களின் தகவல் பக்கங்களைப் பார்வையிடுபவர்களுக்கு இணையப் பணத்தை சன்மானமாக வழங்குகின்றன.

இவ்வகையான இணையப் பணத்தை மின் வணிகத்தில் (e-commerce) ஈடுபட்டுள்ள பெரும்பாலான நிறுவனங்கள் ஏற்றுக்கொள்கின்றன. இப்பணத்தை உபயோகித்து தமக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வது மட்டுமல்லாமல் நன்கொடையாகதொண்டு நிறுவனங்களுக்கும் வழங்கலாம். தமது கணக்கில் மொத்தமாக வரவிலிருக்கும் இணையப்பணத் தொகையை அறிந்துகொள்ள விரும்புபவர்கள் www.beenz.com தளத்துடன் தொடர்புகொண்டு தெரிந்து கொள்ளலாம்.

பீன்ஸைப் போன்றே இன்னுமொரு இணையப் பண அலகான 'ஃப்லூஸ்' (Flooz)உம் மின் வணிகத்தில் அதிகமாகப் புழக்கத்தில் உள்ளது.

இதில் புள்ளிகளுக்குப் பதிலாக அமெரிக்க டொலரின் மதிப்பீட்டிலேயே இணையப் பணம் பரிமாறப்படுகிறது. ஃப்லூஸை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியாது. மாறாக இதனைப் பெற கடன் அட்டை (Credit Card) தேவைப் படுகிறது. www.flooz.com தளத்துடன் தொடர்பை ஏற்படுத்தி ஃப்லூஸ் கரன்சியைப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த ஃப்லூஸ் கரன்சியை ஈ–மெயில் மூலம் வேறொருவருக்கு அனுப்பிப் பரிமாறிக் கொள்ளலாம்.

'ஒன்–லைன்' முறையில் பணம் செலுத்தும் நடைமுறை மின் வணிகத்தில் செல்வாக்கிழந்துவர, இணையப் பணப் பரிமாற்றம் அதீத வரவேற்பைப் பெறுகிறது.

கணனியில் திருகுதாளப் புரோக்கிராம்களை எழுதி திருட்டுத் தனமாகப் பிறரது கடன் அட்டைகளில் மோசடி செய்வோரின் தில்லுமுல்லுகள் இணையப் பணப் பரிமாற்ற முறையில் செயலிழந்து போகின்றன.

'பீன்ஸ்', 'ஃப்லூஸ்' போன்ற இலத்திரனியல் இணையப் பண அலகுகள் பரிமாற்றமானது எளிமையானதாகவும் பாதுகாப்பானதாகவும் இருப்பதால் இணைய வர்த்தக நிறுவனங்கள் பெருமெடுப்பிலான ஆதரவை இதற்கு வழங்குகின்றன.

இதனால் இணையப் பணமானது சர்வதேசத் திற்கும் பொதுவான ஒரே பண அலகாக மாறும் வாய்ப்பு உள்ளது.

அவ்வாறான நிலை ஏற்படும்போது எந்த நாட்டிலும் எந்தப் பொருளையும் அந்தந்த நாட்டின் நாணய மாற்று விகித மதிப்பைக் கணக்கில் கொள்ளாமல் வாங்கிக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படலாம்.

ஆனால் இந்த இணையப் பணப் பரிமாற்றம் சில எதிர் விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடும்.

இத்தகைய கரன்சிகளை ஏற்றுக்கொள்ளும் நிறுவனங்கள் அனைத்தும் ஒட்டுமொத்தமாகத் தமது பங்களிப்பை வாபஸ் பெற்றுவிட்டால் இணையப் பணப் பரிமாற்றம் அடியோடு செயலற்றதாகிவிடும்.

அத்தோடு சர்வதேச ரீதியில் புழக்கத்தில் உள்ள இந்தப் பணத்தின் அளவை அறிந்து ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்காவிட்டால் நாடுகளின் பொருளாதாரம் சீர்கெட்டுவிடும் அபாயமும் இருக்கிறது.

உலகளாவிய ரீதியில் புழக்கத்திலுள்ள இணையப் பணத்தின் சரியான புள்ளி விவரங்களை இதுவரையில் யாராலும் வரையறுத்துக் கூற இயலவில்லை.

இதனால் வரைமுறை களெதுவுமற்ற வரிகள் விதிக்கப்படாத வர்த்தக நடைமுறையை இணையப்பண வர்த்தகம் கொண்டுள்ளது. இதை சீராகப் பேண முறையான சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டு சரியாக வழிப்படுத்தினால் உலகில் மாபெரும் வணிகப் புரட்சி ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

—தீபன்

# சிறுநீரகங்கள் ஜாக்கிரதை!

இன்றைய கால கட்டத்தில் மனிதனுக்குப் பல பயங்கரமான நோய்கள் ஏற்படுகின்றன. அவற்றுள் சிறுநீரகம் சம்பந்தமான நோய்கள் முக்கியமானவை. இந்த நோய் வரட்சிப் பிரதேச மக்களுக்கும், வறுமையில் வாடுவோருக்கும் அதிகம் ஏற்படுகின்றது.

இடுப்பில் கை வைத்தால் நம்பெருவிரல்படும் இடத்தில் சிறுநீரகம் அமைந்துள்ளது. இது போஞ்சி மரக்கறி விதையின் அமைப்பைக் கொண்டது.

சிறுநீரகத்தின் உள்அமைப்பானது; அதை வெட்டினால் அதன் மேற்புறத்தில் கறுப்பு நிறத்தில் மேல்தோல் அமைந்திருக்கும். அதற்குள்ளால் வெளிர்நிறத்தில் அமைந்திருப்பது மையக்குழியம். மையக்குழியத்தின் ஓரத்தில் குழிபோல் சிறுநீரகஇருப்பிடம் அமைந்திருக்கும்.

பெருநாடியின் கிளையான சிறுநீரகக் குழாயினூடாகக் குருதி கடத்தப்படுகிறது. எனவே சிறுநீரகத்திற்கு சுத்தமான குருதி கடத்தப்படுகிறது. இவ்வாறு கடத்தப்படும்போது நைதரசனுடன் கூடிய கழிவுப் பொருட்களும், கனியங்களும் வெளியேறுகின்றன. இவ்வாறு கழிவுப் பொருட்கள் வெளியேற போதியளவு நீர் பருக வேண்டும். அப்படி இல்லாவிடில், இரத்தத்தை ரோக வடிகட்ட முடியாமல் போய்விடும். எனவே சிறுநீரகக் கற்கள் ஏற்படும். சிறுநீரகக் காய்கள் வீங்கி அவற்றுள் புண் ஏற்படும். இந்நிலை நீடித்தால் மிகவும் ஆபத்தானது.

சிலருக்கு சிறுநீர் கழிக்கும் போது எரிவு ஏற்படுகின்றது. இதற்குக்காரணம், உவரிப்பில் கிருமிகள் தொற்றுவதாகும். ஆரஞ்சு போன்ற காரஉணவுகள் தொடர்ந்து உண்ணுவதால் சிறுநீரகம் பாதிக்கப்படும். ஆரஞ்சு சாறு நல்லதுதான்! ஆனால் அளவுக்கதிகம் உண்டால் சிறுநீரகக்கற்கள் ஏற்படுவதுடன் நீர்த்தாரையில் கிருமிகள் தொற்றி சிறுநீரகத்தைச் செயலிழக்கச் செய்யும்.

வரண்ட பிரதேசத்தில் வாழும் மக்கள் அதிகம் விற்றமின் ஏ உணவு உண்ணுவது அவசியம். விற்றமின் பீ சிறுநீரகம் ஆரோக்கியமாய் இருக்க உதவும். உப்பு அதிகம் உண்ணுவதால் சிறுநீரக செயலிழப்பு அதிகரிக்கும்.

— இளம் ஊதாபூ





ஒ. கே. குணநாதனின் 'ஒரு துளி' நூல்வெளியீட்டு வைபவத்தில் தமிழ்மணி அகளங்கன் தமிழ் எழுத்தாளர் பேரவைத்தலைவர் வீரசிங்கத்திற்கு நூல் வழங்கி வைக்கிறார்.

# மட்டுநகர் நிகழ்வுகள்

## கலையமுதம்

கே. விஜயன்

மனித மேம்பாட்டிற்குக் கலைகள் பெரும் பணியாற்றி வருகின்றன. அவை அருகி விடாமல் அவற்றைத் துளிர் விட வைப்பதற்கு அரும்பணியாற்றியவர்கள் பாராட்டுக்குரியவர்கள், பாராட்டப்பட வேண்டியவர்கள்.

அண்மையில் ஏறாவூர் பிரதேச கலாசாரப் பேரவை நடத்திய முத்தமிழ் விழாவில் மூன்று கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

வந்தாறுமூலை மகாவிஷ்ணு வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவில் மட்டக்களப்பு மாவட்டத்தின் சிறந்த விஷவைத்தியர்களில் ஒருவரான பிள்ளையான் – காத்தமுத்து, நாட்டுக் கூத்து அண்ணாவியார் கந்தப்போடி– நாட்டுக்கூத்துக் கலைஞர் பாலிப்போடி– கமலநாதன் ஆகிய மூவருமே கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

விஷவைத்தியர் பிள்ளையான் காத்தமுத்து வந்தாறுமூலையைச் சேர்ந்தவர் வீரக்குட்டி–வெள்ளையப் போடி என்ற விஷ வைத்தியரைக் குருவாகக் கொண்டு 24 ஆவது வயதில் இருந்து விஷ வைத்தியத்துறையைக் கற்றுக் கொண்டார்.

நாட்டுக் கூத்து அண்ணாவியார் விளாவட்டுவானைச் சேர்ந்தவர் இருபதுக்கு மேற்பட்ட நாட்டுக் கூத்துக்களை அரங்கேற்றிப் புகழ் பெற்றவர். யாசூரன் சண்டை, ராஜசூய யாகம், பதின் மூன்றாம் போர், ஸ்ரீ கிருஷ்ணன் தூது, ஆரவல்லி சூரவல்லி நாடகம் என்பவை குறிப்பிடத்தக்கவை.

கலைக்கமல் என அழைக்கப்படும் கமலநாதன் சந்திவெளியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நாடகம், நாட்டுக் கூத்து, தோற்கருவிகள் இசைத்தல், ஒப்பனை போன்ற துறைகளில் சிறந்து விளங்கினார். சக்தியின் தத்துவம், தெய்வ பக்தி போன்ற நாட்டுக்கூத்துக்களும் இவருடைய புகழ் பெற்ற அரங்கேற்றங்களாகும்.

கலாசாரப் பேரவையின் தலைவரும், பிரதேச செயலாளருமான க.மகேசன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதம விருந்தினர்களாக மேலதிக அரச அதிபர் வே. சண்முகம், வடக்கு–கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ். எதிர்மன்னசிங்கம், சிவத்தொண்ட சுவாமி செல்லத்துரை, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் க.தங்கேஸ்வரி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



கௌரவிக்கப்பட்ட கலைஞர்கள் பின்வரிசையில் காணப்படுகின்றனர். முன்வரிசையில் கௌரவ விருந்தினர்கள்

• • •

கலாசாரப் பேரவையினால் ''நானிலம்'' எனும் மலரும் வெளியிடப்பட்டது.

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி இலக்கிய மன்றம் நாவல் வெளியீட்டு விழாவொன்றினை நடத்தியது.

இந்தியாவில் பரிசு பெற்ற மலையக எழுச்சி நாவலான ''ஒரு துளி'' இவ்விழாவில் வெளியிடப்பட்டது. ஒ. கே. குணநாதன் ''ஒரு துளி'' நாவலின் ஆசிரியராவார்.

மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழா தேசியக் கல்வியியற் கல்லூரி இலக்கிய மன்றத் தலைவர் தா. குணசீலனின் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி கல்லூரி பீடாதிபதி என். நடராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நூலுக்குரிய நயத்தையும், சிறப்புரையையும் தமிழ் மணி அகளங்கன் ஆற்றினார்.

தமிழ் எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கிய கர்த்தாக்கள், இலக்கிய ஆர்வலர்கள் என பெரும்தொகையானோர் இவ்விழாவில் கலந்து சிறப்பித்தனர்.

• • •

மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலக அழகியற் கல்விப் பிரிவினர் நடத்திய இசை, நடன விழா அண்மையில் மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் கோலாகலமாக இடம்பெற்றது.

மட்டக்களப்பு வலய பாடசாலைகளுக்கிடையில் இசை, நடன நிகழ்வுகள் இடம்பெற்றன. பிரதம விருந்தினராக சங்கீத பூஷணம் என். ராஜு கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மட்டக்களப்பு வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் ரஜனி நடராசா தலைமையில் இந்த இசை, நடன விழா இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

— சத்துருக்கன்



சங்கீத பூஷணம் ராஜு மங்கள விளக்கேற்றி வைக்கிறார்.

## பாரதி கலாமன்றத்தின் விவாத அரங்கு

புதுமைப் பித்தனின் நினைவாக பாரதி கலாமன்றம் பட்டிமன்றம் ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளது.

கொழும்பு விவேகானந்தா சபை மண்டபத்தில் 29–04–01 ஞாயிற்றுக்கிழமை பி.பகல் 4.30 மணிக்கு இடம்பெறும்.

விவாத நிகழ்வுக்கு எழுத்தாளர் செ.யோகநாதன் நடுவராகப் பணியாற்றுவார்.

புதுமைப் பித்தனின் ஆண், பெண் பாத்திரங்களில் எவை சிறப்பாக சித்திரிக்கப்பட்டுள்ளன என்பது கருப்பொருளாகும்.

செல்வி சற்சொரூபவதி நாதன், கவிஞர் ஜின்னா ஷெரீபுதீன், இளையதம்பி தயானந்தா, தமிழருவி த.மணி, கவிஞர் ராதா மேத்தா (J.P), செல்வி குயின் மேரி யேசுதாசன் ஆகியோர் விவாதத்தில் கலந்துகொள்வார்கள்.

## 'உருப் பெறும் உணர்வுகள்'

'90களின் பின்னர் யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை மிகவும் கலைத்துவமுடன் சித்திரிப்பதாக சந்திரா தனபாலசிங்கத்தின் சிறுகதைகள் அமைந்திருக்கின்றன' என்று தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவர் சோ. தேவராஜ் தெரிவித்தார்.

திருமதி சந்திரா தனபாலசிங்கம் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பான 'உருப்பெறும் உணர்வுகள்' எனும் நூலின் வெளியீட்டு விழா சமீபத்தில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சிறிய மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு சோ. தேவராஜ் தலைமை வகித்தார். கதைகளில் பெரும்பாலானவை சஞ்சீவி பத்திரிகையில் வெளியானவையாகும். ஏனையவை வீரகேசரி, தினகரன் மற்றும் சிறு சஞ்சிகைகளில் வெளியானவை.

சோ. தேவராஜ் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:–

கதைகள் எளிமையாகச் சொல்லப்படுகின்றன. அதனால் எளிதில் உள்வாங்க முடிகிறது. இந்நூலிலுள்ள அத்தனை கதைகளுமே உள்ளத்தைக் கவர்வனவாக உள்ளன'' என்றார்.

எஸ். வன்னியகுலம் தமதுரையின் போது யாழ்ப்பாணத்து யுத்த நிலைமைகளை விவரித்து அதனால் சாதாரண பொதுமக்களுக்கு ஏற்படும் இன்னல்களைத் தெரியப்படுத்துகின்றன. சந்திராவின் கதைகள், இந்தக் கதைகள் யாழ்ப்பாணத்தில் நிகழும் யதார்த்த சம்பவங்களை ஆரவாரமின்றி கலைத்துவமாக வெளிப்படுத்துகின்றன. இப்படி அவர் கூறினார். எழுத்தாளர் கே. விஜயனும் நூலை ஆய்வு செய்தார்.

''சமூக அவலங்களை கலையழகுடன் வெளிப்படுத்த வேண்டும் என்ற கொள்கையினை வகுத்துக் கொண்டு அதன்படி எழுதுபவர் நான். இந்த யுத்தத்தின் காரணமாக யாழ்ப்பாண மக்கள் படுகின்ற இன்னல்களைக் கதைகள் மூலம் சொல்வதைத் தவிர நாங்கள் என்ன செய்ய முடியும்? இறைவனே இந்த கஷ்டங்களை நீதான் நீக்க வேண்டும் என்பது தான் எமது பிரார்த்தனையாகும்.'' என்று நூலாசிரியை சந்திரா தனபாலசிங்கம் தமது நன்றியுரையில் கூறினார்.


**V.M.S Travels & Tours (Pvt) Ltd.**

* Issuance of Air tickets world wide.
* Excursion Hotel Booking.
* Sight seeing, Excursions/Hotel Booking in Sri Lanka.
* Issuance of Travellers Cheques.
* Assistance given to Obtain Visas.
* Re-confirmations.
* Instant Hotel Booking world wide.

Open 365 days

GALADARI HOTEL
No. 64, Lotus Road, Colombo - 01.
Tel: 447370, 323929, 326157, 432647, 432651
447372, 347624/5
Fax: 9401 437249, E-mail: vms.tr@eureka.lk


## இனவாதத்திற்கு எதிராக இசைக்குயில் எழுந்தது



இசைக்குயில் நந்தா மாலினி

நந்தா மாலினி புகழ் பெற்ற ஒரு சிங்கள மெல்லிசைப் பாடகி. இன ஒற்றுமை சம்பந்தமான பல அரிய சிங்களப் பாடல்களைப் பாடியவர். லண்டன் மாநகரில் இவருடைய இசைக் கச்சேரி ஒன்று கடந்த வருடம் நடைபெற்றது.

பாடகி நந்தா மாலினி வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் கவிதைகளில் அதிக ஈடுபாடுடையவர். எப்பொழுதுமே தமது கச்சேரிகளில் முதற் பாடலாக கவிஞரின் பாடல் ஒன்றை இவர் இசைப்பது வழக்கம்.

வங்கக் கவிஞரின் பாடலுடன் இசை வெள்ளம் மண்டபத்தை நிறைத்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய இந்திய தேசிய வீரர்கள் பற்றிய பாடல் அது.

'உடன் குலியன் பெந்த பந்தின்ன' இப்படி ஆரம்பமாகும் பாடல் 'ரணவிருவன்' என்ற சிங்களப் படமாகவும் கருத்துத் தொனிக்க அமைந்துள்ளது.

இசை மண்டபத்தில் இலங்கையின் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே அதிகமாகவிருந்தார்கள். இவர்களில் இலங்கை 'சிஹல உறுமய' இயக்கத்தைச் சேர்ந்த சிரேஷ்ட பிரமுகர்களில் ஒருவரும் இருந்தார். பாடலைக் கேட்டு அனைவரும் உணர்ச்சிவசப்பட்டு கரகோஷம் செய்த அதேவேளை 'சிஹல உறுமய' பிரமுகரும் உணர்ச்சிவசப்பட்டுவிட்டார். அதனால் எழும்பி நின்று கைதட்டி ஓர் அரசியல் இலாபமும் பெற்றுக்கொள்ள முனைந்தார். இனவாத அரசியல்வாதியாயிற்றே. அதிலும் இயக்கப் பிரசாரத்துக்கும் நன்கொடை சேகரிப்புக்குமாகவே லண்டன் பறந்தவர் சந்தர்ப்பத்தைக் கைநழுவ விடுவாரா?

உடனே ஒரு கையெழுத்து வேட்டை ஆரம்பமானது. மளமளவென கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டன. அதில் 'மே சிஹல ரட்ட அபகே ரட்டய்' அதாவது இந்த சிங்கள நாடு நம்முடையது என்ற பாடலைப் பாடும்படி கோரிக்கை விடுக்கப்பட்டது.




சிங்கள இசைக் குயிலான நந்தா மாலினி சிறந்த பாடகி மட்டும் அல்லர். இனவாத உணர்வுகளைக் கடந்தவர். சகல இன மக்களும் இந்நாட்டின் உரித்தாளர்களே எனப் பொருள்படும் பல பாடல்களைப் பாடி சமாதானப்பிரியர்களின் நெஞ்சை வென்றவர் மட்டுமல்லாது இனவாதிகளின் வெறுப்பினைப் பெற்றுக்கொண்டவர். இவை அனைத்தையும் சிஹலஉறுமயப் பிரமுகர் அறிவார். அதன் காரணமாகவே கையெழுத்து வேட்டையுடன் காரியத்தில் இறங்கினார்.

நந்தாவின் இசையில் லயித்துவிட்டாலும் அவருடைய கருத்துக்களுடன் ஒத்துப்போகாதவர்கள் இந்தப் பேரினவாதிகள். இந்தப் பாடலைப் பாடச் சொல்லி அவர் முகத்தில் கரியைப் பூசுவதே அவரின் திட்டமாகும்.

கோரிக்கைத் துண்டு அனுப்பப்பட்டது. அதனை எடுத்து ஒரு பார்வை பார்த்தார் நந்தா. கச்சேரி தொடர்ந்தது. ஆனால் அந்தப் பாட்டு பாடப்படவில்லை.

கச்சேரி முடிந்ததும் நந்தா மாலினி எழுந்து நின்றார்.

இலங்கை அன்னை கண்ணீரையும் இரத்தத்தையும் சொரிந்துகொண்டிருக்கிறாள். யுத்தம்தான் அதற்குக் காரணம். இனங்களைப் பிரிக்கும் சில அரசியல்வாதிகளின் சுயநலமே இதற்கு மூலவேர். இலங்கை இங்கு வாழும் சகல இன மக்களுக்கும் உரித்தானதாகும். நான் இவ்வளவு தூரம் வந்தது சில அரசியல்வாதிகளின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்கு அல்ல. அங்கே ஓடுகின்ற இரத்த ஆற்றை இல்லாதொழிப்பதற்கும் கண்ணீரைத் துடைப்பதற்குமே என்று கூறினார்.

கணீரென ஒலித்த அவருடைய குரலால் மண்டபம் சில நிமிடம் மௌனத்தில் ஆழ்ந்தது. பிறகு திடீரென பேரினவாதிகளின் மத்தியில் சலசலப்புக் காணப்பட்டது.

நந்தா கலங்கவில்லை. தனது பேச்சை மதிப்புடன் ஆழ்ந்து கவனித்த ஒரு சிலரை நோக்கிக் கைகூப்பி வணங்கினார்.

# காதல் தம்பதிகளே நீங்கள் எந்த வகை?



''ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பிச் செய்து கொள்ளும் காதல் திருமணமே மிகவும் சிறந்தது'' என்பது பலரது ஏகோபித்த கருத்தாகும்.

கலாசாரம், கட்டுப்பாடுகள் நிறைந்த கீழைநாடுகளில் கூட காதல் திருமணங்கள் நடைபெறாமலில்லை.

ஆனால் மேலை நாடுகளில் 99 சத வீதமானவை காதல் திருமணங்கள். இவற்றில் கணவன் மனைவிக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகள் காரணமாக பெரும்பாலான திருமணங்கள் விவாகரத்தில் முடிவடைகின்றன.

இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டே பெரியவர்கள் ''ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்'' என்று கூறிச்சென்றனர் போலும். அனேகமான காதல் திருமணங்கள், மோகம் தீர்ந்தவுடன் தோல்வியடைந்த வரலாறுகளையே எமக்குக் கற்றுத் தருகின்றன. இதனாலேயே பார்த்துப் பேசிச் செய்கின்ற திருமணமே சிறந்தது என ஒரு சாரார் வாதிடுகின்றனர்.

இல்லற பந்தத்தில் புதிதாக இணைந்தபின்பு மனைவியின் விருப்பு வெறுப்புக்களைக் கணவனும் கணவனின் விருப்பு வெறுப்புக்களை மனைவியும் புரிந்து அதனை அனுசரித்து வாழும் போது வாழ்க்கை இனிக்குமாம்!

இவர்கள் கூறுவதுபோல் திருமணத்தின் பின் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முற்படும் போது இருவருக்குமே துளிகூட புரிந்துணர்வு ஏற்படாவிட்டால் வாழ்க்கை பெரும் போராட்டமாகி விடும் என்பதை பெரியவர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், மாறாக பெண்களை அனுசரித்துப்போ என்றுதான் சொல்வார்கள்.

பெரியவர்கள் பேசிச் செய்து வைத்த திருமணங்கள் தான் சில சமயங்களில் இப்படி ஆகின்றன என்றால் காதலித்துச் செய்து கொள்ளும் திருமணங்கள் கூட சில சமயங்களில் தோல்வியடைந்து விடுகின்றன. அதிலும் குறிப்பாகக் கண்டதும் காதலாகி மணம் முடிப்பவர்களது வாழ்க்கை தான் அதிகமாகத் தோல்வி அடைந்து போகின்றது.

ஆரம்பத்தில் ''எம்மைப் போன்று சந்தோஷமான தம்பதியர் உலகத்தில் இருக்கிறார்களா?'' என்று மற்றவர்கள் எண்ணுமளவிற்கு இருப்பார்கள். ஆனால் கால ஓட்டத்தில் இவர்களுக்கிடையே சின்னச் சின்ன விஷயங்களுக்குக் கூடச் சண்டைகள் ஏற்படும். தேவையே இல்லாமல் அடுத்தவர்களின் கதைகளைக் கேட்டு ஒருவர் மீது ஒருவர் சந்தேகப்பட ஆரம்பித்து விடுவார்கள். இதற்குக் காரணம் இருவரது உள்ளங்களிலும் அன்பு இல்லாமை தான். அன்பு இல்லாத நிலையில் செய்யப்படும் திருமணங்கள் தோல்வி அடைந்து விடுகின்றன.

ஏனெனில் அன்புதான் பாலமாக இருந்து இருவர் உள்ளங்களையும் இணைத்து வைக்கின்றது.

பல மாதங்களாகவோ, பலவருடங்களாகவோ நட்புடன் பழகிக் கொண்டிருக்கும் ஒருவரின் குணத்தையும், திறமையையும், பொறுப்பையும், அமைதியான சுபாவத்தையும் கண்டு ஏற்படும் காதல் பெரும்பாலும் தோல்வியடையாது.

ஏனெனில் அங்கு ஒருவரை ஒருவர் நன்றாக, ஆழமாகப் புரிந்து கொண்டு அன்பு செலுத்தி இல்லறத்தை இனிதாக நடத்திச் செல்லுகின்றனர். இதனால் தான் திருமணமாகி பலவருடங்கள் கழிந்தாலும் புதிதாய் திருமணமான தம்பதியர்போல் அவர்கள் வாழ்கின்றனர்.

இதில் நீங்கள் எந்த வகை காதல் தம்பதியர் என்று புரிந்து கொண்டு விட்டால் வாழ்க்கை என்றும் இனிமைதான்.




# உங்கள் குழந்தை படுக்கையில் சிறுநீர் கழிக்கிறதா....?

பல குழந்தைகள் படுக்கையில் சிறுநீர் கழிக்கும் பழக்கம் உடையவர்களாக இருக்கிறார்கள். ஐந்து வயதுவரை பிள்ளைகள் படுக்கையில் சிறுநீர் கழிப்பது சாதாரண விஷயம்.



ஆனால் இந்த நிலை மேலும் தொடர்ந்தால் பெற்றோர் கவனிக்க வேண்டியது அவசியமாகும். ஒழுங்காக இருந்த குழந்தை திடீரென சில நாட்களாகப் படுக்கையில் சிறுநீர் கழித்தால் வைத்தியரிடம் காட்டி ஆலோசனை பெற வேண்டியது அவசியமாகும். குழந்தைகள் திடீரென படுக்கையில் சிறுநீர் கழிப்பது சில சமயங்களில் நீரிழிவு நோயின் அறிகுறியாகவோ, சிறுநீரில் கிருமிகள் இருப்பதையோ, அல்லது மன உளைச்சல் காரணமாகவோ இருக்கலாம்.

சாதாரணமாக சிறுநீர்ப்பை நிரம்பியவுடன் அந்தச் செய்தி முதுகுத்தண்டு வழியாக மூளையைச் சென்றடைகின்றது. அதன்பின்னர் சிறுநீர் கழிப்பதற்கான உத்தரவு ''செரிபரல் கார்டெக்சி''லிருந்து கிடைக்கிறது. சில சமயங்களில் அசந்து தூங்கும் போது இச் செய்தி மூளையைச் சென்றடைவதில் தடுமாற்றம், தாமதம் ஏற்பட்டு ''செரிபரல் கார்டெக்ஸ்'' உத்தரவு கொடுப்பதற்குப் பதிலாக தண்டு வடமே உத்தரவளித்து விடுவதால் படுக்கையில் சிறுநீர் கழிந்து விடுகின்றது.

பிள்ளைகள் படுக்கையில் சிறுநீர் கழிப்பதைத் தவிர்க்க சில ஆலோசனைகள்:—

* நினமும் இரவு படுக்கப் போக முன் குழந்தைகளை சிறுநீர் கழிக்கப் பழக்குங்கள்.
* மாலை ஆறுமணிக்குப் பின்பு அதிகமான திரவ உணவு வகைகளையும், தண்ணீர் கொடுப்பதையும் தவிர்த்து விடுங்கள்.
* உளரீதியான காரணங்களால் குழந்தை பாதிக்கப்பட்டால், அத்தகைய மனநிலை ஏற்படுவதைத் தவிர்க்க முயலுங்கள்.
* பகலில் சிறுநீர் கழிப்பதைத் தள்ளிப் போட்டுப் பழக்குவதன் மூலம் சிறுநீர்ப்பையின் கொள்ளளவை அதிகரிக்கச் செய்யுங்கள்.

# பரீட்சைக் கால 'டயட்'

நீங்கள் பரீட்சைக்குத் தயாராகுபவரானால் பின்வரும் ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள்.

* உணவில் கீரைவகைகளையும், காய்கறிகளையும், பழங்களையும் அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள்.
* எண்ணெய் அதிகம் சேர்த்த உணவுகளையும், அசைவ உணவுகளையும் தவிர்த்து, சைவ உணவுகளை உட்கொள்ளுங்கள்.
* எளிதில் சமிபாடடையக் கூடிய உணவுகளை உட்கொள்ளுங்கள்.
* அதிகமாகச் சாப்பிடாதீர்கள் நித்திரை வந்து விடும். குறைவாகச் சாப்பிடுங்கள்.
* பால் குடியுங்கள்.
* இரவில் நீண்ட நேரம் கண் விழிப்பதால் உடல் சூடாகி விடும். எனவே உடலை குளிர்ச்சியடையச் செய்ய நிறையத் தண்ணீர் குடியுங்கள். அத்துடன் இளநீர், மோர் என்பவற்றையும் பருகுங்கள்.
* காலையில் குளிர்ந்த நீரில் நன்றாகக் குளியுங்கள்.
* குறைந்தது ஐந்து மணிநேரம் ஆழ்ந்து உறங்குவது அவசியம்.

**பரீட்சைக் காலங்களுக்கான மாதிரி உணவு அட்டவணை...**

* காலை 6.00—6.30 மணிக்கு பாலில் உங்களுக்கு விருப்பமான மைலோ அல்லது புரொட்டினெக்ஸ் கலந்து குடியுங்கள்.
* காலை 8.30 மணிக்கு பாண்— ஜாம், நூடில்ஸ், இட்லி—சாம்பார் இவற்றில் உங்களுக்கு விரும்பிய உணவுடன் ஏதாவது ஒரு பழம்.
* காலை 11.00 மணிக்கு கொறிப் பதற்கு எண்ணெயில் வறுத்த உணவுப் பண்டங்களைத் தவிர்த்து பொப்கோன், முளைவிட்ட பயறு இவற்றுடன் ஒரு கிளாஸ் சூப், வெயில் காலமாக இருந்தால் ஒரு கிளாஸ் பழரசம்.
* மதியம் 1.00 மணிக்கு மதிய உணவு சைவ உணவு உண்பவர்கள் சோற்றுடன் பருப்பு, கீரை, கரட், பீற்றூட் ஆகியவற்றைக் கட்டாயமாகச் சேர்க்க வேண்டும். அத்துடன் தயிரையும் சேர்க்க வேண்டும்.
  அசைவ உணவு உண்பவர்கள், எண்ணெய் சேர்க்காமல் முட்டை, மீன், கோழி இறைச்சி ஆகியவற்றை உண்ணலாம்.
* மாலை 4.00 மணிக்கு மைலோ அல்லது புரொட்டினெக்ஸ் கலந்த பாலுடன் பிஸ்கட், சான்விட்ச், எண்ணெயில் வறுக்காத சிப்ஸ் ஏதாவது சாப்பிடலாம்.
* இரவு 8.00 மணிக்கு கனமில்லாத எளிதில் சமிபாடடையக் கூடிய உணவாக இரவு உணவை உண்ண வேண்டும்.
* படுக்கப் போக முன் ஒரு கிளாஸ் வெதுவெதுப்பான பாலுடன் ஒரு பழம்.

இனி என்ன பரீட்சையில் உங்களுக்கு வெற்றிதான்.



# சித்தியின் சிந்தனைக்கு

'சித்தி' என்றாலே ''கொடுமைக்காரி'' என்று பலர் நினைக்கிறார்கள். இந்த எண்ணத்தை மாற்றுவது எப்படி? என்று எவரும் எண்ணிப் பார்ப்பது இல்லை.

கீழே தரப்பட்டுள்ள ஆலோசனைகளைப் பின்பற்றிப் பாருங்கள்.

இவள் எனது அம்மா அல்ல என்ற எண்ணம் பிள்ளைக்கோ, இது நான் பெற்ற பிள்ளை அல்ல என்ற எண்ணம் சித்திக்கோ ஏற்படாது.

* எல்லோருடனும் மனம் விட்டுப் பேசுங்கள்.
  எந்த ஒரு விடயத்தையும் கலந்தாலோசிக்கும் போது மன அழுத்தம் குறையும். புரிந்துணர்வு அதிகரிக்கும்.
* தீர்மானம் எடுப்பதில் அவசரப் படாதீர்கள். ஒரு சம்பவம் நடந்தஉடன் கோபப்பட்டுப் பிள்ளையைத் தண்டிக்காதீர்கள். பிள்ளையின் மன நிலையைப் புரிந்து கொள்ள முயற்சி எடுங்கள்.
* விட்டுக் கொடுங்கள்
  பெரியவர்களும், பிள்ளைகளும் விட்டுக் கொடுத்து ஒருவரை ஒருவர் அனுசரித்து செயற்படுதல் அவசியம்.
* சந்தோஷமாக இருங்கள்
  சுவாரஸ்யமான விடயங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். விளையாட்டுகளில் ஈடுபடுங்கள். சிரிப்பையும் சந்தோஷத்தையும் விட்டுக் கொடுக்காதீர்கள்.
  முக்கியமாக நீங்கள் அந்நியர் என்ற எண்ணத்தை வளர விடாதீர்கள்.



# ஜடேஜாவுக்குத் திருமணம்

இந்திய கிரிக்கெட் வீரர் அஜய் ஜடேஜா அண்மையில் திருமணம் செய்துகொண்டார்.

ஜடேஜாவும் மணமகள் அதிதியும் ஒன்றாகப் படித்தவர்கள். சிறுவயதிலேயே இவர்களின் திருமணம் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்டதாம். அதனால் காதலுக்கு தடையேதும் வரவில்லை.

இந்திய கிரிக்கெட் வட்டாரத்தில் கவர்ச்சியான ஒரு வீரர் ஜடேஜா. ஏற்கனவே பல சினிமா நடிகைகள் பலருடன் கிசுகிசுக்கப்பட்டவர்.

ஆட்ட நிர்ணய மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் ஜடேஜாவுக்கு 5வருடகாலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார் ஜடேஜா.

மேற்படி ஆட்ட நிர்ணய சதியை அம்பலப்படுத்துவதில் தெஹல்கா என்ற இணையத்தளமும் முக்கிய பங்காற்றியது.

அண்மையில் இதே இணையத்தளமே ஆயுதக் கொள்வனவில் லஞ்ச ஊழல் ஏற்பட இடமுண்டு என்பதை வீடியோ படம் பிடித்து காட்டியது. இதில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் திருமதி ஜெயா ஜெட்லி.

இந்த ஜெட்லியின் மகள்தான் ஜடேஜாவின் மனைவி அதிதி என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



ஜடேஜா - அதிதி

# ஊக்கமருந்து காரணமாக கிரிக்கெட் வீரருக்குத் தடை

அவுஸ்திரேலியாவின் கிரிக்கெட் வீரரான டங்கன் ஸ்பென்ஸர் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்தை உட்கொண்டமைக்காக 18 மாதத் தடைக்குள்ளாகியுள்ளார்.

இங்கிலாந்தில் பிறந்த ஸ்பென்ஸர் ஐந்து வயதில் அவுஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்தவர். தற்போது 29 வயதாகிறது. மேற்கு அவுஸ்திரேலிய அணி சார்பிலும் இங்கிலாந்தின் கென்ட் அணி சார்பிலும் முதல் தரப்போட்டிகளில் பங்குபற்றியவர்.

1994 இல் முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக போட்டிகளில் பங்குபற்ற முடியாதிருந்தார். இக்காயத்திலிருந்து குணமடைவதற்காக அவர் நன்ட்ரோலின் எனும் ஊக்க மருந்தைப் பாவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரியில் நடந்த சுற்றுப் போட்டியொன்றில் அவர் மீண்டும் மேற்கு அவுஸ்திரேலிய அணி சார்பில் பங்குபற்றினார். அதையடுத்து அவருக்கு ஊக்க மருந்துப் பரிசோதனை நடத்தப்பட்டது.

அதில் அவர் ஊக்கமருந்து பாவித்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. நீண்ட விசாரணையின்போது தான் நன்ட்ரோலின் எனும் ஊக்கமருந்தைப் பாவித்ததை ஸ்பென்ஸர் ஒப்புக் கொண்டார். இதையடுத்து அவருக்கு 18 மாதத் தடை விதிக்கப்பட்டது.

ஊக்கமருந்து பாவித்ததாகக் கண்டு பிடிக்கப்பட்ட முதலாவது ஆஸி கிரிக்கெட் வீரர் இவரே.

"தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்துகளைப் பயன்படுத்துவதில் குற்றவாளியாகக் காணப்படும் கிரிக்கெட் வீரர்களை ஆஸி கிரிக்கெட் சபை சகித்துக் கொண்டிருக்காது என்பதற்கு இத் தீர்ப்பு ஒரு தெளிவான உதாரணம்" என அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி மல்கம் ஸ்பீட் தெரிவித்துள்ளார்.

உடல் தசைகளை வலிமையாக்கி சக்தியை அதிகரிப்பதற்காக நன்ட்ரோலின் பாவிக்கப்படுகிறது. அத்துடன் காயங்களிலிருந்து விரைவாக நிவாரணம் பெறுவதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இது விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுவர்களுக்குச் சர்வதேச ரீதியாக தடுக்கப்பட்ட பொருளாகும்.

## விளையாட்டுச் செய்திகள்!


-ஆர். சேதுராமன்

# கிரிக்கெட் சபையின் பெயரில் போலி ஃபெக்ஸ் செய்தி

கடந்த 17ஆம் திகதி செய்தி ஊடகங்களுக்கு அனுப்பப்பட்ட ஒரு போலி ஃபெக்ஸ் செய்தி கிரிக்கெட் சபையை அதிர்ச்சிடையச் செய்தது.

"சார்ஜாவில் நடைபெறும் கிரிகெட் போட்டிகளைப் பார்வையிடுவதற்காகச் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி அனுர தென்னகோன் சார்ஜாவுக்குச் சென்றுள்ளார். அவருக்குப் பதிலாக திருமதி தமயந்தி ராஜபக்ஷ (சபையின் நிதிப் பணிப்பாளர்) பதில் நிறைவேற்று அதிகாரியாகப் பணியாற்றவுள்ளார்.

அத்துடன் கிரிக்கெட் சபையின் இடைக்கால நிர்வாகக் குழு உறுப்பினர்களான மைக்கல் திசேரா, சிதத் வெத்தமுனி, அசந்த டி மெல் ஆகியோரும் தமது துணைவியருடன் சபைப் பிரதிநிதிகளாக சார்ஜாவுக்குச் செல்லவுள்ளனர்.


Board of Control for Cricket in Sri Lanka

MEDIA UNIT

Date 17th April 2001

To: ALL PRINT AND ELECTRONIC MEDIA

Since Mr. Anura Tennekoon, Chief Executive is away from the country attending the CBFS Tournament in Sharjah, Mrs. Damayanthi Rajapakse has been appointed acting Chief Executive until his return to the country.

It was decided at the last meeting of the Interim Committee of the BCCSL that the following would represent BCCSL at the tournament in Sharjah.

Mr & Mrs Michael Tissera
Mr & Mrs Siddath Wettimuny
Mr & Mrs Ashantha de Mel
Mr & Mrs Anura Tennekoon – Chief Executive

It was also decided to make only a payment of USD 200 per day to the above [illegible] all other expenses would be met by the CBFS – Sharjah.

BCCSL MEDIA

போலி ஃபெக்ஸ் செய்தி

இவர்களின் செலவுக்காக நாளொன்றுக்கு 200 அமெரிக்க டொலர்கள் கிரிக்கெட் சபையினால் வழங்கப்படும்.

இடைக்கால நிர்வாகக் குழுவின் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது" என அச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஊடகப் பிரிவின் கடிதத் தலைப்பிலேயே இச் செய்தி அனுப்பப்பட்டதுடன் ஊடகப் பிரிவின் ஃபெக்ஸ் இலக்கத்தையும் கொண்டிருந்தது.

நிருபர் ஒருவர் இது பற்றி மேலதிக விவரங்களை அறிவதற்காகச் சபையுடன் தொடர்புகொண்டார். சபை அதிகாரிகளுக்கு அதிர்ச்சி! அப்படியொரு செய்திக் குறிப்பைத் தாம் ஊடகங்களுக்கு அனுப்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் மேற்படி ஃபெக்ஸ் செய்தி தொடர்பாக மறுப்பு அறிக்கையொன்றை விடுத்தது சபையின் ஊடகப் பிரிவு.

"கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஊடகப் பிரிவினால் அது அனுப்பப்படவில்லை. சபைக்கும் அதன் ஊடகப் பிரிவுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கமுடையோரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையே இது" என கிரிக்கெட் சபை விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மார்ச் 28 ஆம் திகதி முதல் விஜய மலலசேகர தலைமையிலான இடைக்கால நிர்வாக சபையொன்றினால் நிர்வகிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

# பெயர் மாற்றிய டென்னிஸ் வீராங்கனை

டென்னிஸ் உலகில் மிகவும் பிரபலமான ஒரு பெயர் ஸ்டெஃபி கிராஃப்.


ஜேர்மன் வீராங்கனையான ஸ்டெஃபி 22 கிரான்ட்ஸ்லாம் போட்டிகளில் சாம்பியனானவர். தரப்படுத்தலில் தொடர்ந்து 378 வாரங்கள் முதலிடத்தில் இருந்து சாதனை படைத்தவர். பிரபல அமெரிக்க டென்னிஸ் வீரர் அன்ரே அகாஸியை வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக்கொண்டதுடன் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்றார்.

தற்போது அவர் தனது பெயரை ஸ்டெஃபானி கிராஃப் என மாற்றிக் கொண்டுள்ளார். 'ஸ்டெஃபானி கிராஃப் மார்க்கெட்டிங்' எனும் வர்த்தக நிறுவனத்தை அண்மையில் ஆரம்பித்தார் அவர். பெண்களுக்கான கைப்பைகளை வடிவமைத்து விநியோகிக்கும் நிறுவனம் இது. இதைத் தொடர்ந்தே அவரது பெயர் மாற்றமும் இடம் பெற்றுள்ளது.

தமது வர்த்தக நடவடிக்கைக்கு வசதியாகவே தமது பெயரை இவ்விதம் மாற்றியுள்ளதாகக் கூறுகிறார் ஸ்டெஃபி.

கடிகாரங்கள், நகைகள், குளிர் கண்ணாடிகள் போன்றவற்றையும் எதிர்காலத்தில் இந் நிறுவனம் விற்பனை செய்யுமாம்.

இதேவேளை பங்குச் சந்தையில் ஆறு லட்சம் டொலர்களை இழந்ததாகக் கூறுகிறார் ஸ்டெஃபி. நிதி ஆலோசகர் ஒருவரின் உதவியுடன் 1996 இல் நியூயோர்க் பங்குச் சந்தையில் பணத்தை முதலீடு செய்தாராம். பெருமளவு லாபம் பெறலாம் என்று அவருக்குக் கூறப்பட்டதாம். ஆரம்பத்தில் பங்குகளின் பெறுமதி அதிகரித்துச் சென்றாலும் சில வாரங்களில் அது



ஸ்டெஃபானி கிராஃப்

மாற்றமடையத் தொடங்கியது. எனவே பங்குகளை விற்பனை செய்வதற்காக ஆலோசகரைத் தேடினேன். அப்போது அவரது அலுவலகம் மூடப்பட்டிருப்பதாக அறிந்து கொண்டேன் என்கிறார் ஸ்டெஃபானி கிராஃப்.

# உள்ளக அரங்கு கிரிக்கெட்; இந்தியாவுக்கு அழைப்பு

உள்ளக அரங்கில் நடைபெறும் ஒருநாள் சுற்றுப்போட்டியில் பங்குபற்ற வருமாறு இந்தியாவுக்கு அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்துள்ளது.

செப்டெம்பர் மாதம் 10,12,14ஆம் திகதிகளில் இப்போட்டிகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மெல்பேர்னிலுள்ள டொக்லான்ட்ஸ் உள்ளக அரங்கில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

கடந்த வருடம் செப்டெம்பரில் அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் மூன்று ஒருநாள் போட்டிகள் இவ்வரங்கில் நடைபெற்றன. உள்ளக அரங்கொன்றில் நடைபெற்ற முதலாவது சர்வதேச கிரிக்கெட் சுற்றுப்போட்டி இதுவாகும். அதன் பின் இரண்டாவது தொடராக இந்திய, ஆஸி அணிகளுக்கிடையிலான போட்டி நடைபெறவுள்ளது.

அவுஸ்திரேலியாவின் இவ்வழைப்பு தொடர்பாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பரிசீலித்து வருகிறது.

மே மாதம் ஆரம்பமாவுள்ள ஸிம்பாப்வே சுற்றுலாவையடுத்துத் தொடர்ச்சியாகப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது இந்திய அணி. எனினும் அவுஸ்திரேலியாவின் அழைப்புக்குச் சாதகமான பதில் அளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்திய கிரிக்கெட் வீரர்கள் அவுஸ்ரேலியாவில் மாயம்

அவுஸ்திரேலியாவுக்குப் பயிற்சி பெறச் சென்ற இந்திய கனிஷ்ட கிரிக்கெட் வீரர்கள் ஐவர் காணமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அடிலெய்டிலுள்ள கிரிக்கெட் பயிற்சி நிலையமொன்றில் இருவார காலப் பயிற்சிக்காக இவர்கள் அனுப்பப்பட்டிருந்தனர்.

முன்னாள் டெஸ்ட் வீரரான வேய்ன் பிலிப் இவர்களை அழைத்துச் செல்வதற்காக விமான நிலையத்தில் காத்திருந்தார். ஆனால் இவ்வீரர்களைத் தாம் காணவில்லை என்று பிலிப்ஸ் கூறியுள்ளார். கடந்த மார்ச் 25ஆம் திகதி இச்சம்பவம் இடபெற்றுள்ளது.

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தின் கிரிக்கெட் சங்கத்துடன் இணைந்த 'காராவெலி கிரிக்கெட் கிளினிக்'கினால் மேற்படி ஐந்து இளம் வீரர்களும் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

"இவ் அவுஸ்திரேலியப் பயிற்சி நிலையத்தில் ஏற்கனவே இலங்கை, இங்கிலாந்து, நியூஸிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து வந்த கனிஷ்ட வீரர்கள் பயிற்சி பெற்றுச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் இத்தகையதொரு சம்பவம் ஏற்பட்டதையிட்டு ஏமாற்றமடைந்துள்ளோம். எனினும் இவ்விவகாரம் சுமுகமான முடிவுக்கு வருமென எதிர்பார்க்கிறோம். இவ்விவகாரத்தால் இந்தியாவுடன் எமக்குள்ள உறவு பாதிக்கப்படாது என நம்புகிறோம்" எனவும் வேய்ன் பிலிப்ஸ் கூறியுள்ளார்.

# கல்வி, கணினி தொழில்நுட்பக் கற்கைநெறி சிறப்பிதழ்

## வெளிநாட்டுக் கல்விக்கு உதவும் எம்.எஸ். லங்கா

உயர்கல்விக்காக பிரிட்டன், அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்குச் செல்லும் நாட்டம் மாணவர்கள் மத்தியில் இன்று அதிகரித்துக் காணப்படுகின்றது. இன்றுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பெரும்பான்மையான மாணவர்கள் தங்களின் பொருளாதார நிலைமையை உயர்த்திக் கொள்வதற்காகவும் தமக்குக் கிடைத்தற்கரிய உயர் கல்வி வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்காகவும் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்கின்றனர்.



இன்றுள்ள நிலையில் மாணவர்கள் தங்களின் பயண விசாவைப் பெறுவதில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதில் பிரதான மானது மாணவர்களின் ஆங்கில அறிவுக் குறைபாடு ஆகும்.

இந்த வகையில் இந்நிறுவனம் மாணவர்களின் நலன் கருதி இலவசமாக TOEFL எனும் ஆங்கில பாட நெறியைக் கற்பித்து வருகிறது.

ஆகஸ்ட் மாத கற்கை நெறிக்காக லண்டன், அமெரிக்கா செல்லவுள்ள முதல் 20 மாணவர்களுக்கு TOEFL கற்கை நெறி இலவசமாகக் கற்பிக்கப்படும். இச் சந்தர்ப்பத்தை இந்நிறுவனத்தின் உரிமையாளரான ஏ.எச்.எம். மன்சூர் மாணவர்களுக்கு வழங்குகிறார்.

வெளிநாட்டு பயணத்துக்கான டிக்கெட் பெறுதல், வெளிநாட்டுப் நாணயமாற்றுக்கள், பயணக்காசோலை, உலகளாவிய ரீதியில் தங்குமிட வசதிகள் போன்ற ஏற்பாடுகளையும் இந்நிறுவனம் கவனித்து வருகிறது.

மேலதிக விவரங்களைப் பெற நேரில் அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு:
Mr. M.F. Riyas Mohamed (முகாமையாளர்)
074–517836/ 074–518928
mobile:077–672084
Ms Lanka Recruitment & Travels
379 2/2, Galle Road, Wellawatte.

## கணினித் துறையில் முன்னணியில் பயோஸ்

கணினிகள் வாழ்வின் இன்றியமையாதவையாக ஆகிவிட்டன. பல்தேசிய நிறுவனங்கள் கணினிகளில் முழுமையாக தங்கியிருக்கின்றன. தேசியக் கம்பனிகளும் சிறு நிறுவனங்களும் கிரமமான முறையில் கணினிகளை தம்முடன் இணைத்துக் கொள்கின்றன. இதனால் தொழில் வாய்ப்பைத் தேடுபவர்களுக்கும், தொழில்களில் இருப்பவர்களுக்கும்கூட கணினிக் கல்வியே 'கண்' என்றாகி விடுகிறது.

பயோஸ் BIOS நிறுவனம் கணனிக் கல்வியூட்டும் ஒரு முன்னணி நிறுவனம். புதியவர்களுக்கும், மேலதிக அறிவைப் பெறவிரும்புபவர்களுக்கும் அதிபிந்திய கணினித் தொழில் நுட்பத்தையும், கற்றலுக் கேற்ற சூழலையும் இது தருகிறது.

மாணவர்களுக்கு இணைய வலையமைப்பில் நடைமுறைப்பயிற்சி, இலவச கருத்தரங்குகள், குளிரூட்டப்பட்ட அறைகள், தவணை முறையில் கட்டணங் களைச் செலுத்தும் வாய்ப்பு, 100 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள், சிறுவர்களுக்கும், பாடசாலையை விட்டு வெளியேறும் இளவயதினருக்கும் ஏற்ற பாடநெறிகள், மற்றும் பாடநெறிகளின் முடிவில் அத்தாட்சிப் பத்திரம் வழங்கல் ஆகியவை சிறப்பு அம்சங்கள் ஆகும்.

M.S. office, Photo shop, Corel Draw, Auto Cad and Lotus, Software Engineering, Hardware Engineering, Java, Visual Basic, Windows NT, e-commerce a+, Network +, MCP, MCSD, OCP என்பனவும் கற்பிக்கப்படுகின்றன.

மாளிகாவத்தையில் ராஜபொக்குண மாவத்தையில் பிரதீபா மண்டபத்திற்கு எதிராக BIOS Computer Systems நிறுவனம் அமைந்துள்ளது.

ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரையும் நடைபெறும் இலவச கருத்தரங்கில் அங்கு பயிலும் மாணவர்கள் மட்டுமன்றி கணினியைப் பற்றி அறிய விரும்பும் எவரும் பங்குபற்ற முடியும்.

சிறுவர்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் தொடக்கம் சர்வதேசத் தரத்திலான பாடநெறிகளும், தகவல் தொழில் நுட்ப நிகழ்ச்சித் திட்டங்களும் உள்ளடக்கப்பட்ட, முழுமையான கணினிக் கல்விக்கு BIOS நிறுவனம் உகந்த இடமாகவுள்ளது.

ஒரே மாதத்தில் கணினி வன் பொருள் பாடநெறியொன்றையும், ஞாயிற்றுக் கிழமை தோறும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை செயல்முறை வகுப்புக்களையும் BIOS நிறுவனம் நடத்துகிறது. அத்துடன் ஒவ்வொரு ஞாயிறு தினத்திலும் காலை 10.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை Visual basic அறிமுக வகுப்புகளும் இலவசமாக நடத்தப்படுகின்றன. விவரங்களுக்கு மாளிகாவத்தை அலுவலகத்துடன் நேரடியாகவும் 543663 இலக்க தொலைபேசி மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்.


STUDY ABROAD
LONDON, RUSSIA, U.S.A, NEWZELAND
அடிப்படைக் கல்வித் தகைமைகள்:
LONDON - G.C.E. O/L
U.S.A. - G.C.E. A/L
RUSSIA - G.C.E. A/L
NEWZELAND - G.C.E. A/L
CYPRUS - G.C.E. O/L



Down Payments
London = 250£, 300£, 500£
USA = 1000$

AUGUST 2001 பதிவுகளை மேற்கொள்ளும் முதல் 20 மாணவர்களுக்கு (TOEFL) (3 மாத காலப் பாடநெறி) இலவசமாக வழங்கப்படும் (Completely Free)

May, June, August 2001 க்கான பதிவுகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படும்.

* Free Counseling
* part time Jobs Guaranteed
* Reasonable Accomodation Rate

M.S. LANKA
Recruitment & Travels
379-2/2, (2nd Floor) Galle Road, Wellawatta, Colombo - 06.
(Opposite to Delmon Hospital)
Tel: 074-517836, 074-518928 Mobile: 077-374314, 077-672084
Fax: 074-518928 E-mail: mslanka@visual.lk



Why is "BIOS" a special place to Learn Computers ?
We are giving individual classes for every course for NO additional charges.
Student can enroll for a course on any day of the week.
The widest range of courses with unlimited practical hours.
Most experienced Lecturers



BIOS - Dedicated to provide the latest Computer Training at an affordable price.
Expand your demand across the world & earn in thousands of dollars.
Learn the science that gives you a world recognition.
Welcome to the most ideal place to get your training in the right field.
Comprehensive training at an unbelievable price:
JAVA
ORACLE
E COMMERCE
WEB DEVELOPING
VB/ VISUAL C++
A+ Certification Course
100 Scholarships to study DCA
Diploma in Computer Applications
Duration: 4 months
Course Fee: 7000/=
Register now for the Placement Test.
Closing date extended upto May 10th.

| For Top Ten Students - Course is 100% FREE | |
|---|---|
| For Next - 30 -students | 75% Free |
| For Next - 30 -students | 50% Free |
| For Next - 30 -students | 25% Free |

A never to miss opportunity

BIOS
BIOS Computer Systems
Hi-Tech Computer Education & Consultation
No: 12, Rajapokuna Mw., Maligawattha,
(Next to Sri Lanka Islamic Centre)
TEL: 543 663, 541112

# கல்வி, கணினி தொழில்நுட்பக் கற்கை நெறி சிறப்பிதழ்

## தமிழ்த் தேடலுக்கு ஓர் ஊற்று தமிழ் இணையப் பல்கலைக்கழகம்

உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களை ஒன்றிணைத்து தமிழ்மொழியை மேம்படுத்தும் நோக்குடன் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

பெப்ரவரி 17ஆம் திகதி சென்னையில் இந்தப் பல்கலைக்கழகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உலகின் பல பாகங்களிலும் பரந்து வாழும் தமிழர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகப் பழைமை வாய்ந்த தமிழ்மொழியை அழியவிடாது பாதுகாக்கும் நோக்குடன் தமிழ் இணையப்பல்கலைக்கழகம் உருவாக்கப் பட்டுள்ளது.

தமிழ் தெரியாது அந்நிய மொழி அறிவுடன் வாழும் புலம் பெயர்ந்த தமிழர்களின் இளைய தலைமுறையினர் தமது தாய் மொழியைக் கற்றுக் கொள்ளவும், தமது பாரம்பரியங்கள், பண்பாடு மற்றும் கலாசாரங்கள் ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ளவும் இப்பல்கலைக்கழகம் பேருதவி புரிகிறது.

www.tamilvu.org என்பதே தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இணையத்தள முகவரி ஆகும்.

'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்னும் மகுட வாசகத்துடனும் இனிய இதமான இசையுடனும் இந்த இணையத்தின் தகவல் பக்கங்கள் ஆரம்பமாகின்றன.

அதனைத் தொடர்ந்து இணையப் பல்கலைக்கழகம் தொடர்பான அறிமுகங்கள், நோக்கங்கள், குறிக்கோள், பதிவுகளை மேற்கொள்ளல், பாடத்திட்டங்கள், பாடங்கள், நூலகம் போன்ற இணைப்புக்கள் காணப்படுகின்றன.

இணையப் பக்கத்தில் காணப்படும் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம் இணையப் பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவராக இணைந்துகொள்ள முடியும்.

உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் மட்டுமன்றி தமிழ் பற்றி, தமிழர் பண்பாடு, கலாசாரம் பற்றிஅறிய விரும்பும் எவரும் அவைபற்றிக் கற்பதற்கும் தகவல்களைப் பெறுவதற்கும் ஏற்றவகையில் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இங்கு கல்வித்திட்டமானது அரிச்சுவடியில் ஆரம்பித்து ஆராய்ச்சி நிலை வரை விரிந்து செல்கிறது.

தமிழ்ச் சொற்களை உச்சரிக்கும் விதத்தினை விளக்கும் மென்பொருட்களும் இப்பாடத்திட்டத்தில் இடம் பெற்று தமிழ் மொழியை ஆரம்ப நிலையிலிருந்து கற்பவர்களுக்குப் பேருதவிபுரிகின்றன.

உயர் நிலைக் கல்வியானது சான்றிதழ், டிப்ளோமா, பட்டம் (Degree) ஆகியவற்றை மாணவர்களுக்குப் பெற்றுத் தரக்கூடிய விதத்தில் உள்ளது. இப்பாடத்திட்டத்தில் பழைமை வாய்ந்த தமிழ் நூல்கள் விரிவாகவும், தெள்ளத் தெளிவாகவும் விவரிக்கப்பட்டுள்ளதுடன் அவை தொடர்பான விளக்கப் பயிற்சிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

இவை தவிர, தமிழ் ஆர்வலர்களின் தேடலுக்குத் தக்க பயன்தரத்தக்கதான நூலக வசதியும் காணப்படுகிறது. தமிழ் இலக்கிய — இலக்கண நூல்கள், அகராதிகள், தகவல் தொழில்நுட்ப கலைச் சொற்களஞ்சியம் போன்றனவும்இந்த இணைய நூலகத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

காவடி, கரகாட்டம், நாதஸ்வரம், பரத நாட்டியம், கோவில்கள், சிலைகள், கலைக் கூடங்கள் ஆகியவற்றைச் சித்திரிக் கும் புகைப்படங்களும், வீடியோக் காட்சி களும் இந்த இணைய நூலகத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

தமிழ் கற்பவர்களுக்கும், வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டு தமிழ் மொழி பற்றி அறிய விரும்புபவர்களுக்கும் ஆய்வுகளை மேற்கொள்பவர்களுக்கும் இந்த இணையப் பல்கலைக்கழகம் ஓர் அரிய பொக்கிஷமே!

—தீபன்

## குறுகிய காலத்தில் ஆங்கிலம் கற்க றெட்டினா

ஆங்கிலம் சர்வதேச மொழி. அதனைக் கற்கவேண்டிய, பேசவேண்டிய தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. பாடசாலையைவிட்டு வெளியேறுபவர்களும், சிறுவர்களும், வயது வந்தவர்களும் கூட ஆங்கிலத்தைப் பேச வேண்டியிருக்கிறது. இந்தத்தேவையை திறம்பட நிறைவேற்றுவதுடன், குறுகிய காலத்தில் அதனைச் செய்து முடிப்பதிலும் Retina Institute of Business Studies நிறுவனம் பெரும் பங்கு ஆற்றுகிறது. ஒரு மாதத்தில் பூர்த்தி செய்யக்கூடியதாகவும், மூன்று மாதங்களில்பூர்த்தி செய்யக்கூடியதாகவும் வெவ்வேறு துரித கற்கைநெறிகள் போதிக்கப்பட்டு வருகின்றன.

இங்கு கணினிக் கல்வி கச்சிதமாக முன்னெடுக்கப்படுகிறது.

மிகப் பிந்திய கஸட்களை மற்றும் சீ.டீ. பற்றிய பாடங்களை பயன்படுத்துதல், நிறுவனத்தின் நவீன கணினிக்கூடத்தில் TOEFL பாடநெறிக்கு விடையளிப்பதற்கான கருவிகளைக் கையாளும் பயிற்சியை வழங்குதல் என்பவற்றுடன் எட்டு வகையான கணினிப்பாடநெறிகள் இருப்பதையும் பணிப்பாளர்கள் பெருமையுடன் தெரிவிக்கின்றனர்.

பாடநெறிகள் நன்கு தகைமை பெற்ற அணியொன்றினால் வடிவமைக்கப் பட்டும், மதிப்பீடு செய்யப்பட்டும் புகட்டப்படுகின்றன.

அர்ப்பணிப்புமிக்க போதனாசிரியர்களால் வழிகாட்டப் படுவதும், சிறுவர்களுக்கு குழந்தை உளவியல் பயிற்சி பெற்ற போதனாசிரியர்கள் கற்பிப்பதும், சர்வதேச அங்கீகாரமுள்ள அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப் படுவதும், யாவற்றிலும் முக்கியமாக கொடுப்பனவுக்கு இலகுவான தவணைகள் வழங்கப்படுவதும் இந்நிறுவனம் தரும் சிறப்பான சலுகைகள் என்று அதன் பணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.


223

Retina Institute of Business Studies

RIBS

SPOKEN ENGLISH

for ELDERS, SCHOOL LEAVERS & KIDS

Express Stream 1 Month Only

TOEFL

Duration 3 Months

3 Months Duration
Fully Packed Preparation for
Computer Based Test

- *Use of original latest cassettes and lessons on CD's*
- *Regular Handouts based on the latest materials*
- *More enough Exercises in listening comprehension & structure*
- *Hands on training in our modern computer lab for answering TOEFL*

Computer Studies

- Kids Computing
- MS office 2000
- Web Designing
- Graphic Designing
- Diploma in Computer Studies
- Diploma in Computerized Accounting
- Visual Basic
- Diploma in Hardware Engineering

Special Features of at RIBS

Every Course is Personally Designed and evaluated by a Qualified Team, Dedicated Team of Lecturers and Instructors to Guide Students on a hand on basis, Unlimited practical Hours, Special attention for children by trained instructors (also trained in Child Psychology). Internationally recognized Certificates and Easy Terms of Payment.

Retina Institute of Business Studies
2 1/2, Edward Lane, Colombo-03, Tel : 507781,507782 Fax:507781
E-mail : study@retina.lk



சகல கற்கை நெறிகளுக்கும் 50% கட்டணத் தள்ளுபடி (இது 31.05.2001 வரையுமே!)

Diploma Courses

Diploma in MS Office · Duration 4 months
Diploma in Computer Studies - Duration 4 months
Dip.in Desk Top Publishing - Duration 4 months
DIPLOMA IN e-Commerce - Duration -4 Months
e-Com Application · e-Com Technology

Programming Languages

Java® Programming Duration -3 Months
Advanced Java® Programming Duration -3 Months
VB 6.0 Programming Duration -3 Months
Advanced VB 6.0 Programming Duration -3 months

Web Designing Duration -3 Months

CERTIFICATE COURSES

| | |
|---|---|
| Visual C++ 6.0 | Adobe Page Maker 6.5 |
| Visual Fox Pro 6.0 | Corel Draw 9.0/10 |
| Turbo C\C++ | Photo Shop 5.5 |
| Oracle 8i | Flash 5.0 |
| Accpac 6.0 | Pascal 7.0 |
| Windows NT 4.0 | Auto CAD 14 / 2000 |
| Novell | Power Builder |
| Sco Unix 5.0.a | Windows 98 / 2000 |
| Hardware Engineering | Internet & E-Mail |

Other Services
Classes
Sales
Software Developing
D.T.P
Net Working
Repairs & Maintenance
and More.....

❖ Unlimited practical Hours for Students ❖ Payments in monthly installments
❖ Individual & Group Classes Available

SDS Computer Services
36, 1st Floor Station Road, Colombo - 06. Tel : 553265 593920,

# கல்வி, கணனி தொழில்நுட்பக் கற்கை நெறி சிறப்பிதழ்

## வீட்டில் இருந்தபடியே ஆங்கிலம் கற்பதற்கு அரிய வாய்ப்பு

ஆங்கிலம் அத்தியாவசியமாக உள்ள இந்நவீன உலகில் நேரத்தை மிச்சப்படுத்தி தபால் மூலம் ஆங்கிலம் கற்கக் கூடிய அரிய வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறார்கள் DISTENT EDUCATION SERVICE நிறுவனத்தினர்.

குறுகிய காலத்துள் ஆங்கில மொழி அறிவை வளர்க்கும் இவர்களது பாடத்திட்டம் மூன்று வகையாகத் தரம் பிரிக்கப்பட்டுள்ளது.

* ஆரம்ப டிப்ளோமா – 6 மாதப் பயிற்சி (ஆங்கில அறிவு குறைந்தோருக்கு)
* டிப்ளோமா – 6 மாதகாலம் (க.பொ.த (சா.த) ஆங்கில அறிவு கொண்டோருக்கு)
* உயர் டிப்ளோமா – 8 மாத காலம் (க.பொ.த. (உ.த) ஆங்கில அறிவுக்குச் சமன்.

போதனா முறைகள் பிரிட்டிஷ் கவுன்சில் முன்னைநாள் ஆங்கில அத்தியட்சகர் பிரெட் ஓஷன்லன், யுனிசெப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பிரேமதாஸ் உடகம ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன.

இப்பாட நெறிகள் மிகவும் எளிய முறையில் மாணவர்கள் புரிந்து கொள்ளும் விதமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆங்கில அறிவைச் சரியாக பெற்றுக் கொள்ள முடியாத நாட்டின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ளவர்களுக்கும் சந்தர்ப்பமளிப்பதே இந்நிறுவனத்தின் நோக்கமாகும்.

பாடநெறியினை முழுமையாகப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு தரம் வாய்ந்த சான்றிதழ்கள் வழங்கக் கூடியதாக இருக்கும் என நிறுவனம் தெரிவிக்கிறது.

இது சம்பந்தமாக மேலும் விவரங்களை அறிய விரும்புபவர்கள் இலவசக் கைநூலுக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யும் தரத்தைக் குறிப்பிடத் தவறவேண்டாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:–

DIRECTOR OF EDUCATION (ENGLISH)
DISTENT EDUCATION SERVICE
22 D, STATION LANE, NUGEGODA
Tel : 856769

## ஐ.பி.எஸ். வழங்கும் 'பிற்' கற்கை நெறி

உயர் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத் தருவதற்கான பாட நெறிகளை வெற்றிகரமாக நடத்தி வருகிறது INSTITUTE OF PROFESSIONAL STUDIES என்ற நிறுவனம்.

* COMPUTER ARCHITECTURE AND OPERATING SYSTEMS
* DATA STRUCTURES AND ALGORITHMS
* DATA BASE MANAGEMENT SYSTEMS (DBMS)
* FUNDAMENTALS OF SOFTWARE ENGINEERING

போன்ற பாடநெறிகளை இந்த நிறுவனம் திறமை மிக்க விரிவுரையாளர்கள் மூலம் நடத்துகின்றது.

இந்நிறுவனம் மாணவர்களின் நலன் கருதி புதிய சேவையொன்றையும் தற்போது அறிமுகப்படுத்துகின்றது. கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனித் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நடத்தப்படும் பிற் – செமிஸ்ரர் – I (BIT SEMESTER - I) பரீட்சையை எழுதி முடித்துள்ள மாணவர்கள் பிற் – செமிஸ்ரர் – II (BIT SEMESTER -II)க்கான வகுப்புக்களை INSTITUTE OF PROFESSIONAL STUDIES நிறுவனத்தில் தொடரலாம்.

தகுதி வாய்ந்த அனுபவமிக்க ஆசிரியர்களினால் கற்பித்தல் செயற்பாடுகள் (விரிவுரைகள்) மேற்கொள்ளப்படுகின்றன.

பதிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கணனி ஆய்வுகூட வசதிகள் செய்து கொடுக்கப்படுவதோடு செயன்முறை வகுப்புக்களுக்கு நியாயமான நேரம் வழங்கப்படும்.

அத்துடன் மேலதிக வசதிகளாக, கற்கை நெறிக்குட்பட்ட நூல்களை இரவல் பெறும் வசதிகள், அச்சுப்பதிக்கப்பட்ட பாடக் குறிப்புகள், கட்டுரைகளைப் பெறும் வசதிகளும் வழங்கப்படுகின்றன. பாடநெறிக்கான கட்டணம் 15,000 ரூபா.

மாணவர்களின் நலன் கருதி தவணை முறையில் கட்டணம் செலுத்தும் வசதிகளும் கூட வழங்கப்படுகின்றன. ஒரே தடவை பாடநெறிக்கான முழுக் கட்டணத்தையும் செலுத்தும் மாணவர்களுக்கு கட்டணத்தில் 10% கழிவு வழங்கப்படும்.

அத்துடன் இந்நிறுவனத்தில் செமிஸ்ரர் – I பாடநெறியைப் பயின்ற மாணவர்களுக்கும் 10% கழிவு வழங்கப்படும்.

---

# Micom

*repeats its*

**Millennium Gifts**

ரூபா 2500/= மட்டுமே

எந்த ஓர் பாடநெறியையும் தெரிவு செய்யலாம்

இரு தவணை முறையில் கட்டணம் செலுத்தலாம்

- *Diploma in e-Commerce*
- *Oracle 8*
- *Microsoft Office 2000*
- *Java Language*
- *Visual Basic 6.0*
- *Computer Hardware*
- *Internet & E-mail*
- *Web Designing*
- *Desktop Publishing*
- *C++*
- *Visual C++*
- *Higher Diploma in Computer Studies*

*By: Qualified Lecturers*

**Micom**
International College of Law, Business and Computer Studies

Class Commencing on: 06/05/2001 at 9:00 am

242 3/1 Galle Road, Colombo-6, Tel:588264, E-mail:amma@sltnet.lk

---

# தொலைக் கல்விச் சேவை

## தபால் மூலம் ஆங்கிலம்

DES

வீட்டில் இருந்து கொண்டே ஆங்கிலம் பயில ஓர் அரிய வாய்ப்பு!

புதிய மாணவர் அனுமதி

**ஆங்கிலத்தில் உயர் டிப்ளோமா**
க.பொ.த.(சா.த) பரீட்சையில் ஆங்கிலத்தில் மிக உயர் சித்தி பெற்றவர்கள்
அல்லது சம ஆங்கில அறிவு உள்ளவர்கள்

**ஆங்கிலத்தில் டிப்ளோமா**
க.பொ.த.(சா.த) பரீட்சையில் ஆங்கிலத்தில் மிக உயர் சித்தி பெற்றவர்கள்
அல்லது சம ஆங்கில அறிவு உள்ளவர்கள்

**ஆரம்ப ஆங்கில டிப்ளோமா**
க.பொ.த.(சா.த) பரீட்சையில் ஆங்கிலமொழிக்குத் தோற்றவிருப்போர்
அல்லது ஆங்கில அறிவு உள்ளோர்

இது சம்பந்தமாக மேலும் அறிவு பெற
இலவசக் கைநூலுக்கு உடன் விண்ணப்பிக்கவும்

தெரிவு செய்யும் பகுதியைக் குறிப்பிடத் தவற வேண்டாம்

Director of Education (English)
**DISTENT EDUCATION SERVICE**
*22D, Station Lane, Nugegoda.*
*T.P.856769*

---

***Learn from the professionals,***

**BIT @ ICT**

THOSE WHO SAT FOR THE BIT SEMESTER - I EXAMINATION CONDUCTED BY THE INSTITUTE OF COMPUTER TECHNOLOGY (ICT) OF UNIVERSITY OF COLOMBO MAY NOW FOLLOW CLASSES FOR SEMESTER - II AT "IPS"

# BIT SEMESTER - ii

**SUBJECTS**
- Computer Architecture and Operating Systems
- Data Structures and Algoritims
- Data Base Management Systems (DBMS)
- Fundamentals of Software Engineering.

**LECTURES**
Our Lecture panel Consist of Competant, Experienced, PhD., Msc. or Bsc. Qualified Truly Professional Lecturers.

OTHER FACILITIES:
* Lab facilities the Registered BIT students May avail them selves of our Computer Lab facility for Practical for a reasonable length of time.
* Lending facilities - All recommended study texts will be made available for the students to borrow.
* Course materials Course materials will be pre-printed & given to students.

COURSE FEE:
*Rs. 15,000.00 (Payments could be made in Installments)*
*10% Discount for Full payment.*
*Further 10% Discount for Our Semester-I Students.*

IPS INSTITUTE OF PROFESSIONAL STUDIES
No. 91-2/2, Galle Road, Colombo - 04.
Telephone: 074-518429, 075-346029, 075-349097
E-mail: ips@pan.lk
*(Opposite Bambalapitiya Police Station)*
*"For a Brighter Tomorrow"*

# கால் கொடுக்கும் கருணை பணிக்குப் புதிய அமைப்பு

## வன்னியில் கால் இழந்த அனைவரும் பயன் அடைவர்



ஊனமுற்ற பெண் ஒருவருக்கு செயற்கைக் கால் ஒன்றை மன்னார் ஆயர் வழங்குகிறார்.

உலகநாடுகளில் இன்று பல லட்சம் மக்கள் ஊனமுற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களில் போரினால் ஊனமுற்றவர்களே அதிகம் பேர். நிலக்கண்ணி வெடிகளினாலும் பலர் ஊனமடைகின்றனர்.

உலகநாடுகளில்மூன்று விநாடிகளுக்குஒருவர்வீதம் நிலக்கண்ணிவெடியினால் ஊனமடைகின்றனர் என்று அமெரிக்க ஆராய்ச்சி ஒன்று தெரிவிக்கிறது.

நிலக்கண்ணிகளாலும் போரினாலும் ஊனமடைவோரின் எண்ணிக்கை இலங்கையிலும் அதிகம்.

போரினால் ஊனமுற்றவர்களுக்கென இம்மாதம் 17ஆம் திகதி மன்னார் மறை மாவட்டத்தில் ஆயர் இராயப்பு யோசப்பின் அனுசரணையுடன் "உதவிக் கரங்கள்" எனும் அமைப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

போரினால் பாதிக்கப்பட்டு கால்களை இழந்து ஊனமுற்ற வன்னிமாவட்ட அனைத்துத் தமிழ் மக்களுக்கும் செயற்கைக்கால் வழங்குவது இந்த அமைப்பின் பிரதான நோக்கம் ஆகும்.

இதுபோன்ற நடவடிக்கையில் யாழ்ப்பாணத்தில் ஜெய்ப்பூர் நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

உதவிக்கரங்கள் அமைப்பினால் வழங்கப்படும் அனைத்துச் செயற்கைக்கால்களும் அந்த அமைப்பினாலேயே உள்ளூரில் தயாரிக்கப்படுகின்றன. இதற்கென இரண்டுபேர் இந்தியாவில் பயிற்சி பெற்று வந்துள்ளானர்.

செயற்கைக்கால் செய்வதற்கான அனைத்து மூலப் பொருள்களும் கொழும்பில் இருந்தே கொண்டு வரப் படுகின்றன. இதற்கான உதவிகளை கொழும்பு றோட்டரிக் கழகம், செடேக் நிறுவனம், இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதரகம் போன்றவை வழங்கி உள்ளன.

உதவிக்கரங்கள் அமைப்பின் தலைவராக எஸ்.இ.றெயினோல்ட்டும் செயலாளராக பி.தேவநாயகமும் கடமையாற்றுகின்றனர்.

"உதவிக்கரங்கள்" திறப்பு விழாவில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசப் வாழ்வோதய இயக்குநர் அருட்தந்தை எமில், மன்னார் மாவட்ட உதவி அரச அதிபர் நீக்கிலாப்பிள்ளை மற்றும் கொழும்பு றோட்டரிக்கழக அணித்தலைவர்கள்,செடேக்நிறுவன அங்கத்தவர்கள், கனேடிய உயர்ஸ்தானிகர் உட்படப்பலரும் கலந்துகொண்டனர்.

இந்த விழாவின் போது போரினால் ஊனமுற்றவர்களுக்குச் செயற்கைக்கால் வழங்கும் வைபவமும் இடம் பெற்றது.

—ஜெ.பிறேம்குமார்.



உதவிக் கரங்கள் அமைப்பினால் மன்னாரிலே தயாரிக்கப்பட்ட செயற்கைக்கால் ஒன்றை மன்னார் ஆயர் பார்வையிடுகிறார். ஆயருக்கு அருகில் வாழ்வோதயம் இயக்குநர் அருட்தந்தை எமில் காணப்படுகிறார்.



# பருத்தித்துறையில் இப்படியும் ஒரு வீதி

பருத்தித்துறையிலிருந்து கடற்கரை வழியாக காங்கேசன்துறை செல்லும் மார்க்கத்தில் திக்கம் சந்திக்கு அண்மையில் உள்ள வீதி ஒன்றையே படத்தில் காண்கிறீர்கள்.

இந்த வீதி கடல் அரிப்பால் சேதமாகி மூன்று வருடங்களாகின்றன. ஆனால் இன்னும் திருத்தப்படவில்லை.

வீதி திருத்தப்படாதது குறித்தும் இதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் குறித்தும் எவரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை என்கின்றனர் அப்பகுதி மக்கள்.

இந்த வீதியைப் பயன்படுத்தும் வாகனங்கள் மிகவும் அவதானமாகவே செல்கின்றன. வாகனச் சாரதிகள் சிறிது கவனயீனமாக நடந்துகொண்டாலும் கூட கடலுக்குள் வாகனம் வீழ்ந்துவிடலாம்.

இந்த வீதியைத் திருத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என்று பொதுமக்கள் கேட்கிறார்கள்.

— சேகரம்


நியூ திவ்யா ஜுவலர்ஸ்
கலை நயத்துடன் தங்கம், வைரம், நவரத்தினம் பதித்த அழகிய டிசைன்களில் நகைகளை உங்கள் மனம் கவர் விதத்தில் தெரிவு செய்ய வெள்ளவத்தையில் ஒரே இடம்
NEW DHIVIYA JEWELLERS
42-C, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 508501, 505065
Specialist in 22kt. Gold Jewellery

Tex City
தலைநகரில்
புடவை, ஷல்வார் கமிஸ் விற்பனையில்
தனக்கென தனிப்பெயர் பெற்ற
பிரபல்யமான ஸ்தாபனம் !
நாகரிக புடவை உலகின்
முன்னோடிகள்
இன்றே விஜயம் செய்யுங்கள் !
ரெக்ஸ் சிட்டி
இல. 42A, காலி வீதி, வெள்ளவத்தை.
தொ.இல. 074-514332



நியூ திவ்யா ஜுவலர்ஸ்
கலை நயத்துடன் தங்கம், வைரம், நவரத்தினம் பதித்த அழகிய டிசைன்களில் நகைகளை உங்கள் மனம் கவர் விதத்தில் தெரிவு செய்ய வெள்ளவத்தையில் ஒரே இடம்
NEW DHIVIYA JEWELLERS
42-C, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 508501, 505065
Specialist in 22kt. Gold Jewellery